இந்நூல், பல பண்டிதர்களிடத்தில் அனுபவத்தில் கண்டவற்றைக் கேட்டு எழுதியதாகக் காணப்படுகிறது. இதில் விஷக்க டிகட்கும், கண்ரோகங் கட்கும், பைத்தியத்திற்கும், வெள்ளை, வெட்டை, வயிற்றுவலி, தலைவலி முதலானவற்றிற்கும், காசம், சுவாசகாசம், மேகநீர் வியாதி இவைகட்கும் வைத்திய முறைகள் கூறப்பட்டுள்ளன.

R. No. 1906

வைத்தியக் கிரந்தம்.

VAIDDIYA-K-KIRANTAM.

Paper. 8¼ × 6⅝ inches. Foll. 7. Lines, 32 on a page. Tamil. Fair. Old. Extent, 250 granthas.

Presented in 1949–50 by Sri Palanisāmi Kaundar, Puliyampatt, Palani taluk.

Complete.

Similar to the work described under R. No. 1905

(கு-பு)—

இந் நூல், மேற்கண்ட நூல் போன்றதே. இதில் புண்களுக்கு, வீக்கத் திற்கு, இருமல், க்ஷயரோகம், மேகம் முதலியவற்றிற்கு மருந்துகள் கூறப் பட்டிருக்கின்றன. ஆனால் மேற்கண்ட நூல்களில் ஒன்றில் சொன்னவையே மற்றவைகளிலு மிருந்தாலும் அவற்றின் வேறுபாடுகளைப் படித்துணர்வார் அறிந்துகொள்க.

R. No. 1907.

பெரியாழ்வார் திருமொழி.

PERIYALVAR TIRUMOLI (SVĀPADĒSA VURAI.)

Paper. 11¼ × 10 inches. Foll. 192. Lines, 20 on a page. Tamil. Good. New Extent, 5,760 granthas.

Transcribed in 1949–50 from a Manuscript of Sri Lakshminarasimha-cariyar, Siruvalur, Chingleput district.

Incomplete.

This is a commentary on Periyālvār Tirumoli. Contains many Sanskritized Words.

Beginning :

ஸ்ரீசைலேச குரவேநம :

ஜீயர் திருவடிகளே சரணம்.

பெரியாழ்வார் திருமொழி, ஸ்வாபதேசம்.

முதல் சம்புடம்.

ஸ்ரீய : பதியாய் அவாப்த ஸமஸ்த காமனாய் ஸமஸ்த கல்யாண குணாத்மகனாய், ஸர்வ ரக்ஷகனாய் இருக்கிற சர்வேஸ்வரனை ரக்ஷ்யமாக நினைத்து திருவவதார விசேஷங்கட்கு மங்களாசாசனம் பண்ணினார் திருப்பல்லாண்டிலே, "அந்தியம்போதி லரியுருவாகி யரியை யழித்தவனைப் பல்லாண்டு பாடுது" மென்றும் "இராக்கதர் வாழிலங்கை பாழாளாகப் படை பொருதானுக்குப் பல்லாண்டு கூறுது" மென்றும் ஸ்ரீ நரசிம்மப் ப்ராதுர் பாவத்துக்கும் ராமாவதாரத்துக்கும் மங்களா சாஸனம் பண்ணியிருக்கச் செய்தேயும் மாயப் பொருபடை வாணனை யாயிரந்தோளும் பொழி குருதி பாயச் சுழற்றிய வாழிவல்லானுக்குப் பல்லாண்டு கூறுதும் என்றும் . . .

. . . .

(கு-பு)—

இந்நூல், (பெரியாழ்வார் திருமொழி உபதேச வியாக்கியானம்) என்னும் பெயர்த்தாய் ஒன்று முதல் மூன்றும் பத்தின் ஏழாம் திருமொழிவரை விசேடமாக உரைவகுத்துச் செல்கிறது. உரைவிளக்கம் நன்றாக இருக்கிறது. முற்றுமில்லை. வடமொழிக் கோவைகளை இடையிடையே பெய்துரைப்பினும் படித்துணர்ந்தால் நயமாக இருக்கும்.

R. No. 1908.

சித்தராரூடம்.

SIDDHARĀRŪḌAM.

Paper. 8¼ × 13½ inches. Foll. 50. Lines, 16 on a page. Tamil. Good. New. Extent, 500 granthas.

Restored in the year 1949–50 from a manuscript described under R. No. 938.

Complete.

This is an astrological treatise in verses written by some unknown author. This is same as the work described under R. No. 938.

(கு-பு)—

இந்நூல், மூவருடக் காட்லாக்கு 938-ஆம் எண்ணில் வந்துள்ளதையே பிரதிசெய்விக்கப் பெற்றுள்ளது. முற்றுமுளது. செய்யுள் வடிவானது. அதன் குறிப்பையுங்காண்க.

R. No. 1909.

ரகஸ்யத்ரயஸாரம்.
RAHASYATRAYASĀRAM.

Palm leaf. 17½ × 1½ inches. Foll. 224. Lines, 8 on a page. Tamil and grantha Injured. Old. Extent, 5,380 granthas.

Presented in 1949-50 by Sri Tātam Aiyangār, B.A., 199, East Uttara Street, Srirangam.

Complete.

This is same as that described under D. No. 2262.

(கு-பு)—

இந்நூல், டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு, 2262 ஆம் எண்ணின் கீழ் வந்துள்ளதே. முற்றுமுள்ளது. பழுதுபட்டுளது. தமிழும் வடமொழியும் கலந்து எழுதப்பட்டது. அதன் குறிப்பையுங்காண்க.

R. No. 1910 to 1912 (one codex).

Paper. 11⅛ × 9⅝ inches. Foll. 84. Lines, 20 on a page. Tamil and granthas. Good. New. Extent, 1,800 granthas.

R. No. 1910.

அனந்தாழ்வான் ரகசியம்.
ANANTĀLVĀN RAHASYAM.

Foll. 1—9 (a). Extent, 170 granthas. Foll. 9 (b)—11 left blank. The other work herein is Tirumuḍikkuṟai Rahasyam.

Transcribed in 1949-50 from a manuscript of Sri. K. Rangasami Aiyangar, Siruvalūr, Chingleput district.

Complete.

This is a work belonging to Vaiṣnavite cult by some unknown author. The last fol contain yet another work on Vaiṣṇavism called " Tirumuḍikkuṟai Rahasyam."

Beginning :

பட்டர் திருவடிகளிலே ஆசிரயித்து பகவத் பாகவதாசார்ய ப்ரேமையுக்தராய் சதாசார்ய பரராயிருப்பார் ஒரு ஸ்ரீ வைஷ்ணவர், தம்முடைய வாசாரியரான பட்டர் திருவடிகளிலே சென்று ஸ்ரீ வைஷ்ணவலட்சண மிருக்கும்படி யெங்ஙனேயென்று கேட்க, பட்டரும் திருமலே அனந்தாழ்வான் சந்நிதியிலே சென்று கேட்டு கேட்டு வாருமென்று அந்த ஸ்ரீ வைஷ்ணவ(ரு) [ரை] யனுபபியருள அவரும் திருமலேயேறிப்போய் அனந்தாழ்வானேச் சேவித்து இச் செய்தியை விண்ணப்பஞ்செய்தார்.

அனந்தாழ்வானும் அருளிச்செய்கிறோமென்று ஆறு மாதம் கண்ணழித்து அவர் திருமாளிகையிலே ஸந்ததம் கைங்கரியங்களைப் பண்ணிக் கொண்டு ஆறுமாத மெழுந்தருளியிருந்தார்.

* * * *

End :

உம்மைப்போலிருக்கும் :—இதுக்குப் பட்டர் அந்த ஸ்ரீ வைஷ்ணவனும் நீர்செய்தபடி என்னென்று கேட்க அந்த ஸ்ரீவைஷ்ணவரும் அனந்தாழ்வான் ஸந்நிதியிலே செய்த விருத்தாந்தத்தை விண்ணப்பஞ் செய்ய, பட்டரும் மிகவும் திருவுள்ள முகந்தருளி ஸ்ரீ வைஷ்ணவனுனவன் மகா பாகவதர் திருமாளிகையிலே தான் தீர்த்த பிரசாத ஸ்வீகாரார்த்தமாகப்போன சமயத்திலே அவர்களுகந்து....திலே சிறிதும் நெஞ்சழியாமல் அதி பிரீதியுடனே ஸ்வீகரித்துப் போகுவானென்று பட்டர் எல்லார்க்கு மறியலாம் படி யருளிச் செய்தார்.

* * * *

(திருமுடிக்குறை ரகசியம்)

Beginning :

நம்பிள்ளை யொருநாள் திருமுடிக்குறைக் கெழுந்தருளினவளவிலே தம்முடைய ஸ்ரீபாதத்தில் அந்தரங்கரான முதலிகளைப்பார்த்து "பிள்ளைகாள்! உங்களுக்குப் பெருமாளைச் சேவிக்க வேண்டாவோ வென்ன" தேவரீர் ஸ்ரீ பாதமே தேவரீரை யொழிந்து தனித்துப் பெருமாளைச் சேவிக்க ஸ்நேக மில்லை. தேவரீருக்குகந்த விஷயமென்று பெருமாளைச் சேவிப்பதோ மென்று விண்ணப்பஞ்செய்ய தம்முடைய ஸ்ரீ பாதத்தைத் தொட்டு ஆணை யிடுவித்துக் கொண்டு அங்கீகரித்தருளின வார்த்தைகளை யருளிச் செய்தருளினர்.

* * * *

End :

பின்பு எழுந்தருளிக்கச் சொன்ன ப்ரகாரத்தையும் தாமெழுந்தருளி இருந்த ப்ரகாரத்தையும் நிர்ஹேதுகமாக வருளிச்செய்து சாக்ஷாத்கரிப்பித் தருளினர்.

(கு-பு)—

இந்நூல், 'அனந்தாழ்வான் ரகசியம்' என்னும் பெயர் பெற்று வைணவ மதத்தைச் சார்ந்து வந்த நூலாகும். இந்நூலின் இறுதியில் "திருமுடிக்குறை ரகசியம்" என்ற ஓர் சிறு நூலும் முழுவதும் உடையதாக உள்ளது. இவ்விரண்டுமே திருமாலின் திருக்கல்யாண குணங்களை எடுத்தியம்புவதாக உள்ளது. இவை கிரந்தங்கலந்த தமிழ் நடையாலானது. ஆதலின் இதில் இரண்டு முதலிறுதிகள் எழுதப்பட்டுள்ளன.

R. No. 1911.

திருப்பள்ளியெழுச்சி வியாக்கியானம்.

TIRUPAḶḶIYEḺUCCI VIYĀKKIYĀNAM.

Foll. 11—24. Extent, 460 granthas.

Transcribed in 1949-50 from a manuscript of Sri K. Rangaswami Aiyangar, Siruvalur, Chingleput district.

Complete.

This is an Commentary written by some unknown author on the Tiruppaḷḷiyeḻucci in the Divya Prabandham.

Beginning :

இவ்வாழ்வாரானிருர் முதலிலே ஸ்வரூப புருஷார்த்த விவேக சூன்யராய் தேகத்திலே ஆத்ம புத்தியைப்பண்ணி ததனுபந்திகளான சப்தாதி விஷயங்களிலே மண்டி தம்மோடு சேர்ந்தாரையும் தத்ஸ்வபாவராக்கிப் போகாநிற்க மாதரார் கயல்கண் என்னும் வலையுள்பட் டழுந்துவேனைப் போகுமேயென்று சொல்லி புந்தியில் புகுந்து தனபாலர தாம் பெருக வைத்த வழகனூரென்கிறபடியே.

*　*　*　*　*

End :

அடியேனை அளியனென்றருளி மிகவும் நமக்கு சினுக்தன் நென்று கிருபை பண்ணியருளி அசேஷ விருத்தியினுடைய எல்லையிலே நிறுத்தி தேவரீர் அடியேனுக்காக திருப்பள்ளியுணர்ந்தருளி யடிமை கொண்டருள வேணுமென்கிறுர்.

(கு-பு)—

இந்நூல், திவ்வியப் பிரபந்தத்தில் உள்ள திருப்பள்ளியெழுச்சிக்கு ஓர் சிறப்பான புதிய விளக்கமான விரிவுரையாகும். முற்றுமுள.

R. No. 1912.

பிரபன்ன கிர்த்தியம்

PRAPANNA KṚTYAM.

Foll. 25 (a) —60. Extent, 1170 granthas.

Incomplete.

This is an incomplete work of an anonymous author. This describes the various ways of adoring and meditating on Lord Viṣṇu.

Beginning :

ஜீயர் திருவடிகளே சரணம்

ஸகல வேதாந்த ரஹஸ்ய ப்ரவர்த்தகாசார்ய ஸார்வபௌம ஜன்ம பூமியாய் வேதநா வேதக ஶேஷியாய், ஸாவத்ய விஷயாந்த ராஸக்தாசார வேஷதாரியாய், ஸ்வஸ்தா ஶ்ரஹீத விஶேஷ விக்ரஹ யோகியாய் த்ரிவித சேதந ப்ரதந்த்ர ஊஜ்ஜீவியாய்

*　*　*　*　*　*

End :

அப்படியே சேஷத்துவபாரதந்திரியங்களையுடைத்தான சேதனனே பகவத்யோக்யன் அன்றிக்கேயொழிந்தால் த்யாச்ய னென்று நம்மாசார்யர்கள் அருளிச் செய்யும்படி "22" ஆக பிரபன்னஜனசிந்தாமணி யென்கிற இத்தில் சரீராவசானத்தில் ஜீவன் உத்க்ரமிக்கும்படியும் உத்க்ரமித்து ஸூம-ம் நாரகாக்ஷு நஹவம்பண்ணி சுகமிரேஷ.

(கு-பு)—

இந்நூல், வைணவ மதத்தைத் தழுவியதாய், திருமால் மீது பக்தி சிரத்தையோடிருப்பவர்கள், திருமாலை வணங்குமுறை, தோத்தரிக்கும் முறை ஆகியவைகளை வருணிக்கிறது. முழுதுமில்லை. இது, சிறுவலூர் K. இரங்கசாமி ஐயங்கார், என்பவரிடமிருந்த மூலப் பிரதியிலிருந்து 1949-ஆம் ஆண்டில் எடுத்து எழுதிவைக்கப்பட்ட பிரதியாகும்.

R. No. 1913—1915 (one codex).

Paper. 11¼ × 9⅞ inches. Foll. 51. Lines, 20 on a page. Tamil. Good. New. Extent, 960 granthas.

Transcribed from the manuscript of Sri C. Krishnamurthi Mudaliar Mirasdar, North car street, Sīyāḻi in the year 1949–50.

R. No. 1913.

அட்டப் பிரமாணம்.

ATTAPPIRAMĀṆAM.

Foll. 1—7. Extent, 140 granthas.
Complete.

This is a logical treatise written by some unknown author. This explains the different pramāṇas with beautiful similes.

Beginning :

உற்றெதிரே காண்டல பிரத்தியட்ச மனுமான மோங்கு புகைக்கண்டு நெருப்புண்டு எனவே யுணர்ந்தன, மற்றுவமை மரை பசுப்போலெனல். சத்தம் பெரியோர் வாய்ச்சொல ருத்தாபத்தி மததகுவுடல் கனுலற்றை யுபவாசி . . . .

End :

பிரம்ம சொரூபமாகிய உன்னைத் தவிர வேறல்லவென் றனுக்கிரகம் பண்ணப் அந்தப் படிக்குச் சீடன் சருவாற்ம சொரூபமாகிய பிரம சொரூபநதானென்றறிந்ததுவே. சம்பவப் பிரமாணம் பிரமாண மெட்டாய் நவிலும. எ.து. இந்தப்படிக்கு அட்டப்பிரமாணத்திலு மாற்மாவை யறியுமாறு வேதங்கூறிய தென்றவாறு. அஷ்டப் பிரமாணம் முற்றுப் பெற்றது.

(கு-பு)—

இந்நூல், அட்டப்பிரமாணமென்னும் பெயர்த்து. பிரத்தியட்சப் பிரமாணம் முதலாக சம்பவப், பிரமாணம் ஈறாக அட்டப்பிரமாணங்கட்கும் விளக்கங்களும் உவமைகளும் கூறிச் செல்கிறது. முற்றுமுளது. எழுத்துப் பிழைகள் உள.

R. No. 1914.

காமாதி விவரணம்.

KĀMĀDI VIVARAṆAM.

Foll. 8 (*a*)—16. Foll. 17 is left blank. Extent, 160 granthas.

Complete. Not print.

This briefly deals with the psychology of love. Author is not known. This is probably a translation in Tamil of the Sanskrit original.

Beginning :

காமம்—காமத்துக்கு எது......தென்றால் அக்கியானம் சொரூபமே தென்றால்......அக்கினியில் நெய்விட்டால் விற (ரு) த்தியடையிறது போல நமக்கிருக்கின்ற போகமெல்லாம் உத்தரோத்தரமாய் விற்தியடைய வேணு மென்றும் நமக்கிருக்கின்ற அயிஸ்ப(ஐஸ்வ)ரிய மெல்லா மாருமலிருக்க வேணுமென்று நாலுவிதமாய்ச் சித்தரித்திருக்கிறது.

End :

பலமேதென்றால் வாதனைக்ஷயத்தினால் சுத்தமாய் சுபாவமாய் சுகமாயிருக்கின்ற பிரம சொரூபமே நான். நானே சுத்தமாய் சுபாவமாய் சுகமாயிருக்கிற பிரம சொரூபமென்கிற தத்துவக்கியான லட்சையாயதனால் செனனமரண சமுசார துன்பம் நீங்கி பிரமானந்த மனுபவிக்கப்படும்.

சற்குரு நாதன் துணை.

(கு-பு)—

இந்நூல், காமாதி விவரணம் என்னும் பெயர்த்து. இது மனோதத்துவங்களை விளக்கிச் செல்கிறது. சுருக்கமாக உளது. முற்றுப் பெற்றது. வடமொழியின் தமிழ் மொழிபெயர்ப்பெனத் தோற்றுகிறது. அச்சிடப் பெறவில்லை.

R. No. 1915.

பிரமகீதை அவதாரிகை.

PIRAMAGĪTAI AVATĀRIKAI.

Foll. 18—51. Extent, 660 granthas.

Incomplete.

This is a philosophical treatise by some unknown author.

Beginning :

(க) கணபதி வணக்கம் .. .. (ங) சுப்பிரமணிய வணக்கம் (ச குரு வணக்கம் .. .. (க) மனந்தேகம் வாதி விகிளைன்மன்றியினிதில் நிறைவேறும்படியாகவும் இந்நூல் பாரம்பரையாய் விளங்கும்படியாகவு மிதை அனுஷ்டித்தோர்க்கே காக்கிற சித்தமுண்டாகிப் பிரமானந்தம் வரும்படிக்கு இந்நூற் கந்தரங்க தாற்பரியமான சொரூபத்தை, அஷ்ட மூர்த்தமாயுஞ், சலக்ஷண விலக்ஷணமாயுஞ் சுகத சொரூபமாயுந் துதிக் கின்றார். (உ) பரம குருவைத் துதி செய்தல் (ங) தனதாசாரியரைத் துதி செய்தல் (ச) இந்நூல் செய்த வாசாரியரைத் தனது சீடர்கள் துதி செய்தல்.

End :

(யக) எப்படிப்பட்டவன் குருவாவான் எனில்—வாவான்—முமுச்சுவான அவன் இக் குருவுக்குச் செய்யத்தக்கது யாது அப்படிச் செய்ததினாலே பிரயோசனம் யாதெனில்...........

(கு-பு)—

இந்நூல், பிரம்மகீதை அவதாரிகை என்னும் பெயர்த்து. பிரம கீதையிலுள்ள அத்தியாயங்களில் சொல்லப்பட்ட கருத்துக்களைப் பிண்ட ரூபமாகத் தனித்தனியே கூறிச் செல்கிறது. எழுத்துப் பிழைகள் உள. முற்றுப்பெறவில்லை.

R. No. 1916.

அகராதி.

AKARĀDI.

Paper. 9¾ × 10 inches. Foll. 1—103. Lines, 20 on a page. Tamil. Good. New. Extent, 1,288 granthas.

Transcribed in 1949-50 from a manuscript of Sri K. Rangaswāmi Aiyangar, Siruvalūr, Chingleput district.

Complete.

This is a Tamil Dictionary written by some unknown author. This contains many errors in spelling.

Beginning :

அகராதி

அட்டாலே—மேல் தளமும், துர்க்குண வாசனையும்
அண்டம்—வழக்கு, சட்டமும், ஆகாயமும், பூமியும்
அவலம்—நிர்மானுஷ்டையாயிருக்கையும். தேகவீடையும்
அளகைக்கோன்—குபேரன்
அர[க்]காம்பல்—செவ்வாம்பல்
அலவன்—ஆண்நண்டு
அகடு—கீழ்வயிறு, முகடு
அக்கறவு—ஓரக்கம்

End :

நோடி—சொல்லுகை
நோக்குகை—ரக்ஷிக்கை
நோன்மை—வலி
நோன்பு—ஸாதனம், பூர்வஜென்ம சுகிருதம்
நொடிக்கை—அடிக்கிற சங்கேதம்
நோலாது—சாதனானுஷ்டானம் பண்ணாதே
நோற்ற—கோர்க்க
நோம்பியர்—ஆஹதர்

(கு-பு)—

இந்நூல், தமிழ் அகராதி என்னும் பெயர்த்து. முற்றுமுளது. சிற்சில எழுத்துப் பிழைகள் உள.

R. Nos. 1917–1919 (one codex).

Paper. 11¼ × 9¾ **inches. Foll.** 1—75. **Lines,** 20 **on a page. Tamil. Good. New. Extent,** 1,380 **granthas.**

Trsnscribed from the manuscript of Sri. C. Krishnamurthi Mudaliar, Mirasdar, Śiyāḻi in 1949–50.

R No. 1917.

பகவத்கீதை அவதாரிகை.

BHAGAVAD GĪTAI (Avatārikai.)

Foll. 1—19. Foll. 20 and 21 are left blank. Extent, 380 granthas Complete.

This is a philosophical treatise. Author is not known.

Beginning :

பகவத்கீதை அவதாரிகை
பாயிரம்

(க) நிர்விக்கினமாய் நிறைவேறும் பொருட்டு நூலாசிரியர் விக்கினேசுவரனைத் துதித்தல். (குவன்) இதைச் சொல்லுகிற தென்னத்துக்கெனில்,

(2) நூலாசிரியர் அவதரித்த நகரமும் நாடும் கூறல்.

(உ) மனவிக்கினம், தேக விக்கினம், தவாதி விக்கினம், அன்னியில் இந்நூ லினிதில் நிறைவேறும் பொருட்டும் இதைப் படிப்போா கேட்போர்கட்கு ஏகாக்கிரசித்தமுண்டாய் ஞானம் வரும்பொருட்டும் ஏற்புடைக் கடவுளைத் திரிவித காரணத்தினாலே வணங்கத் தொடங்கி இக்கவியில் மூர்த்தமாயும் வாக்கினால் துதித்தல்.

End :

பதினேழாவது, சிரத்தா, நிரைய விபாக போக வத்தியாயம்; பதினெட்டாவது சகல சாஸ்திர பரமார்த்த தத்துவ நிர்ணய யோகவத்தியாயம்; ஆக அத்தியாயம் பதினெட்டுக்குச் சுலோகம் சாளகய

(கு-பு)—

இந்நூல், (பகவத்கீதை அவதாரிகை) என்னும் பெயர்த்து. முற்று முளது. சிற்சில இடங்களில் இடம் விடப்பட்டுள்ளது. இது சீகாழியிலுள்ள மிராசுதார் திரு. C. கிருஷ்ணமூர்த்தி முதலியார் என்பாரிடமிருந்த பிரதியி லிருந்து பிரதி செய்யப்பட்டிருக்கிறது.

R. No. 1918.

ஆண்டவர் பாடல்கள்.

ĀṆḌAVAR PĀḌALKAḶ.

Foll. 22—61. Foll. 62, 63 are left blank. Extent, 780 granthas.

Complete.

This contains many stanzas in adoration of gods and goddesses. It also describes the ways and means of attaining salvation. Author is not known.

Beginning :

சிவமயம்

கழனி வாசக வென்னுஞ் சிவஸ்தலத்தி லெழுந்தருளியிருந்த முத்து இராமலிங்க தேசிகர் திருவாய் மலர்ந்தருளிய பல கொடை விளக்கக் கவிகள்.—

கணபதி வணக்கம்

(நேரிசை வெண்பா)

தோலா னனமுந் துணைப்பசுவு மைங்கரமு
நாலாம் புயமருப்பு நாடியே—மேலோர்கள்
கள்ளமறப் போற்றுங் கணபதியை நன்மனமே
உள்ளநிலை யுரைக்க வுன்னு.

(கட்டளைக் கலித்துறை)

சத்தேயென் சித்தொளி யாய்விளக்குஞ் சதாசிவமே
பத்தேபி றந்து பிறநதே யிந்நாள் வரைப்பட்ட துன்பக்
கொத்தே யகற்றுங் குருவே பிறக்குங் குண குணிக்கும்
வித்தே கழனிச் சிதம்பர மென்னும் விநாயகனே.

End :

மூலப்பகுதி குடிந்து முடியாதுபெறுஞ்
சீலப் பரமசுகஞ் சேர்வ தென்றோ வஞ்சுகமே.
சித்தமிருந்தாள் சிவமிருக்குந் தேகியுள்
அத்தன்மை யின்றிஅவ னுவதென்றோ வஞ்சுகமே
அத்தி பாதிப்பிரிய வாதிவெளி யாயிருந்தால்
சுத்தமிலாச் சீவபாத மெங்கே யஞ்சுகமே.

இளிப்பத்து முற்றிற்று.

ஆகச் சந்த விருத்தம் உள்பட பதிகம் யக, திருவிருத்தம் கூளக.

(கு-பு)—

இந்நூலில் திருநெல்லையம்மன் வணக்கம், கோப்புடையான் வணக்கம், விஷ்ணு வணக்கம், சொரூப வணக்கம், அருளிறை வணக்கம், குலகுரு வணக்கம், முத்தி நிச்சயம், தெய்வ நிச்சயம், மனத்திற் கறிவுறுத்தல், பொதுவாகக் கூறியது, புத்திக் கறிவுறுத்தியது, நெஞ்சோடிரங்கல், தெய்வத்தை விளித்தது, இளிப்பத்து, சந்த விருத்தம் முதலியவைகள் அமைந்துள்ளன. பாட்டின் போக்கு மிக நன்றாக உள்ளது. ஓலையைப் பார்த்து எழுதியவரால் பல எழுத்துப் பிழைகள் மலிந்துள்ளன. முற்றுமுள.

R. No. 1919.

சிவதருமோத்திரம்.

SIVADHARUMŌTTIRAM.

Foll. 64—75. Extent, 220 granthas.

Incomplete.

This contains only the eighth Chapter of the work called "Śivadharu mōttiram" described under D. No. 1287.

Beginning :

பாதாளக் குழியி னுசம் பாவிகள் படிவந் தானும்
ஈதவத் தடையு மேன்மை விண்ணவ ருடவந் தானும்
பூதலம் பொருந்து மற்றை யுயிர்பொறை தானும் பொற்றை
மாதவ வுதிக்கு மாறு வகையுற வறைகு வாமே. (1)

அருந்துயர்க் குழியி னுழ்வா ராகமே பாவத் தபகும்
பொருந்திய பூதத் தாலே இமைத்திடும் போது தன்னுள்
புரிந்துவின் புகுவா ராகம் புண்ணியத் தாலே யாகும்
பொருந்திய பூத சாரத் தொருகணப் பொழுது தன்னில். (2)

End :

மருவியுற்றனை நீயே நீயலை மருவி விற்றது மாதா
வாருயிரிருள் வருத்தனை நீயே நீயலையென வெனக்கிய லீவானே
யவன் மாவமுற்றிய வாசார காரகினமலிய நற்றவ மாடே
நீடிய வருவரைப் பயிலானு மாதவனருள் அகத்தியனு ராகுமே.
(101)

எட்டாவது ஜெனனமரணவியல் முற்றும்.

(கு-பு)—

இந்நூல், சிவதருமோத்திரம் என்னும் நூலின் பன்னிரண்டு இயல்களில் எட்டாது இயலாகிய ஜெனனமரண வியல் ஒன்றினுடைய மூலமட்டிலும் கூறிச் செல்கிறது. டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1287-ஆம் எண்ணினிட்டு உள்ள இதே பெயருடைய நூலில் முற்றும் உரையுடன் உளது. அச்சிடப் பட்டுள்ளது.

R. No. 1920.

பாஷ்ய இருதயம்.
BHĀṢYA IRUDAYAM.

Paper. 11¼ × 10 inches. Foll. 1—222. Lines, 20 on a page. Tamil. Good New. Extent, 3,330 granthas.

Transcribed in 1949-50 from a manuscript of Sri C. Krishnamurthi Mudaliar Mirasdar, North Car street, Sīyāḻi.

Complete.

This is a very good commentary of the Bhāṣya. Author is Brahmañāna Vēṅkaṭēśvara svāmigaḷ.

Beginning :

முதலாவது சிஷ்யப் பிரகரணம் கணபதியை நமஸ்கரித்து, சுப்பிரமணியரை நமஸ்கரித்து, பார்வதீ பரமேஸ்வரனை நமஸ்கரித்து . . . சொல்லுகிறேம்.

பிரம்ம ஞானியான, வனப்பிரம்ம மாகத்தானே யிருப்பவருமான மகா ஞானியானவன் சகல சோகங்களேயுங் கடந்து பிரமானந்தரூபமாகத் தானே யிருப்பவனே இப்படிப்பட்ட மோட்சத்தில் பிரம்ம ஞானந்தான் சாதனம். வேறு சாதனமுமில்லே. பிரம்ம சுகத்துக்கு லட்சணமெது? சச்சிதானந்தமே லட்சணம்.

End :

பிரம்மமே நித்தியம். பிரம்மோஹம் சுலோகத்திற்கு அர்த்தம்.

குரு பரம்பரை நரநாராயணர், பிரம்மபூ, வஸிஷ்டர், சக்தி, பராசம், வியாசர், ஜனகர், கௌடபாதர், கோவிந்தயோகி, ஆசார்யசுவாமி, பத்மபாதர், ஹஸ்தகமலர், தோடக ஆசாரி, வார்த்திகாசாரியர்கள்.

(கு-பு)—

இந்நூல், பாஷ்ய இருதயம் என்னும் பெயர்த்தாய் பாஷ்யத்தில் கூறப்பட்ட ஒவ்வொரு பிரகரணத்துக்கும் விளக்கங்கள்கூறி விரிவுரையுடன் அமைந்துளது. இது ஆசார்யசுவாமிகள் திருவுளம்பற்றிய இக்கிரந்தத்தைத், தாம்பரவேணி தீர்த்தத்தில் எழுந்தருளியிருக்கும் பிரம்மஞான வேங்கடேசுவர ஸ்வாமிகள் (பாஷ்ய இருதயம்) என்ற பெயரால் இயற்றியருளினர். பதினெட்டாவது ஸந்நியாஸப் பிரகரணம் முடிய முற்றுமுளது. நூல் நன்றுகவுளது.

R. Nos. 1921 to 1925 (one codex).

Paper. 9¾ × 11¼ inches. Foll. 1—96. Lines, 20 on a page. Tamil. Good. New. Extent, 1,395 granthas.

Transcribed in 1949–50 from a manuscript of Sri. C Krishnamurthi Mudaliar, Mīrasdar, North Car street, Sīyāḻi.

R. No. 1921.

உபநிடத மூலமும் உரையும்.
UPANIDATA MŪLAMUM URAIYUM.

Foll. 1—22. Foll· 23 is left blank, Extent, 330 granthas· Complete.

This is a philosopical treatise by some unknown author. From the last verse it is gathered that one Saubhāgya guru wrote the commentary in 32 verses, on the upaniṣads of the great Vyāsa,

Beginning :

ஸ்ரீ சத்குருப்யோ நம :

மெய்யுடைய வடியார்மேல் விருப்புண்டாண்....கருப்பூர....மே.. [போலெண

பொய்யுடைய வருள்போதப் பொருளுடைய....ருளுடையவன் [....றிமைத்தாலு

மையுடைய மனத்தாலும் மயக்குடையார் மதங்களைத்
தாமதங்களாக்கும்....
கையுடைய முகமுடையா னக முடையான்றனைக்
கருத்தில் செய்வாம்.

(இ-ள்).—சத்தியத்தையுடைய - அடியார்மேல் விருப்பத்தையுடையவன் கருப்பூரதீபம்போல் - எனது பொய்யுடைந்தபோ....அருளிய போதமாகிய பொருளுடையவன். அருளையுடையவன் - பஞ்சேந்திரியங்களாலும் - இருளை யுடைய மனத்தாலும் - மயக்குடையவர்......

End :

தம்குருவைப் புகழ்தல்.

இருளகற்று நால்வேதத் துபநிடத மெண்ணுன்கி
னெங்கோன் சொன்ன
பொருளதனை நெஞ்சகத்தே சௌபாக்கிய குருவென்றும்
பொருளி னோடு
மருளகற் றும்படிய......த்தமிழ்போலு மதனையொரு
வழியெண் ணுன்கா
யருளகத்தி லிருந்துரைத்த வதிசயமே யதிசயமற்
றறிகி லேனே.

(இ-ள்)—

அஞ்ஞானத்தை நிவிர்த்தி பண்ணுகிற நாலுவேதங்களையுடைய முப்பத்திரண்டு உபநிடதத்துக்களிலெடுத்து எங்கள் ஸ்வாமியாகிய வியாச மகாமுனி திருவாய்மலர்ந்தருளிய பொருளினைச் சௌபாக்கிய குருவென் னும் பொருளினோடும் அடியேனுடைய இருதயத்தின் மருட்சி யகலும்படி அழுத்தித் தமிழென்று சொல்லப்பட்ட பாஷையி லப்பொருளை ஒருவழியாய் முப்பத்திரண்டு செய்யுளாக அருளானது உள்ளத்திலிருந்து சொல்லித் தமிழ் அதிசயமே அதிசயமல்லாமல் மற்றோ ரதிசயமறியேன் எ - று.

உபநிடதவுரை முற்றிற்று.

(கு-பு) —

இந்நூல், வேதாந்த நூல் வகையைச் சார்ந்ததாய் உபநிடதம் என்னும் பெயர்த்தாய் உரையும் கூறிச் செல்கிறது. இந் நூலின் இறுதிப் பாடலால் வியாச மகாமுனி நாலு வேதங்களுடைய முப்பத்திரண்டு உபநிடதங்களின் பொருளினைச் சௌபாக்கிய குருவென்பவர் முப்பத்திரண்டு செய்யுளாக இயற்றியருளினார் என்று தெரிகிறது. முற்றுமுளது. ஆங்காங்கே சிதிலமாகிப் புள்ளிகள் வைக்கப்பட்டுள்ளன. பிழையுமுளது.

R. No. 1922.

ஞான அனுட்டானம்.

ÑĀNA ANUṬṬĀNAM.

Foll. 24—28. Fol. 29 is left blank. Extent, 60 granthas.

Complete.

This describes the daily ritess and observances that a person is ordained to perform. The author is not known.

Beginning :

சத்தினியாத முதிர்ச்சியினாலே ஞானாசாரியனை யடைந்து ஞானதீட்சை யைப் பெற்றுச் சிவாகமமும் சிவானுபூதியுமுடைய ஞானவான்களே ஞான மார்க்கம் அனுட்டிக்கக் கடவர். உதயத்துக்கு ஐந்து நாழிகை யென்ன வெழுந்திருந்து கூடின சுத்தி செய்து சென்ற காலந் தோன்றாத சிவானு போகத்தில் அழுந்தியிருந்து பிரிந்ததற்குத் தேகசுத்தி, தந்தசுத்தி முதலான கிரியாவிதிப்படி செய்து சலத்தைப் பரமார்த்த சாகரமா யெண்ணி நித்திய முத்தராகிய சிவனைத் தியானித்து ஸ்நானம் பண்ணி முடித்து அனுட்டானம் பண்ணும்படி சர்வ கிருத்தியத்துக்கும் சாக்ஷி பூதராகிய சிவனைத் தியானித்து. . .

* * * *

End :

சிவனுக்குப் பராமுக அர்க்கியங் கொடுத்துச் சென்ற காலந் தோன்றாமல் நின்ற சிவானுபோகத்தைப் பெற்று......ட்டகக் கோயிலில் எழுந்தருளப் பண்ணி, வீமருத்திரருக்கு புட்பஞ்சாத்தி, மடிப்பில் புரோட்சித்துத் தன்குருவை உண்மை நிலையாக ஆசனமூர்த்தி மூலத்தால் அர்ச்சித்து பாத்தியாசமனம் அர்க்கியங் கொடுத்து, திருவடி விளக்கி, கந்தபுட்பங்களால் அலங்கரித்து நைவேத்தியாசமனம் தூபதீபங் கொடுத்துச் செபித்துச் சாத்தவும்.

முற்றிற்று.

(கு-பு)—

இந்நூல், நித்யானுஷ்டானம் என்னும் பெயர்த்தாய் நித்தியப்படி காலை எழுந்தது முதல் செய்யவேண்டிய அனுஷ்டானங்களைச் சுருக்கி விளக்கிச் சொல்லுகிறது. முற்றுமுளது.

R. No. 1923.

பரமானந்த தீபம்.

PARAMĀNANDA DĪPAM.

Foll. 30—45. Extent, 225 granthas.

Complete.

Contains many verses in adoration of the Divine Being. Author is not known. This work has been already published. But the present work has 21 stanzas in extra.

Beginning :

பரமானந்த தீபம்.

அஞ்செழுத்தி னுருவாகி யறிவுமாகி
யாதிநடு வீறாகி யனாதியாகிச்
செஞ்சடையிற் கொன்றைமல ரணிந்தோனாகித்
தேனாகிப் பாலாகிச் செகமேழாகி
மஞ்சுலவுங் குழலுமையோர் பாகனாகி
மகிழ்ச்சியுட னெனையாண்ட குருவுமாகி
வஞ்சமறத் தொழுமடியா ருளத்தின்மேவும்
வள்ளல்தனைப் புகழ்ந்தேத்தி வணங்குவாமே. (க)

End :

சீர்பெருகுந் தீர்த்தபுரி நந்திகேசன்
றிருக்கோயி னதிக்கடுத்தக் கீழ்பாலாகப்
பார்பெருகு மாதவத்தைப் புரிந்துமேவும்
பரிவுடைய வனுகூல முனிவனெங்கோ
னோர்பெருகுந் தமிழ்ப்பரமா னந்ததீப
மென்றுரைத்த விந்நூலின் பயனுணர்ந்தோர்
பேர்பெருகும் அஞ்ஞானக் கடலைநீந்திப்
பேசரிய மெய்ஞ்ஞானம் பெறுவர்தாமே. (73)

முற்றிற்று.

(கு-பு)—

இந்நூல், "பரமானந்த தீபம்" என்னும் பெயர்த்து. எழுபத்துமூன்று பாடல்களுள. கடவுளைப் பற்றிய துதிப்பாடல்களடங்கியது. பாடல்கள் நன்றாக சுவைநயம்பட வுள. அச்சிடப்பட்டுளது. அச்சிடப்பட்டதற்கும் இதற்கும் வேறுபாடுகளும் இதில் அதனைவிட அதிகமாக 21 பாடல்களும் உள.

R. No. 1924.

நவக்கிரக கக்கிஷம்.

NAVAGRAHA KAKKIṢAM.

Foll. 46—77. Extent, 540 granthas.

Complete :—

This is a work on black magic by the famous sage Agastiya. The last 12 foll contain the index of the contents and also many Cakras. This will be very useful for those who are engaged in that profession.

Beginning :

நவக்கிரக கக்கிஷம்.

அகத்திய சுவாமிகள் அருளியது.

குபேரன் முன்னிற்க.

ஆதார பூஜை.

" (இந்து) ரவிதழலா யெட்டா வெளியொளியா
யந்தரங்க மானவரும் பொருளாய்—வந்தருகா
திக்கு விசையஞ் செலுத்து நவக்கிரகக்
கக்கிஷத்துக் குன்னிருதாள் காப்பு." (1)

பூசையிலே யதிகமென்ன மானத மாம்பூசை
புண்ணியரே செய்வார் கன்மத்தோர் செய்யார்
பேசையிலே மனமே பூரணத்தி னிற்கும்
பிரபஞ்சத் தோடிருப்பா ரறியப் போகாப்
பாசையிலே சாத்திரத்தின் பொருளைச் சொன்னார்
பத்திமுத்தி வைராகிய மாகச் செய்வார்
ஓசைபிறந் திடம்பாரு வொளியைப் பாரு
வொன்றுமில்லா வெறும்பாழைப் பூசை பண்ணே. (3)

End :

கண்டுபார் வேதியர்க்கும் பரதேசிக்கும்
கற்றறிந்த பெரியோர்க்குங் கற்புமாதர்க்குந்
தொண்டுசெய்யு மடியவர்க்கும் புவியாள்வோர்க்கும்
துன்மார்க்கத் தொழில்செய்ய நினைந்திடாதே
பண்டுசொன்ன குருமொழியை மறந்திடாதே
பாமாற்றுமாவாய் வீணாய்ப் பகர்ந்திடாதே
விண்டுசொன்ன நவக்கிரகக் கக்கிஷத்தை
மெய்யென்றால் மெய்மயிலும் வேலும் முற்றே. (95)

முற்றும்.

(கு-பு)—

இந்நூல், " நவக்கிரகக் கக்கிஷம் " என்னும் பெயர்த்து. இது பல வசிய மந்திரங்களையும் சக்கரத் தியானங்களையும் கூறுகிறது. அகத்தியர் இயற்றிய தாக வுள்ளது. இறுதியில் 12 ஏடுகளில் அட்டவணையும், சக்கரங்களும் விளக்க வுரைகளும் கூறப்பட்டுள்ளன. மந்திர தந்திரம் செய்வோர்க்கு இது மிகவும் பயன்படலாம். முற்றுமுளது.

R. No. 1925.

மகாராசா துறவு.
MAHĀRĀJĀ TUṞAVU.

Foll. 78—96. Extent, 240 granthas.

Complete.

This is a portion of "Vēdānta Śāstraratnāvaḷi" published by Kāśikānanda svāmigaḷ. This is written by Kumāradēva svāmigaḷ. The present work contains some verses that are not found in the published text.

Beginning :

பாயிரம்.

அமரர்கள் பரவுந் திருமுது குன்றி
    லாழத்துப் பிள்ளையைச் சிகரிக்
குமரசற் குருவை யிமகிரி ராஜ
    குமாரியாம் பெரியநா யகியை
முமலமு மொருங்கே யகற்றிடு முக்கண்
    முதல்வனைச் சார்ந்தநா யகனை
நமதெனப் படியே முடிந்திடத் தினமு
    நாடிநின் றிறைஞ்சிவாழ்த் திடுவாம். (1)

மறைமுடி வதனில் விளங்கிடு மொளியே
    மனிதரைப் போலவந் தெனது
சிறைதவிர்த் தாண்ட சிவப்பிரகாச
    தேசிகன் றன்னைமற் றவரை
மரைமல ரடியைப் போற்றிடுஞ் சாந்த
    நாயகன் றன்னை மற்றவரை
நிறையருள் பெற்ற பழனிமா முனியை
    நெஞ்சினு ளிருத்தியே பணிவாம். (2)

திங்களொண் கவிகைத் திகிரியந் திணிதோட்
    டிகழ்கடற் றனைமா ராச
னங்கண்மா நிலத்திற் றுறந்துவீ ட்டைந்தவ
    ரியலிக் காதையைத் தமிழா
லிங்குமா தவத்தோ ரிசையுமென் றிசைப்ப
    விசைத்தனன் வீடுறக் கேட்டோர்
கொங்கவிழ் பொழில்சூழ்ப் பழமலை யுறையுங்
    குமாரதே வென்னுமா முனியே. (3)

சிவன்றிரு வடிவா மைந்து சின்மய வெழுத்தும் வாழி
நவந்தரு நீரும் வாழி நயனநன் மணியும் வாழி
கவின்தருங் குமார தேவன் கழலிணை யிரண்டும் வாழி
    யவன்றிரு வடியார் தம்மோ டாருயி பனைத்தும் வாழி.
பாயிரம் முற்றுப்பெற்றது.

நூல்.

தருக்கிளர் நைமிசா ரணியத்திற்
றங்கிய முனிவர்கள் சூதன்
வரப்பணிந் தேத்திக் கதைகள்பற் பலவா
வகுத்துரைத் தனைமகா ராசன்
றிருக்கதை யெங்கட் குரைத்திலை யதுநீ
செப்பெனச் சுருதியிற் சொல்லுஞ்
சுருக்கமில் காதை யிதுவெனத் தொகுத்துத்
தோமறக் கேண்மினென் றுரைக்கும். (1)

End :

அரியது துறவற மல்ல தில்லையான்
மருவிய துறவற மொருவி மன்னனும்
உருகெழு முடிகவித் துலக மாள்வது
பெருவிலை மணியினைப் பிண்டிக் கீதலே

முற்றிற்று.

(கு.பு)—

இந்நூல் 'மகாராசா துறவு' என்னும் பெயர்த்து. இது, குமாரதேவ சுவாமிகளியற்றியது. ஸ்ரீ கோயிலூர் காசிவாசி—ஸ்ரீ காசிகாநந்தஸ்வாமி களால் தொகுத்துச் சேர்த்துப் பதிப்பிக்கப்பட்ட வேதாந்த சாஸ்திர ரத்னவளி என்ற நூலில் உள்ள ஒரு பகுதியாகும். முற்றுமுளது. அச்சிடப்பெற்ற நூலில் இல்லாத பாயிரப்பாட்டுக்கள் மூன்று இதி லுள்ளன.

R. Nos. 1926 to 1929 (one codex).

Paper. 9¾ × 11¼ inches. Foll. 1—90. Lines, 20 on a page. Tamil. Good. New. Extent, 1,283 granthas.

Transcribed in 1949–50 from a manuscript of Sri Krishnamurthi Mudaliar, North Car Street, Sīyāli.

R. No. 1926.

ஞானவாசிட்டத் தலைப்புகள்.
ÑĀNAVĀŚIṬṬA-T- TALAIPPUGAL.

Foll. 1—33. Foll. 34 and 35 are left blank. Extent, 413 granthās. Complete.

This is an index to the verses of the Ñānavāśiṭṭam, arranged alphabetically. Author is not known.

(கு-பு)—

இந்நூல், ஞானவாசிட்டம் என்ற நூலிலுள்ள ஒவ்வொரு பாட்டின் முதலடியின் தலைப்புக்களை மாத்திரம் அட்டவணை போலக் கூறிச் செல்கிறது. முற்றுமுளது.

R. No 1927.

ஞானவாசிட்டத் திரட்டுத் தலைப்புகள்.

ÑĀNAVĀSIṬṬAT TIRAṬṬU-T- TALAIPPUGAḶ.

Foll. 36—47. Extent, 125 granthas.

Complete.

This work also gives the first word of the important stanzas of the Ñānavāsiṭṭam. These are not arranged alphabetically.

(கு-பு)—

இந்நூல், ஞானவாசிட்டத்திலுள்ள சில முக்கிய பாடல் தொகுதிக்குப் பாட்டின் முதலடியின் தலைப்பை அகரவரிசையில்லாமல் அட்டவணைபோல அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் பக்கம் குறிப்பிடப்படவில்லை. முற்றுமுளது.

R. No. 1928.

மணவாள மாமுனி நூற்றந்தாதி.

MAṆAVĀḶA MĀMUNI NŪṚṚANTĀDI.

Foll. 48—63. Extent, 225 granthas.

Complete.

This work describes the merits and greatness of Maṇavāḷamāmuni.

Beginning :

நீர்வானை நல்கு மணவாள மாமுனி நின்மலன்மேற்
பாருந் தமிழ்ச் சொன் னூற்றந் தாதி பகர்ந்திடென்னை
நாவாழ் திறம்புகழ்ந் தேத்துவ னுன்னையென் னன்னெஞ்சுள்
தேவா வெழுந்திரு வேங்கட நாதமெய்த் தேசிகனே. [வாழ் (க)

செங்கே தகைகமழ் சீரார வாமங்கைத் தெய்வமுனி
பங்கே ருகமலர்ப் பொற்பாதம் போற்றிப் பணிநதடியே
னங்கே ளெனுமெய் மணவாள மாமுனி நாமததிறு
லிங்கே யினிய தமிழ்நூற் றந்தாதி யியம்புவனே. (உ)

சீர்கொண்டு நாளுந் துதிநெஞ்ச மேநந் திருமகள்சொன்
ளுர்கொண்ட தண்டுளா வச்சா ளுமகிழ்த் தாமனடிப்
பேர்கொண்ட வண்ணலி ராமா னுசமுனி டெய்கழிரு
ளுர்கொண்ட சிந்தை மணவாள மாமுனி யொண்புகழே. (3)

End :

வே........ரு........ளம்மணவாள மாமுனி வித்தகனைக்
காதற் பெருக்குடன் யாமுட் கொண்டோமது கண்டுவிரைந்
தோதற்கரிய வொண் பாற்கடல்போல்வளர்ந் தோங்கிவந்தே
..............திடும்படி செய்தெம்மை மற்றவன் சீர்
[கொண்டதே. (180)

ஒண்சீல னெந்தை மணவாள மாமுனி யுத்தமனுந்
தண்சீத மாமதி யினக்கதி ராய்த்தழைத் தெங்கணுமண்
வி...த தரன்று மார்க்கும்பைங் கூழ்கள் விளைத்திடுநல்
வண்கீர வாமங்கை மாமுனி வாழியெவ் வைகலுமே. (112)

வாழி முற்றும்.

(கு-பு)—

இந்நூல், மணவாளமாமுனிகளின் அருமை பெருமைகளை எடுத்துரைக்கின்றது. முற்றுமுளது. பிழைகளுள.

R. No. 1929.

சடகோபரந்தாதி (உரையுடன்).
ŚAṬHAKŌPARANTĀDI (with commentary).

Foll. 64—90. Extent, 520.

Incomplete.

An elegant commentary to 24 verses on the Śaṭhakōparantādi. This work has been already published without commentary.

Beginning :

சடகோப ரந்தாதி மூலமும் உரையும்.

தேவிற் சிறந்த திருமாற்குத் தக்க தெய்வக் கவிஞன்
பாவிற் சிறந்த திருவாய் மொழிபகர் பண்டிதனே
நாவிற் சிறந்தவம் மாறற்குத் தக்கநன் னுவலன்
பூவிற் சிறந்த வாழ்வான் கம்பநாட்டுப் புலமையனே.

இதன் பொருள் :

தேவில்—பிரம்மருத்திரேந்திர தேவர்களிலே
சிறந்த—விலக்ஷணனு
திருமாற்கு—ஸ்ரீயப்பதிக்கு
தக்க—தகுந்த

தெய்வம்—தெய்வங்களிற் சிறந்தமைதோன்ற
கவிஞன்—கவிபாடவல்லபுலவன்
பாவில்—எல்லாப்பாடல்களிலும்.
சிறந்த—விசேஷமான.
திருவாய்மொழி—திருவாய்மொழியை
பகர்—பாடியருளின
பண்டிதனே—நிபுணரான ஆழ்வாரே யல்லது வேறில்லை
நாவில்—அப்படிப் பாடவல்ல நாவினுலே
சிறந்த—உயர்வுகொண்ட
அம்மாரற்கு—அந்தச் சடகோபற்கு
தக்க—தகுந்த
நன்னுவலன்—நல்ல வித்துவான்
பூவில்—இந்த உலகத்திலே
சிறந்தவாழ்வரன்—இராம குணனுபவமாகிய விலக்ஷண சம்பத்தை யுடையவரான
கம்பநாட்டுப் புலமையனே—கம்பநாட்டு ஆழ்வாரென்னும் வித்துவானே யல்லது வேறில்லை.

திருமாலைப் பாடவல்லவர் சடகோபரே; சடகோபரைப் பாடவல்லவர் கம்பநாட்டாழ்வாரேயென்பது கருத்து. (1)

(கு-பு)—

இந்நூலில், சடகோபரந்தாதி என்ற நூலில் உள்ள 24 பாட்டுக்கட்கு மட்டும் உரைஉளது. மற்றுமிதனைப் பிரதி செய்தோரால் பல பிழைகளும் ஏற்பட்டுள்ளன. முழுவதுமில்லை. புள்ளிகள் ஆங்காங்கே அதிகமாக இடப் பட்டுள்ளன. இந்நூலின் மூலம் அச்சிடப்பட்டுள்ளது. உரை இருக்கும் பாகம் வரைக்கும் மிக நன்ருக எளிய நடையில் சிறப்பாக எழுதப்பட்டுளது. முழுவதும் கிடைக்காதது நமது துரதிர்ஷ்டவசமெனக் கொள்ள வேண்டும்.

R. No. 1930.

மூன்று சாதகங்கள்.
MŪNṞU JĀTAKAṄKAḶ.

Palm leaf. 16 × 1 inches. Foll. 1—83. Lines 6 on a page. Tamil. Injured. Old. Extent, 2,950 granthas.

Presented by Sri P. G. Sundaresa Sastriyar, Principal of National College, Trichy, in 1949–50.

Complete.

This is an astrological treatise written by an anonymous author. It is like the Saptariṣi nāḍi and it foretells the fortune and misfortune of Male, female and Ali that is neither male nor female.

Beginning :

இரண்டினில் இந்து கேதும் சேயும் மேஷம் பற்ற
வரும்துலே மன்ன னிற்க வரும்கன்னி சனியும் மேவ
அரவுமே தேளி [ல் நிற்க] ஆதித்தன் புதனுஞ் சுக்கிரன். (1)
மருவிட வில்லில் தானே மகிபாலன் துலையாம் லெக்கினம்
இந்தவர் கிரகங்கள் மேவ யிசைக்கிறேம்..........ண் தாமும்
சிந்தையாம் தேவி நோக்கால் செப்பிலன் சிற்று ருற்றுன்
நிந்தையில் ஈசன் முகுந்தன ளோர்ந்ததாம் அவ்வா ரூரில்
வந்ததாம் கீழ்மேல் வீதி வரும்இல்லம் தெற்கு நோக்கம். (2)
இருபாலும் வீடு முண்டு எதிரிலும் இல்லம் சேரும்
வருமில்லம் சொந்த......லாம் வருவதாம் துணைவற்கும் பாகம்
ஆறுமே கணேசன் வடகீழ் அய்யனும் பிடாரி பெண்ணும்
மருவிடும் தென்மேல் சாயல் மலிபுண்ணியப் பாடம் தெற்காம் (3)

(கு-பு)—

இந்நூல், மூன்று சாதகங்கள் என்னும் பெயர்த்தாய் சப்தரிஷி நாடி போன்று ஒவ்வோர் ஜாதகங்களைக் கூறி அந்த ஜாதகப்படி பொருந்தியிருப்போர்கட்குப் பலன்களும் கூறுகிறது. நத்தைகள் நீர்நிலைகளின் ஓரங்களில் கால்களால் கீறியிருப்பதுபோல் எழுத்துக்கள் உள்ளதால் அவைகளைச் சரிவரக் காண இயலவில்லை. பெண் சாதகம், ஆண் சாதகம், அலி சாதகம் முதலிய மூன்றுமுள்ள காரணத்தால் இப்பெயர் பெற்றது போலும். சிதிலமாயுளது.

R. No. 1931.

அசுவமேத யாகம் (வசனம்).

AŚUVAMĒDHA YĀGAM (Prose).

Palm leaf. 19 × 1¼ inches. Foll. 1—153. Lines, 8 on a page. Tamil. Injured. Old. Extent, 3,672 granthas.

Purchased in 1949-50, from Sri Duraisami, Sentamangalam P.O., Namakkal taluk, Salem district.

Incomplete.

This is an incomplete work describing the performances of the Aśvamēda sacrifice by Dharmaputra. After the war of Kurukṣētra the Aśvamēdha was performed. The author is not known.

Beginning :

செனமே செய மகரிஷயானவர் செனமே செய ராசாவைப் பார்த்துப் பதினெட்டாம் நாள் பாரத யுத்தமும் சொல்லி, பிற்பாடு கேளும் ராசாவே! என்று சரா சந்தாதி அசுவமேத யாகத்தின் கதை சொல்லும்படி.

சுபமஸ்த்து, ஸ்ரீமன்—மகாமண்டலேஸ்வரன், அகண்ட மண்டலாதிபன்,

ராச்சியபாரம் நடத்திக் கொண்டிருக்கையில் தர்மரானவர் இலேசத்தை யடைந்து . . . . தம்பிகள் ஐந்நூற்றொரு பேரையும் வதை செய்தோமே. ஆகையினாலே நமக்கு நாலு பேரொழிய பின்னுதவி யில்லாமல் போச்சுதே. இந்தக் கருமத்தை ஏன் ஏத்துக்கொண்டோம். இந்தக் குலபாதகத்தை எபபடித் தொலைக்கப் போறோமென்று தர்மரானவர் இலேசத்தையடைந்து மனந்தளர்ந்து வியாகுலப்படுகையில்

* * * * *

End :

அர்ச்சுனன் வில்லை வளைத்துப் பல்லைக் கடித்துப் பாண சரங்களையும் அஸ்திரத்தையும் பிரயோகம் பண்ண பெருலீலையானவள் அத்தனை அஸ்திரங்களையும் ம(ரு) [று] த்து ந(ரு) [று] க்கி யெறிவதைப் பார்த்தான். அருச்சுனன் கால வயிரவன் போலே சீறித் தேரிலே யிருக்கப்பட்ட கெதைகள் . . . . சிங்காணிவில், கவண்டி இப்படிக்கொத்த முப்பத்திரண்டு ஆயுதங்களையும் எடுத்துத் தொடுத்துப் பெருலீலை பேரிலே வீசி யெறிநதான். அந்த ஆயுதங்களைப் பெருலீலையானவள் . தனுவணையிலே சாய்ந்தபடியே கையிலே பிடித்த வில்லைக் குதையை திருப்பித் தட்டி விட்டாள். அந்த முப்பத்திரண்டு ஆயுதங்களும் பெருலீலையினுடைய தேவரின் கீழே மலைபோலே........

முற்றுமில்லை.

(கு-பு)—

இந்நூல், பாரதத்தில் பதினெட்டு நாட்போரும் முடிந்தபின் தருமர் முடி சூடி ஆட்சி செலுத்துகையில் போரில் ஏற்பட்ட பாபங்கள் தொலைய அசுவமேதயாகம் செய்வதைப்பற்றிக் கூறுவதாகும். முதல் தொடங்கி ஆறுவது கதையில் மதனதேசத்து மணிநகரப் பட்டிணத்தைப் பெருலீலை என்ற பெண் ஆட்சியில் அவள் குதிரையைத் தடுத்தாள். அவளுடன் அர்ச்சுனன் தலைமையில் போர் நடந்தது என்ற வரை உளது. முடிவு தெரியவில்லை. பழுதுபட்டுள்ளது. எல்லோருக்கும் புரியும் வகையில் தகுந்தவாறு வசனநடையிலாகியுள்ளது.

R. No. 1932.

மதுரைவீரன் கதை அம்மானை.

MADURAIVĪRAN KATHAI AMMĀNAI.

Palm leaf. 16 × 1 inches. Foll. 1—97. Lines, 6 on a page. Tamil. Injured. Old. Extent, 1,152 granthas.

Purchased from Sri Duraisami, Sēndamangalam P.O., Nāmakkal taluk, Salem district.

Incomplete.

This is an incomplete historical work. In the form of Ammānai, this deals with the Madurai Vīran during the reign of the famous Tirumalai Nāyakar. This is same as the work described under D. No. 2179.

(கு-பு)—

இந்நூல், சரித்திர சம்பந்தமான, மதுரையம்பதியாண்ட திருமலை நாயக்கர் காலத்திலுள்ள "மதுரை வீரையன்" என்பானது வரலாறாகும். அம்மானைப் பிரபந்தமாசப் பாடப்பட்டுள்ளது. எழுத்துப் பிழைகள் அதிக மாகவுள்ளன. இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2179-ஆம் எண்ணில் வருணிக்கப்பட்டிருக்கின்ற நூலை யொத்ததாகும். முற்றுப்பெற்றதாகத் தெரியவில்லை. பழுதுபட்டுள்ளது.

R. No. 1933.

கம்பராமாயண சங்கோத்தர விருத்தி
KAMBARĀMĀYAṆA SAṄKŌTTARA VIRUTTI.

Palm leaf. 16 × ⅜ inches. Foll. 1—50. Lines, 4 on a page. Tamil. Fair. Old. Ex.e , 125 granthas. Printed.

Purchased in 1949–50 from Sri Duraisami, Sendamangalam P.O., Namakkal taluk, Salem district.

Complete.

This is written by Śivañānamunivar. This is same as the work described under D. No. 524.

(கு பு)—

இந்நூல், சிவஞானமுனிவரால் இயற்றப்பட்டது. முழுதுமுள்ளது. இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 524-ஆம் எண்ணில் வந்துள்ளதேயாகும். அதன் குறிப்பையுங் காண்க.

R. No. 1934.

மணவாளநாராயண சதகம்
MAṆAVĀḶA NĀRĀYAṆA ŚATAKAM.

Palm leaf. 15¼ × ⅜ inches. Foll. 1—35. Lines, 4 on a page. Tamil. Injured. Old. Extent, 210 granthas. Printed.

Purchased in 1949–50 from Sri Duraisamy, Sendamangalam P.O., Namakkal taluk, Salem district.

Incomplete.

This is same as that described under R. No. 767.

(கு-பு)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 767-ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப் பட்டுள்ள நூல் போன்றது. முற்றுமில்லை. அதனை குறிப்பையும் காண்க. அச்சாகியுள்ளது.

R. No. 1935.

இஸ்லாமிய மந்திரங்கள்
ISLĀMIYA MANTIRAṄKAḶ.

Palm leaf 16 × ⅞ inches. Foll. 1—23. Lines, 4 on a page. Tamil. Injured. Old. Extent, 176 granthas.

Purchased in 1949-50 from C. Duraiswāmi, Sendamangalam P.O., Namakkal taluk, Salem district.

Incomplete.

This contains Urdu hymns in Tamil script that are sung by the Mahamudans on every Friday. Author is not known.

Beginning :

வெள்ளிக்கிழமை சும்மா விபரம் நிய்யத்து :—
உசல்லி சாலாத்து ஆதல் சும்மா
ஒனுவு நாபிலி உறக்காய
தறைதயினி லில்லிஹி அல்லாகு அக்குபரு
உசல்லி சாலாத்து ஆதல் சும்மாஜீது
நாபிலி உறக்காயத்தை யினிலில்லாஹி
அல்லாகு அக்குபரு.
உசல்லி சாலாத்து ஆதல்
சும்மா சுன்னத்துச் ஆருபகா
றக்காயத்தை யினி லில்லாஹி
அல்லாகு அக்குபரு.

* * * * * * *

End :

பன்சுருணு அல்லலைக் கவுமில காபிரின அலாயன்ன அவுலியா அல்லா யிலாகவுபுன் ஒலாகும்—பியேகு சுனூன பிஹக்கி சுபஹான றம்பிக்கறம் புலகிஷ சத்தி அம்மாயே சீபுன் ஒசலாமுன் அல்லமுரு சலீஹுவுல் ஹமது லில்லாஹிறம் பில் அயல்.

(கு-பு)—

இந்நூல், முகமதியர் வெள்ளிக்கிழமை தினம் சும்மா தொழுகையின் போது அவர்கள் கடவுளின் பேரில் பாடும் பலவித தோத்திரப பாட்டுக்கள் அடங்கியது. தமிழ் எழுத்து வடிவில் உருதுமொழிப் பாட்டுக்களாலாகியது. எழுத்துப் பிழைகள் மொழி மாற்றத்தினுல் இருக்கும் போலும். முடிவு பெற்றதாகத் தெரியவில்லை. இது சிறிய செய்யுட்டிரட்டாகக் கொள்ளலாம். பழுது பட்டுள்ளது.

R. No. 1936.

கௌளிக் காதல்
GAUḶIK KĀTHAL.

Palm leaf. 15½ × 1 inches. Foll. 1—12. Lines, 4 on a page. Tamil. Much injured. Old. Extent, 12 granthas.

Purchased in 1949-50 from Sri Duraisami, Sendamangalam P.O., Namakkal taluk, Salem district.

Incomplete.

Though the title is Gaulikkāthal, that topic is dealt with in only one folio. The remaining folios contain many Kīrthanas. The work is incomplete. Author is not known.

(கு-பு)—

இந்நூல், "கௌளிக் காதல்" என்றிருப்பினும் இப்பெயர் ஒரு ஏட்டில் மட்டும் குறிப்பிடப்பட்டு மற்ற ஏடுகளில் பலதிறப்பட்ட தனிப்பாடல்கள் அடங்கியுள்ளன. அவை கீர்த்தனை போலுள்ளன, சிதைந்துள்ளன. முற்றுயில்லை. பிழையுள.

R. No. 1937.

பதினோராம் நிகண்டு.
PATINŌRĀM NIGHAṆṬU.

Palm leaf. 15½ × 1 inches. Foll. 1—15. Lines, 5 on a page. Tamil. Much injured. Old. Extent, 25 granthas. Printed.

Purchased in 1949–50 from Sri Duraisami, Sendamangalam P.O., Namakkal taluk, Salem district.

Complete.

This is an etymological treatise written by some unknown author. This contains the 11th collection of a series of words in Cūḍāmaṇi Nighaṇṭu.

(கு-பு)—

இந்நூல், "சூளாமணி நிகண்டு" என்ற நூலில் பதினோராம் தொகுதியைச் சார்ந்தது. இதில் யகர வெதுகை மட்டும் முற்றுமுளது. மிகப் பழுதுபட்டுளது.

R. No. 1938.

வேணங்காட்டு நங்கை வரலாறு.
VĒNAṄKĀṬṬU NAṄGAI VARALĀṚU.

Palm leaf. 15½ × 1 inches. Foll. 1—6. Lines, 5 on a page. Tamil. Old. Extent, 45 granthas.

Purchased in 1949–50 from Sri Duraisami, Sendamangalam P.O., Namakkal taluk, Salem district.

This is a collection of songs sung in ancient folk dances and hence is very colloquial. The work is incomplete.

Beginning :

(விருத்தம்)

அன்னம்போல் நடைநடந்து
ஆடையா பரணம் பூண்டு
மின்னிடை துவள நல்ல
மெல்லிய லாலாத்தி யேந்த
கன்னிமார் கவரி வீச
கனரதி அடப்பங் கட்ட
மீனலும் (மகிதலம்) புகழ் வெண்காட்டு நங்கை
வருகின் றுளே,

End :

என்ன செய்வேன் ஈசனுரே—இப்போ
என்னிடும்பு நோகுதையோ—ஈசனுரே
எந்தன் புத்தி தடுமாடுதய்யோ—ஈசனுரே.
கண்ணிரண்டு வருகுதய்யோ—ஈசனுரே
குறுகா தன்னடி சேராறுதய்யோ—ஈசனுரே
மயக்கமாய் வருகுதய்யோ—ஈசனுரே
கெற்பம் மார்பிலேறி பிறளுதய்யோ—ஈசனுரே
சகிக்கவுமுடியாதையோ—ஈசனுரே
நான்சாமி யென்ன செய்வேன்—ஈசனுரே.

(கு-பு)—

இந்நூல், நாடகசம்பந்தமான பழங்காலத்திய தெருக்கூத்து வகைகளில் பாடப்படும் ஒருவகை பாட்டுக்கள் சேர்ந்த நூலாகும். கொச்சைத் தமிழிலுலாயது. சிறிய நூல். பிழையுள. பழுதுபட்டுளது. முற்றுமிலை யெனத் தோற்றுகிறது. இவை, தொகுதி நூலிலிருந்து சிதைந்த ஏடுகள் எனத் தோற்றுகின்றன.

R. Nos. 1939 and 1940 (one codex).

Paper $15\frac{1}{2} \times 1\frac{1}{4}$ **inches. Foll. 1—46. Lines, 5, 6 on a page. Tamil. Injured. Old. Extent, 8:8 granthas.**

Purchased from Sri Duraisami, Sendamangalam P.O., Namakkal taluk, Salem district.

R. No. 1939.

கதைத் திரட்டு.

KATHAI-T- TIRAṬṬU.

Foll. 1—37. Extent, 666 granthas.

Incomplete.

This contains a collection of humorous stories on Tenālirāman, in the court of the famous Kṛṣṇadēvarāya. The collection seems to be incomplete since it contains only one story in the 2nd chapter of the work by name Appāji Kathaikaḷ.

Beginning :

சோழ மண்டலத்தில் சோழ மகாராஜா நாளிலே மனுநீர்த்த நியாயாதிபதியாகிய வசிய னென்கிற சோழிய வேளாளன் மரியாதைராமவுடையான் என்பவன் தீர்த்த தீர்ப்புக் கதைகளும், தொண்டை மண்டலத்தில் இராய வேலூரிலே வசிய னென்கிற துளுவ வேளாள ராயர்களில் கிருஷ்ண மகா தேவராயர்களிலே மந்திரியாக விருந்த நியோகி பார்ப்பான் அப்பாச்சியின் யுக்திக் கதைகளும், அந்தக் காலத்தில் தானே விகடகவியாயிருந்த நியோகிப் பார்ப்பான் தெனலி ராமலிங்கய்யன் ஆகியக் கதைகளும், கோமட்டிகள் உபாயக் கதைகளும், நாலு விதமாகிய வேடிக்கைக் கதைகளும், ஒரு கதையின் சாரமெல்லாம் ஒரு வாக்கியத்திற் காட்டும்

வாக்கியக் கதைகளும், மூடர்களின் புத்தி விபரீதக் கதைகளும், யுக்தி வார்த்தைகளும், மந்திரங்களும், மல உவாங்கியங்களும், விடுகதைகளும், மடத்தில் புத்தங்களிலும் உள்ள வேடிக்கைக் கதைகளையும் பதிப்பிக்கப் பட்டது. பிலவங்க வருஷம் மார்கழி மாதம் ருஉ-யின் விலை ரூ. ௩.

மரியாதைராமன் கதைகள்.

முதலாவது திருடர்கள் நால்வரும் ஒருவன் மற்றவரை மோசஞ் செய்து நாலுபேர் திருடர் ஒரு பட்டிணத்திலே ஒரு கிழவியின் வீட்டில் இறங்கித் தாங்கள் திருடிப் பொதுவில் வைத்திருத்த உடைமைகளையும் ஒரு தவலையிலே போட்டு மேலே முத்திரையிட்டு . . .

(கு-பு)—

இந்நூல், "கதைத்திரட்டு" என்னும் பெயர்த்தாய் மரியாதைராமன் கதை (முதல் அத்தியாயம்—கதைகள் 21) முற்றிலும் முடிந்து, இரண்டாம் அத்தியாயம், "கதா சிந்தாமணி, இராயர்—அப்பாஜி கதைகள்" என்ற தலைப்பின் கீழ் "முதலாவது–அப்பாஜி முதன் மந்திரி பட்டங் கொடுத்தது" என்று தொடங்கப் பெற்றிருக்கிறது. ஆகவே முற்றிலும் கதைத்திரட்டு முடியவில்லை. பிழைகள் உள்ளன. பழுதுபட்டுளது. அச்சிடப்பட்டிருக்க லாம் எனக் கருதப்படுகின்றது.

R. No. 1940.

கதம்பச் சுவடி.

KADAMBA-C- CUVAḌI.

Foll. 38—46. Extent, 142 granthas.

Incomplete.

This is an incomplete collection of verses on varied topics. This contains only 12 stanzas.

Beginning :

சந்திரனு மீசன் சடையிலொளித் தான்வாணி
வந்தயனு வில்பகுந்தாள் வாணருக்குத்—தந்தை
சிலைப்பிடித்த வில்விசையன் செல்லப்ப வேந்தன்
கலைகொடுத்த வயணமதனைக் கண்டு.
வாய்த்த வயிரபுர மாகளி யம்மைகேள்
ஆய்த்ததொரு அய்யர் வயல்தனில்—காய்த்த
கதிரைமா ளத்தின்ற காலிங்க ராயர்
குதிரைமா ளக்கொண்டு போ.

* * * * *

தாதாறும் பூங்கடம்ப தாராளான் சண்முகவேள்
வேதாவை முன்சிறையில் மேவவைத்தோன்—தீதரனோர்
தனங்கணெதிர் வாராத சாமிபதம் போற்றில்
வனங்கொடிய கூத்துவரு மா.

* * * * *

End :

சற்புகழை யேவிளங்கத் தாரணியில் வந்துதித்த
கற்பகஞ்சேர் செல்லப்பகுடை கர்ணனுக்கு—நற்புடைய
மானதத் தாவென்று மாறாத சோடசவ
தானிவரந் தந்தருள நிதம்.

(கு-பு)—

இந்நூல், பலதிறப் பாடல்களைக்கொண்டதால் " கதம்பச்சுவடி " என்று யிற்று. பன்னிரண்டு பாட்டுக்களே யுள்ளன. முற்றுமில்லை. இறுதியில் பல ஏடுகள் வெற்றேடுகளாக வுள்ளன. சிதிலமாயது. பிழையுள.

R. No. 1941.

நீதிச் செய்யுட்கள் உரையுடன்.

NĪTI-C-CEYYUṬKAḶ (with commentary).

Palm leaf. 15¼ × 1 inches. Foll. 1—4. Lines, 4, 5 on a page. Tamil. Injured. Old. Extent, 32 granthas. Printed.

Purchased in 1949-50 from Sri Duraisami, Sendamangalam P.O., Namakkal taluk, Salem district.

Incomplete.

This is printed by name Nīti veṇbā. There is a commentary of five verses in it. The commentary is written in a simple manner.

(கு-பு)—

இந்நூல் " நீதிவெண்பா " என்னும் பெயர்த்தாய் அச்சிடப்பட்டிருக்கிறது. அதில் 5 பாட்டுக்கட்கு மட்டும் உரையுளது. உரைவளம் நயமானது. முற்றுமில்லை. பழுதுபட்டுளது.

R. No. 1942.

சிட்டுக்குருவி ராமாயணம் (வசனம்).

CITTUKKURUVI RĀMĀYAṆAM (Vacanam).

Palm leaf. 16¼ × 1⅛ inches. Foll. 1—39. Lines, 6 on a page. Tamil. Injured. Old. Extent, 585 granthas

Purchased in 1949-50 from Sri Duraisami, Sendamangalam P.O., Namakkal taluk, Salem district.

Complete.

This work in colloquial Tamil, describes how a small bird got an offspring and how the Lord of the ocean carried it away. Author is not known.

Beginning :

நாடிய பொருள்கை கூடும் ஞானமும் புகழும் உண்டாம்
வீடியல் வெளிய தாக்கும் வேரியங் கமலை நோக்கு
நீடிய வரக்கர் சேனை நீறுபட் டெரிய வாகை
சூடிய சிலையி ராமன் தோள்வலி கூறு வோற்கே.

ஸ்ரீலஸ்ரீ மகா மண்டலேசுபரரான சராசர புத்திராச பரமேசுபரான ஸ்ரீலஸ்ரீ வீரபோச ராசாவையன் வரிகள் வீரசிங்காசனத்திலே கொலுவாக இருக்கிற வேளையிலே ஐம்பத்தாறு தேசத்து ராசாக்களும் வந்து புடை சூழ்ந்து கொண்டு கொலுவாக இருக்கிற வேளையிலே தருமக் காதைகள், சாத்திரங் கள், சிவபுராணங்கள், நன்னூல் காவியங்கள் . . .

* * * * * * *

சிட்டுக்குருவி நெடுநாளாய்ப் பிள்ளையில்லாமல் மலடாக இருந்தது. கண்ட கண்ட கோவிலுக்குக் காணிக்கைகொடுத்துக் காணாத கோவிலுக்குக் கையெடுத்துக் கும்பிட்டுத் தவசு பண்ணி . . . . .

End :

சிட்டுக்குருவியைப் பார்த்து நீ மகா புத்திசாலி என்று நீ சொன்ன சபதம் முடித்தாப் போலே சிவபதவியிலே அடைவாய் என்று சொல்லிப் போட்டுப் பரமேசுரரும் மற்றுமுண்டான தேவர்கள், ரிஷிகள் எல்லோரும் புஷ்ப மாரி பொழிய கயிலாசத்துக்கு எழுந்தருளினார்கள். ஆகையினாலே இந்தச் சிட்டுக்குருவி ராமாயணத்தை எழுதிப் படித்தோரும், இதைக் கேட் டோரும் சிவகதியடைவார்கள் என்றவாறு.

(கு-பு)—

இந்நூல், "சிட்டுக்குருவி ராமாயணம்" என்னும் பெயர்த்து. முற்று முள்ளது. சிதிலமாயது. பிழையுளது. நடை வசனமாக இருப்பினும் கொச்சைத் தமிழினுலாயது. இதில் பல கிளைக்கதைகள் இடையிடையே வருகின்றன. சிட்டுக்குருவி பிள்ளையில்லாதிருந்து தவஞ் செய்து பிள்ளை யுண்டாக, அதனைச் சமுத்திரராசன் எடுத்துச் செல்ல, இறைவன் அருளால் அதனைத் திரும்பப் பெற்றுச் சபதம் முடித்துச் சிவபதவியடைந்த வரலாற்றைக் கூறுகிறது.

R. No. 1943.

அருணகிரி யந்தாதி (உரையுடன்).

ARUṆAGIRIYANTĀDI (with commentary).

Palm leaf. 16½ × 7 inches. Foll. 1—30. Lines, 4 on a page. Tamil. Injured. Old. Extent, 120 granthas. Printed.

Purchased in 1949-50 from Sri Duraisami, Sendamangalam P.O., Namakkal taluk, Salem district.

Incomplete.

This work has been already published. The commentary runs only up to the 59th verse. This is same as that described under D. No. 237.

(கு-பு)—

இந்நூல், "அருணகிரியந்தாதி" என்னும் பெயர்த்து. ஐம்பத்தொன்பது பாட்டுக்களே உரையுடன் உள்ளன. முற்றுமில்லை. சிதிலமாயது. இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 237-ஆம் எண்ணின் கீழ் வந்துள்ள நூலில் வருணிக்கப்பட்டிருக்கிறது. அது அச்சாகியுள்ளது.

R. No. 1944.

இலக்குமி பார்வதி ஏசல்.

ILAKKUMI PĀRVATI ĒSAL.

Palm leaf. 16¾ × 1 1/16 inches. Foll. 1—7. Lines, 5 on a page. Tamil. Injured. Old. Extent, 35 granthas.

Purchased in 1949-50 from Sri Duraisami, Sendamangalam P.O., Namakkal taluk, Salem district.

Complete.

This deals with the famous quarrel between Pārvati and Lakṣmi. The manuscript is very injured.

Beginning :

முந்திமுந்தி நாயகன் பாதந்துணையே—நல்ல
முடிமே லணிந்துகொண்டு யேசல் பாடவே
அந்தமுடன் லட்சுமியும் பார்வதி யுமாய்
ஆவலாய்க் கூடியங்கே யேசல் பாடவே
முன்னும் பின்னும் உங்கள்குலம் நல்ல குலமோ—அடி
மூங்கிலிலே தான்பிறந்தார் உங்கள் சிவனுர்
யென்ன யென்னடிசந்தி சூர்ப்பனகையே—அடி
தூணிலே பிறந்தாரடி உங்கள் பெருமாள்.

End :

பார்த்திப னங்கையினுலே வில்லடி பட்டு
பதுங்கி தளும்பினுரே உங்கள் சிவனுர்
வேந்தர் உரலோடு கட்டி வைக்க
விறுவிறென்று முழித்தாரடி உங்கள் பெருமாள்
இந்தப்படி இரண்டு பேரும் தர்க்க மாடவே
யேகாம்ப நாதர்வந்து ராசி பண்ணவே.

(கு-பு)—இந்நூல், இலக்குமி பார்வதி ஏசல் எனும் பெயர்த்தாய் திருமால் சிவபெருமான் இருவர் தம்முடைய புகழை எடுத்துரைக்கும் அளவில் அமைந்ததொரு நூலாகும். முற்றுமுளது. சிதிலமாகியுளது. எழுத்துப் பிழைகளுள.

R. No. 1945.

நவக்கிரக சிந்தாமணி.

NAVAGRAHA CINTĀMAṆI.

Palm leaf. 8¼ × 1 inches. Foll. 1—76. Lines, 5 on a page. Tamil. Injured. Old. Extent, 475 granthas.

Purchased in 1949-50, from Sri Duraisami, Sendamangalam P.O., Namakkal taluk, Salem district.

Incomplete.

T is is an incomplete treatise on astrology by some unknown author.

Beginning :

நவக்கிரக சிந்தாமணி இந்தப் பிற புதிஞ்சை சிந்தாமணி பார்க்குகிற கிரமம் நாலுமூலே சவுக்கமாய் மெழுகி விநாயகரை வைத்துத் தூப நிவேத்தியங்கொடுத்துப் பூசை செய்து ஒன்பது பலகரை எடுத்துகொண்டு கோரின காரியம் ஒன்பது திறம் போட்டு முன்புறம் விழுந்ததைக் கணக்குக் கூட்டிக் கொண்டு பின்புறம் விழுந்ததைத்தள்ளி, கூடின கணக்கை ஒன்பதில் கழித்து மிச்சமானது ஒன்ருனல் ஒன்றும் எடு என்றும், பத்திரண்டு மிச்சமானல் இரண்டாம் எடு இரண்டாம் பதி. மூன்று மிச்சமானல். மூன்ரும் எடு மூன்ரும் பத்தி. நாலு மிச்சமானல் நாலாம் எடு நாலாம.

* * * * *

பத்தி ஒன்பது மிச்சமானல் ஒன்பதாம் எடு ஒன்பதாம். இந்தப் பிரகாரமாய்ப் பார்த்தால் பலாபலன்கள் தெரியும்.

End :

இந்தத் தேவதா பூசை பண்ண நல்லதோ ? பொல்லாதோ ?

இந்தத் தேவர் பூசை பண்ண தேசத் தியாகமாகும்.

(கு-பு)—

இந்நூல், சோதிட வகையைச்சார்ந்த "நவக்கிரக சிந்தாமணி" என்னும் பெயர்த்து. பலகரையை உருட்டிப் பார்த்துப் பலாபலன்கள் கூறுவது. முற்றும் முடிந்ததாகத் தெரியவில்லை. எழுத்துப் பிழையுள்ளன. பழுதுபட்டுள்ளது.

R. No. 1946.

திருநீலகண்டன் பள்ளு.
TIRUNĪLAKAṆṬAN PAḶḶU.

Palm leaf. 14—7 inches. Foll. 1—46. Lines, 5 on a page. Tamil. Injured. Old. Extent. 460 granthas.

Purchased in 1949-50 from Sri Duraisami, Sendamangalam P.O., Namakkal taluk, Salem district.

Seems this is to be incomplete.

This is same as the work described under D. No. 2098. The present manuscript in addition has seven verses. The last few folios contain stōtras on the presiding goddess of Madurai.

(கு-பு)—

இந்நூல், டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2098-ஆம் எண்ணின்கீழ் வருணிக்கப்பட்டிருக்கிறது. அதன் குறிப்பையுங் காண்க. அவ்வெண்ணில் வருணித்திருப்பதைக் காட்டிலும் எழு பாட்டுக்கள் அதிகமாக உள்ளன. நூல் முற்றுப்பெற்றதாகத் தெரியவில்லை. குறிப்பு அங்குக் காண்க. மற்றும். இந்நூலில் "ஸ்ரீரங்கர் ஊசல்" என்ச் சில செய்யுட்களும், மீனுட்சியம்மை தோத்திரப் பாடல்கள் சிலவும் தனிப்பாடல்கள் பலவுமாய் அமைந்துள்ளன. பழுதுபட்டுளது.

R. No. 1947.

சிறுத்தொண்டன் சிந்து.

CIRUTTONDAN CINDU.

Palm leaf. 15¾ × 1 inches. Foll. 1—40. Lines, 5 on a page. Tamil. Injured. Old. Extent, 200 granthas.

Purchased in 1949-50 from Sri Duraisamy, Sendamangalam P.O., Namakkal taluk, Salem district.

complete.

In the form of Kāvaḍic cindu, this work gives the story of the famous " Siruttoṇḍa Nāyanār''. The author's name is not known. This is same as that work described under D. No. 504.

Beginning :

உண்டென்ற பேர்களுக் குண்டேனவே—அய்யர்
உம்மை யென்று எந்தனுக்கு வேறு முண்டோ
சென்றுதிசை வென்றுவரும் பிள்ளையாரே—உந்தன்
சீர்பாதமே தஞ்சம் போற்றி ஐயா
சீரான காசிநகர் தன்னில் வாழும் நல்ல
திகழான காடவர் கோன் ராசனுந்தான்
பேரான சிறுத்தொண்டன் மந்திரியாம்—நல்ல
பிறபலமாய் நாளு மிருக்கையிலே
அந்நாளில் காடவர்கோன் ராசனுந்தான்
ஆசையாகச் சிறுத்தொண்டன் றனையழைத்து.

End :

சிறுத்தொண்டன் மனைவிக்கும் சீராளனுக்கும் சிவகாமி கயிலாச மளித் தனராம்.

(கு-பு)—இந்நூல், சிறுத்தொண்டன் கதையை சிந்துமெட்டில் அமைத்துக் கூறுகிறது. எழுத்துப் பிழைகள் சிறு பான்மை உள. முற்று மிருக்கிறது. பழுதுபட்டுள்ளது.

R. No. 1948.

அர்ச்சுனன் தவம் (நாடகம்).

ARCCUNAN TAVAM (Drama).

இரட்டை வாசிரிய விருத்தம்

அண்டரண் டங்களுட னீரேழு புவனங்க
ளதிர நடமாடு மயிலே
அரகா வென்றமரர் பிரமன் முதல் முனிவர்கள்
அர்ச்சிக்க வந்த மயிலே
தண்டையொடு கிண்கிணி சிலம்பொலி முழங்கவே
தாண்டவம் புரியு மயிலே
தர்க்கமிடு சூரனுட னேகநீ ருகவே
சாகிவரு தோகை மயிலே

கண்ட தொரு பேய்பூத பிரமராட்சர் களுடல்
கதறிட மிதிக்கு மயிலே
கரடி புலி யாளியரி மிருகங்க ளியானையுங்
காலாக்கினை கொண்ட மயிலே
தெண்டனிட்டே பணியு மடியவர்க ளீடேற
சேரவே தந்தாளு மயிலே
திருப்போ ரூரில் வளர் கந்தப்பரேறிவரு
சித்திரக் கலாப மயிலே.

(1)

End :

அரிவிட்டுணு பத்தியாய் நினது பாமாலையைப்
பாடினோர் பங்கில்நின் றுடு மயிலே
பரிபுரை யளித்தவெண் முருகரைத் தாங்கிப்
பறந்தாடு கின்ற மயிலே
சுத்த முககாலந் துதிக்கு மானிடர்கடந்
துன்பம் தவிர்க்கும் மயிலே
துய்ய சேவற் பதாகரைப் போற்றியே
சுகமுற் றிருக்கு மயிலே
தொத்தியே வருநெடிய கொக்கினைச் சுட்டியிற்
சுட்டெரித் துண்ட மயிலே
சுரருல குளோர்புனித மலர்மாரி பொழியத்
துதைந்துவிளை யாடுமயிலே
சித்தமகிழ் வாயென்னை யிரட்சிக்க வந்துற்ற
சின்மயா னந்த மயிலே
திருப்போ ரூரில்வளர் கந்தப்ப ரேறிவரு
சித்திரக் கலாப மயிலே.

முற்றும்.

(கு-பு)—

இந்நூல் போன்றே மற்றொரு நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1666-ஆம் எண்ணில் வருணிக்கப்பட்டிருக்கிறது. அது தெலுங்கு எழுத்தில் தமிழ் மொழியிலமைந்துள்ளது. அதனினும் இதுவேறுயது. முற்று முளது.

R. No. 2216.

மீனாட்சியம்மை கிளிப்பாட்டு.

MĪNĀṬCIYAMMAI KIḶIPPĀṬṬU.

Foll. 43—56. Extent, 50 granthas.

Purchased, in 1949-50, from Sri R. Krishnasami Pillai, Santapuram, Trichy District.

T.N.O.—25

Complete.

Some philosophic stanzas supposed to be sung by the goddess Mīnākṣhiyamman herself. Ideas are expressed in simple and allegoric style. Author is not known.

Beginning :

மதுரை மீனாட்சியம்மன் திருவாய்
மலர்ந்தருளிய கிளிப்பாடல்

ஆதி சிதம்பரத்தே—கிளியே
ஆடி வணங்கிக் கொண்டு
சோதியிலக்கணத்தைக்—கிளியே
சொல்லுகிறேன் உனக்கு
ஆதி மத்தி யந்தமில்லை—கிளியே
ஆனந்த ரூபமடி
சோதியிலே யிருந்து—கிளியே
சுத்த வெளி பிறந்தது
வாயுவு மக்கினியும்—கிளியே
வந்தது அப்பு மண்ணு
மேயுஞ் சராசரமுங்—கிளியே
எல்லா முலகமுமே
பேயா முலகத்திலே—கிளியே
பேதம் பிறந்த தடி
தாயு மலடியடி—கிளியே
தன்னை மறந்தானடி
ஐந்து பூத மடி—கிளியே
அண்ட பிண்டாதி களும்
வஞ்சனை யாலே யண்ணே—கிளியே
வந்து மறைத்த தடி

End :

பிரம்ம சிதம்பரமே—கிளியே
பேறுன முத்தியடி
மதுரை மீனாட்சி யம்மாள்—கிளியே
மகிழ்ந் துரைந்த தமிழ்
இதமாய்ப் படிப்போர்க்குக்—கிளியே
எல்லா சுகந் தருமே.

முற்றும்.

(கு-பு)—

இந்நூல், மீனாட்சியம்மை கிளிப்பாட்டு என்னும் பெயர்த்தாய் மீனாட்சி யம்மையே பாடியதாக இறுதியடிகளால் தெரிகிறது. கருத்துக்கள் தத்து வங்களை உணர்த்துவதாய் அமைந்துள. சித்தாந்த நூல் வகையைச் சார்ந்தது போலும். முற்றுமுளது. படிக்க நன்றாகவுளது. அச்சாகவில்லை எனத் தெரிகிறது.

R. No. 2217.

சேலம் கைலாசநாதர் சதகம்.

SĒLAM KAILĀSANĀTHAR ŚATAKAM.

Palm-leaf. 13 × 1¼ inches. Foll. 1—108. Lines, 4 on a page. Tamil. Sligtly Injured. Old Extent, 432 granthas.

Purchased, in 1949-50, from Sri R. Krishnasami Pillai, Santāpuram, Trichy District.

Complete.

This is a collection of hundred verses eulogising the Lord Kailāsa-nātha of Śēlam composed by Cidambaravāṇar, son of Vasava-liṅgar belonging to the Vīraśaiva cult. The first five pages contain the head lines of the verses.

Beginning :

சேலம் கயிலாசநாதர் சதக வட்டவணை.

* * * * *

காப்பு

சீரார் கயிலாச தேவன்மிசை யான்சதகம்
பாராரும் பைந்தமிழாற் பாடவே—ஏராரு
மிந்துந்திச் செஞ்சடிலத் தெந்தைதரு மைந்துகரக்
கந்தமதத் தந்திமுகன் காப்பு.

கடவுள் வாழ்த்து

சீர்மேவு திங்களணி தேவனே வண்மைபெறு
தில்லைவளர் நடராசனே
செங்கண்மா லெனுநின் னடிமுடிகள் காணமல்
தேடிய மகாதேவனே
தார்மேவு பொங்கர வணிந்த சிவசம்புவே
சங்கரா கங்காதரா
தயாபர விநோதமெய்ஞ் ஞான சொரூபனே
சண்முகனை யீன்ற கோவே.
ஏர்மேவு முப்பத்து முக்கோடி தேவர்க
ளிறைஞ்சிடு மலர்ப்பாதனே
எழின்மிகு கரத்தினில் மான்மழு தரித்தே
எந்தையே எனையாளுவாய்
கார்மேவு சோலையொடு சங்கமர் நதிசூழ்ந்த
கற்பக் விராச மேவும்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கைலையங் கிரிவாசனே. (1)

End :

ஆதிகலி நாலாயிரத்துத் தொளாயிரத்
தாகுமுப்பா னிரண்டி
லாயிரத் தேழு நூற் றைம்பத்து மூன்று வருடம்
சகாப்தம் விருந்தியா

நீதிசே ரிரண்டுமே டத்திங்கள் குருவாரம்
நேர்ந்தபனி ரண்டாந்தினம்
நிறைகன்னி திதியைந்தி னோடமிர்த யோகமிவை
நீடிரே வதிநாளினிற்

சாதியில் வீரசைவன் வசுவலிங்கர்
தரு சிதம்பர வாணன்யான்
சதகமெனு மிப்பனுவல் நின்னடிக் கன்புகொடு
சாற்றின னுவந்தாளுவாய்

காதலுடன் அடியர்தொழு கறைமிடற் றண்ணலே
கற்பக விராச மேவும்
கங்கைபுனை யீசனே மங்கை மகிழ்நேசனே
கயிலையங் கிரிவாசனே. (100)

(கு-பு)—

இந்நூல் கைலாசநாதர் சதகம் என்னும் பெயர்த்து. 100 பாட்டுக்களுடன் வாழிப்பாட்டும் கலந்து 101 பாட்டுக்கள் உள. முன்னைந்து ஏடுகளில் பாடல்களின் தலைப்புக்கள் உள்ளன. முற்றுப்பெற்றது. சிறிது சிதலமாகக் காணப்படுகிறது. ஆசிரியர் பெயர் சிதம்பர வாணன் என்பதாகும். வசுவலிங்கர் மகனார். வீர சைவமரபு. சேலம் நகரிலுள்ள கைலாச நாதரைப் பற்றியன இப்பாடல்கள்.

R. No. 2218.

வில்லிபாரதம் பொழிப்புரையுடன்.

VILLIBHĀRATAM POḶIPPURAIYUḌAN.

Palm leaf. 15½ × 1¼ inches. Foll. 1—345., Lines, 8 on a page. Tamil. Injured. Old. Extent, 8,280 granthas.

Incomplete.

This is Bharatha Itihāsa written by Villiputtūrār. This contains only from Udyōgaparva to 14th Pōrccarukkam with famous commentary. The author of this commentary is not known.

Beginning :

படர்ந்த கானகந் திரிந்து மீண்டன்புடன்
பணிந்த பஞ்சவர்க்காகக்
கடந்த ஞானியர் கடவுளர் காண்கலாக்
கழலிணை சிவப்பேறத்

தொடர்ந்து நான்மறை பின்செல பன்னகத்
துவசன் மாநகர் தூது
நடந்த நாயகன் கருமுகில் வண்ணமென்
நயனம் விட்டகலாதே.

(பொழிப்புரை)

இராச்சியமெல்லாம் விசாலித்திருக்கப்பட்ட காட்டரணியங்களிலே போய்ப் பன்னிரண்டு வருடம் சஞ்சரித்து மீண்டு உபலாபியமென்னும் பட்டணமே வந்து சேர்ந்திருக்கிற பஞ்ச பாண்டவர்கள் சருவ சீபத்யா பரமூர்த்தியான ஸ்ரீ கிருஷ்ண தேவரை நமஸ்காரம் பண்ணி தோத்தரித்து அடியேங்களுக்கு இனிமேல் என்ன புத்தி யென்றுகேட்க கிருஷ்ண சுவாமி திருவுளம் பற்று கிறார். அவர் வாருங்கள் அஞ்சு பேருக்கு மென் னென்ன நினைவு இருக் கிறதோ அதுவெல்லாம் நம்முடனே சொல்லுங்களென்ன தருமராசன் சொல்லுகிறார்.

End :

முற்பொழு தொருபொற் றிகிரியான் மறைந்த
தாழ்வற முளரி முகத்தி
லற்பொழு தடைந்த வாயிரஞ் சுடரு
மநேகநூ றுயிரஞ் சுடராய்
தற்பொழு திதுவென் றியாவரும் வியப்ப
நாகரா லயம்வலம் புரிந்து
பிற்பொழு தவற்றைக் கவர்ந்துசென் று தயப்
பிறங்கலிற் பிறங்கினன் பெரியோன்.

பதினான்காம் போர்ச் சருக்கம்.
முற்றிற்று.

(கு-பு.)—

இந்நூல் வில்லிபாரதம் என்னும் பெயர்த்து. இதில் உத்தியோக பருவத்தில் படையெழுச்சிச் சருக்கம் தொடங்கி பதினான்காம் போர்ச் சருக்கம் முடிய எளிய மக்கள் புரிந்துகொள்ளும்படியான பொழிபபுரையுடன் அமைந்துள்ளது. சிறிது சிதலமாயது. உரை எழுதியோர் இன்னாரென்று ஊகிக்கமுடியவில்லை. எழுத்துப் பிழைகள் மலிந்துள. இப்பகுதி முற்றுப் பெற்றுளது.

R. No. 2219.

வில்லிபாரதம் (13, 14-ஆம் போர்ச் சருக்கங்கள்).

VILLIBHĀRATAM (13, 14 Pūrccarukkaṅgaḷ).

Palm leaf. 15½ × 1 inches. Foll. 1—200. Lines, 6 on a page. Tamil. Fair Old. Extent, 3,600 granthas.

Purchased, in 1949-50, from Sri R. Krishnasami Pillai, Santhāpuram, Trichy Dist.

Incomplete.

This contains the 13th, 14th Sargās of Villi-Bharata. This is same as the work described under R. No. 2218.

(கு-பு)—

இந்நூலில் உரையுடன் உள்ள 13, 14-ஆம் போர்ச் சருக்கங்கள் மூவருடக் காட்லாக்கு 2218-ஆம் எண்ணினுள் வருணிக்கப்பட்டிருக்கிறது. சிதல மாயுளது.

R. No. 2220.

வில்லிவிபாரதம் பொழிப்புரையுடன்.
VILLI-BHĀRATAM POḺIPPUṞAIYUḌAN.

Palm leaf. 14¾ × 1¼ inches. Foll. 346—570. Lines, 8 on a page. Tamil. Fair. Old. Extent, 5,376 granthas.

Purchased, in 1949–50, from Sri R. Krishnasami Pillai, Santāpuram, Trichy District.

Incomplete.

In continuation of the work described under R. No. 2218, this gives the portion from the 15th Sarga of the war till the coronation of Dharmaputra.

Beginning :

பதினைந்தாம் போர்ச் சருக்கம்

சித்தசித் தொடீசனென்று செப்புகின்ற மூவகைத்
தத்துவத்தின் முடிவுகண்ட சதுர்மறைப் புரோகிதன்
கொத்தவிழ்த்த சோலைமன்னு குருகையாதி நெஞ்சிலே
வைத்தமுத்தி நாதனன்றி வானநாடர் முதல்வர்யார்

எடுத்ததீப வொளியுமேனை யிருளுமேக வேழுமாத்
தொடுத்ததே ரருக்கர் சோதி தொழுதுதங்க டொழில்கழித்
தெடுத்தகோப மூளநின் றிரண்டுசேனை யரசரும்
கடுத்துளங் கறுத்து வெய்யகண்சிவந்து கடுகினர்.

என்பது :—

தீவிட்டி பகல் வெளிச்சமும் அந்தகார மாகிய இருட்டும் நீங்கிப்போக எழு குதிரை பூட்டின ஒத்தை வண்டித் தேரின் பேரிலே உதயகிரி பருவதத்திலே ஆயிரங் கிரணங்களும் பிரகாசிக்க * * *

End :

பாரத யுத்த மெல்லாம் பாங்குடன் படிய லுற்றுப்
பாரதம் பாரமாய் பாங்கனிவர்க் கேட்ப
பாரதம் பிறரை நீங்கிப் பாமகன் குருவின் பாதம்
பரத பூஜை செய்து பலன்மாற் கண்ட னுவார்,
பட்டாபிஷேக முற்றும்.

(கு-பு)—

இந்நூல் வில்லி பாரதம் என்னும் பெயர்த்து. மூவருடக் காட்லாக்கு 2218-ஆம் எண்ணில் வந்துள்ள நூலின் தொடர்ச்சியே இதனுள் முற்றுப் பெற்றுளது, அ.·.தாவது அதில் 14-ஆம் போர்ச் சருக்கம் முடிய இருக்கிறது. இதில் 15-ஆம் சருக்கம் தொடங்கி தருமர் பட்டாபிஷேகச் சருக்கம் வரை முடிந்துளது. மேற்கண்ட நூலின் உரையாசிரியரே இதற்கும் உரையெழுதியுள்ளார். இப்பகுதி முற்றுமுளது. உரை உயர்ந்த நடையியில்லை.

R. No. 2221.

பாரத வசனம் (அசுவமேத யாகம்).

BHĀRATA VACANAM (AŚUVAMĒDAYĀGAM).

Palm leaf. 14¾ × 11/16 inches. Foll. 1—354. Lines, 6 on a page. Tamil. Injured. Old. Extent, 2,124 granthas.

Purchased, in 1949–50, from Sri R. Krishnasami Pillai, Santāpuram, Trichy District.

Complete.

This is a work of unknown authorship. This describes the performance of the Aśvamēda sacrifice by Dharmaputra to remove the sins comitted during the Kurushkētra war. Similar works have been described under D. Nos. 446 and 447.

Beginning :

செளமே செய மகாரிஷியான சுபமஸ்து ஸ்ரீமன் மகாமண்டலேஸ்வரன் அகண்டமண்டலா தீஸ்வரன் ராசா வானவர் செளமே செய ராசாவை பதி ராசன் ராசபரமேஸ்பரன், ராச மார்த்தாண்டன், ராஜ கெம்பீரன் (ராஜபால பாத்து) பதினெட்டு நாள் பார்த்தன், ராசகுலசேகரன், ராஜாதி ராசன் குருகுல வங்குச சந்திர குலத்திலுதித்து யுத்தமும் சொல்லி பிற்பாதி பாண்டு மகாராசாவின் குமாரர், காண்டீபரான பஞ்சபாண்டவர்கள் கண்டு கேளும் ராசாவே யென்று தர்ம புத்திரரானவர் சிங்காசனத்துக் குடையவரான சார்ந்தாதி யசுவமேத யாகம் திரிதராஷ்டிரனுக்குடைய மகிபாலக் குடைய குமாரர்கள் திரியோதனாதிகளின் கதை.

End :

கேட்டோர்கள் எழுதினவர்கள் அஷ்ட ஐஸ்வர்ய சம்பன்னராய் சகல சவுபாக்கியங்களுடைய சகல வசீகரங்களுடனே பூலோகத்திலேயிருந்து வாழ்ந்து அந்திய காலத்திலே வைகுந்தம் அடைவார்களென்று வேத வியாசர் சொல்லுகையில் பகவானுன கிருஷ்டமூர்த்தியும் சுபமஸ்து. மங்கலாணி பவுந்து என்கிறதாய் சொன்னர்.

(கு-பு)—

இந் நூல் பாரதத்தில் தருமர் யுத்தம் செய்து முடிந்த பின்பு இந்த யுத்தத்தினல் ஏற்படும் மகா பாபங்களுக்குக் கழுவாயாக அசுவமேத யாகம்

செய்ததை எடுத்துக்காட்டுகிறது. முற்றுமுளது. இதுபோன்ற நூல்கள் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 446–447-ஆம் எண்களில் வருணிக்கப்பட்டிருக்கிறது. அவற்றிற்கும் இதற்கும் நடை சில இடங்களில் வேறுபட்டுளது. சிதலமாயது.

R. No. 2222.

அகத்தியர் வாகடம்.

AKATTIYAR VĀKAṬAM.

Palm leaf. $13\frac{1}{8} \times 1\frac{1}{8}$ inches. Foll. 3—73. Lines, 7, 8 on a page. Tamil. Injured. Old. Extent, 980 granthas.

Wants the beginning and end.

Purchased, in 1949–50, from Sri R. Krishnasami Pillai, Santāpuram, Trichy District.

Incomplete.

This is a work on medicine. Though it is named as Agastiyar Vākaṭam the authorship is doubtful.

Beginning :

* * * *

* * * *

குறித்திடுஞ் சிலேட்டுமநாடி குதிரைபோல் திமிர்ந்து நின்றால்
கறுத்திடும் விழியாய் நல்ல காரிழையாளே கேளாய்
மறுத்திவை பேசவேண்டாம் வயதிவை முடிந்ததென்று
பொறுப்பில்லாத் திங்களொன்றில் புகன்றிடும் மரணந்தானே.

ஆதித்தன் சந்திரன்போல் அந்தித்த நாடி தானம்
பேதித்து நிற்கு மாகில் பெருக்கவே கையிந்து நூடே
சோதித்துக் கண்டுதானும் சுரங்களில் புக்குமாகில்
வாதத்தில் வாய்வுபீடை வந்துற நிற்குந்தானே. (17)

End :

செய்தி யொன்று சொல்கிறேன் புலத்தியனே ஐயா
திறமான ரசலோக செந்தூ ரந்தான்
ஆதியென்ற சூதபற்பம் பலந்தானிரண்டு
அப்பனே லோகமொன்று காந்தமரை தான்கூட
வாதியென்ற லிங்கமரை வெண்கார மரைதான்
வளமான சாரங்கால் நாபி கால்தான்
காதியென்ற கெந்தினல் செந்தூரங் கால்தான்
கனமாகப் பொடிசெய்து அரைப்புக்கேளே. (139)

(கு-பு)—

இந் நூல் ' அகத்தியர் வாகடம் ' என்னும் பெயர்த்து. இருப்பினும் இதில் வரும் மருந்து வகைகள் வேறு பெயரில் மற்றொருவரால் செய்யப் பட்ட நூலில் உள என ஐயுற இடமுளது. இதில் லேகியம், பற்பம்,

மபத்தினை, சூரணம், நாடி பார்க்கும் முறைகள் முதலானவைகள் காணக் கிடைக்கின்றன. முதலில் இரண்டு ஏடுகளும் இறுதியில் பல ஏடுகளும் காணக்கூடவில்லை. சிதலமாயதொரு நூல்.

R. No. 2223.

பலவகை மந்திரங்கள்.

PALAVAKAI MANTIRAṄKAL

Palm leaf. 9¼ × 1 inches. Foll. 56. Lines, 4 on a page. Tamil. Much injured Old. Extent, 100 granthas.

Purchased, in 1949–50, from Sri R. Krishnasami Pillai, Santāpuram Trichy District.

Complete.

This work contains mantras pertaining to black magic. Author is not known.

Beginning :

பெருக்குங் கருணை வராகிதன் மாலையைப் பேசுதற்கு
நெருக்குங் குவிமுலை அம்பிகைபா தம்நிறைந் துமகிழ்ந்
திருக்கும் பரஞ்சுதன் அங்குச பாசங் கொண்டெனதுவினை
கருக்கும் தகைமை விநாயகன் சேவடி காப்பதுவே.

*　　*　　*　　*

*　　*　　*　　*

மெச்சிறத் தைபணியாள மணங்காய மிகவெகுண்டு
கச்சிற் தந்தி புலால்நின் றுற்கடித்துதரி
வச்சிற் தந்திமுகப் பனறியாகிய வாய்மடித்துப்
பச்சையிரத் தங்குடிப்பாள் வராகிபரா பரியே. (3)

End :

ஆறுதினை செய்தரிச் சித்துத் தமபணிந்தால்
வாராதிரா தல்லவே வந்தவல் பிணிநோய்
தீராதிரா தல்லவே சிறியேனை முகம்
பாராதிரா தல்லவே பரமானந்த பராபரியே.

(கு-பு)—

இந் நூல் பலவகை மந்திரங்கள் என்னும் பெயர்த்தாய் வராகிமாலை 30 பாட்டும், நவரத்தினமாலை 10 பாட்டும், தேட்கடி, பெண் வசியம் முதலிய மந்திரங்களும் உச்சாடணங்களும் சக்கரங்களும் உடையனவாய்த் திகழ்கிறது. மிகவும் சிதலமாயது. எழுததுப் பிழைகள் மலிந்து காணப் படுகின்றன. அனுபவத்தில் கொண்டு வந்தவர்கள்பால் இருந்த சுவடி யெனத் தெரிகிறது.

R. No. 2224.

நளச்சக்கரவர்த்தி கதை.

NALACCAKKARAVARTTI KATHAI

Palm leaf, 13 × 1⅜ inches. Foll. 1—110. Lines, 8 on a page. Tamil. Fair. Old. Extent, 1,760 granthas.

Purchased in 1949-50 from Sri R. Krishnasami Pillai, Santapuram, Trichy District.

Complete.

This is the same as the work described under D. Nos. 421 and 422.

(கு-பு)—

இந் நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 421–422-ஆம் எண்களில் வருணிக்கப்பட்டிருக்கிறது. இதில் முற்றுமுளது. நன்றாகவுளது.

R. No. 2225.

பிரம்மரிஷி வாகடம்

PIRAMMARIṢI VĀKAṬAM

Palm leaf. 11¼ × 1¼ inches. Foll. 1—188. Lines, 8, 9 on a page. Tamil. Much injured. Old. Extent, 300 granthas.

Purchased, in 1949–50, from Sri R. Krishnasami Pillai, Santapuram, Trichy District.

Complete.

This is a work dealing with miscellaneous topics of medicine and astrology. It is not uniform in charactor. Probably it is a collection of stanzas taken from different texts. Authorship is not known.

Beginning :

மதுரைவீரன் மந்திரம்

ஓம் அய்யுங்கிலியூ சவ்வூ சவ்வூ கிலியூ
ஓம் வீர நசி-நசி-சிவா-ஓங்கார மதுரைவீர
நசி-நசி-சிவா-உத்தண்ட பொம்மக்காள
மணோகர நசி-நசி-சிவா
அம்-வீர-நசி-நசி-சிவா
ஆங்கார-மதுரைவீர-நசி-நசி-சிவா
ஆபத்து-வரணும்-மருதை-வீரா-அவ்-உவ்
நசி-நசி-சிவா.

End :

கர்ப்பிணிக்கு ஆண், பெண் குறி.

கெர்ப்பிணியாயிருக்கிறவள் பேர் எழுத்தெண்ணி, இத்தனையென்று கண்டு அந்தத் தொகையும், அன்றைக்கு வரைக்கும் சென்ற திதியுமெண்ணி இதனுடனே ஐந்து கூட்டி ஆக ஏகத்துக்குத் தொகை கூட்டிக்

கண்ட தொகையை ஏழால் பெருக்கி ஒன்பதில் கழித்து மிச்சங் கண்டது ஒன்றேயானால் ஆண் பெறுவாள். இரண்டேயானால் பெண் பெறுவாள் என்று சொல்வது. பெறுகாலத்தில் எண்ணெய் கொடுக்க நோட்டம் பார்க்க வலது ராசி ஓடினால் ஆண். இடது ராசி ஓடினால் பெண் என்று சொல்வது.

(கு-பு)—

இந் நூல் 'பிரம்மரிஷி வாகடம்' என்னும் பெயர்த்து. இதில் வைத்தியங்களும், மந்திரங்களும், சக்கரங்களும், இரசவாத முறைகளும், பலவகைகளும் கலந்து எழுதப்பட்டு உள்ளன. நூலாசிரியர் இன்னாரென்று விளக்கமில்லையாயினும் முதலேட்டின் தலைப்பில் 'பிரம்மரிஷி வாகடம்' என எழுதப்பட்டிருக்கிறது. இடையிடையே பாட்டுக்களும் விரவி வரப் பெற்றுள்ளன. இவைகளை நோக்குமிடத்துப் பலவகை மந்திர நூல்களி லிருந்துப் வைத்திய நூல்களிலிருந்தும் தொகுக்கப்பட்டதொரு நூலோ அல்லது பிரம்மரிஷி வைத்தியம் அல்லது பிரம்ம முனி சூத்திரம் என்ற நூல்களிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்டு எழுதப்பட்டனவோ எனப் பல்வகையாலும் ஐயுறும்படி உள்ளது. எழுத்துப் பிழைகள் காணப் படுதலோடு விளக்கமாக எழுதப்படவில்லை. சிதலமாயது. வைத்திய வல்லுநர்களைக்கொண்டு ஆராயின் ஒருவாறு பயன்பெற இடமுண்டு.

R. No. 2226.

ஆருடம்

ĀRŪḌAM (Uḷḷamuḍaiyān).

Palm leaf. 4½ × ⅞ inches. Foll. 1—32. Lines, 4 on a page. Tamil. Very much injured. Old. Extent, 64 granthas.

Presented, in 1949–50, from Sri R. Krishnasami Pillai, Santapuram, Trichy District.

Incomplete.

This is a work on astrology dealing with the three types of forecast. This is same as the work described under D. No. 2290.

(கு-பு)—

இந் நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2290-ஆம் எண்ணின்கீழ் வருணிக் கப்பட்டிருக்கிறது. அதன் குறிப்பையும் காண்க. இது உத்தம, மத்திம, அதம ஆருடங்களைக் குறித்துப் பேசுகிறது.

R. No. 2227.

கதிர்காமச் சிந்து.

KATIRKĀMAC CINTU.

Palm leaf. 15½ × 1 inches. Foll. 1—15. Lines, 4 on a page. Tamil. Injured. Old. Extent, 112 granthas.

Purchased, in 1949–50, from Sri R. Krishnasami Pillai, Santapuram, Trichy District.

Complete.

This is a poem in praise of the God Murukan, as worshipped in Kandirkadirkamam or Kandarmālai near Jaffna in Ceylon. The name of the author is not given.

Beginning :

காப்பு.

சீரார் கதிர்காமச் செந்தூ ரறுமுகவர்
பாராரு மாலைதனைப் பாடவர மேயருள்வாய்
தாரார் குழலுமையாள் தானின்ற தற்பரனே
காராரு மேனிக் கணபதியுங் காப்பாமே.

நித்தமுனைத் துதித்து நீணிலத்திற் கொண்டாட
பத்துலட்சங் கோடிதமிழ்ப் பாடிவர மேயருள்வாய்
அத்தனருள் குமரா ஆயோன் மருகோனே
கர்த்தனேயெங் கள்கண்டிக் கதிர்காம வேலோனே. (1)

End :

ஆறுமுகனே ஆறிரண்டு கையோனே
வேறுவினை வாராமல் வெற்றிதர வேணுமையா
சூரனையும் வேரறுத்த சுப்பிரமணி யத்துரையே
சாருந் தமிழ்ப்பாடத் தயாபரனே வந்துதவாய். (31)

வருகைப்பத்து

காணிக்கை கொண்டு வருவார் சனங்கள்
கர்த்தாவைத் தேடிவருமுன்
ஆணிப் பொன்னுன பழனு புரிக்கு
இடமாக நின்றமுருகா
பூணிக்கை யாக எமதூதர் வந்து
பொருதவே கட்ட வருமுன்
மாணிக்க முத்து மயில்மீதி லேறி
வரவேணு மெந்தன்அருகே. (1)

* * *

(கு-பு)—

இந் நூல் இலங்கையில் உள்ள கண்டி கதிர்காமம் என்னும் தலத்தில் எழுந்தருளியுள்ள முருகக் கடவுள்மீது பாடிய தோத்திரப்பாடல்கள் கொண்டது. சிதலமாயது. முற்றுமுள்ளது. பாட்டு நடை உயர்ந்ததாக விளங்கவில்லை.

R. No. 2228.

அகத்தியர் அனுபோக சூத்திரம் முந்நூறு.

AKATTIYAR ANUBHŌKA SŪTTIRAM MUNNŪṚU.

Palm leaf. 11⅝ × 1 inches. Foll. 1—102. Lines, 5 on a page. Tamil. Much injured. Old. Extent, 1,900 granthas.

Purchased, in 1949–50, from Sri R. Krishnasami Pillai, Santapuram, Trichy District.

Incomplete.

This is same as the work described under R. No. 264.

(கு-பு) —

இந் நூல் மூவருடக் காட்லாக்கு 264-ஆம் எண்ணின்கீழ் வருணிக்கப் பட்டிருக்கிறது. அதன் குறிப்பையுங்காண்க. முற்றுப்பெறவில்லை.

R. No. 2229.

மாட்டு வாகடம்.

MĀṬṬU VĀKAṬAM.

Palm leaf. 11 × 1⅛ inches. Foll. 1—11. Lines, 7 on a page. Tamil. Injured. Old. Extent, 150 granthas.

Purchased, in 1949-50, from Sri R. Krishnasami Pillai, Santapuram, Trichy District.

Though the title is Māṭṭūvākaṭam it deals with various topics. Authorship is not known.

(கு-பு)—

இந்நூல் மாட்டு வாகடம் என்னும் பெயர்த்ததாய்ப் பல நூல்களிலிருந்தும் அனுபவப் பட்டவற்றை யெடுத்து எழுதப் பெற்றது. மாட்டுப் பிணிகட்குச் சில வைத்திய முறைகளே இதில் காணப்படுகின்றன. ஒரு பெரும் நூலிருந்து சிதைந்த ஏடுகள் இவை எனத் தெரிகிறது. சிதலமாயது.

R. No. 2230.

அகத்தியர் மாந்திரீகம் ஐம்பது.

AKATTIYAR MĀNTRĪKAM AIMBATU.

Palm leaf. 9⅛ × 11 3/16 inches. Foll 1—24. Lines, 5 on a page. Tamil. Fair. Old. Extent, 250 granthas.

Incomplete.

This is same as the work described under R. No. 942 (e).

(கு-பு)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 942-ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப் பட்டிருக்கிறது. இதில் 48 பாட்டுக்களே உள. பிற அதன் குறிப்பைக் காண்க.

R. No. 2231.

கொக்கோகம் உரையுடன்.

KOKKŌKAM with commentary.

Palm leaf. 13¼ × 1⅛ inches. Foll. 1—104. Lines, 5 on a page. Tamil. Fair. Old. Extent, 2,200 granthas.

Purchased, in 1949-50, from Sri R. Krishnasami Pillai, Santapuram, Trichy District.

Complete.

This is same as the work described under R. No. 1081 (d).

(கு-பு)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 1081 (d)-ஆம் எண்ணின் கீழ் வருணிக் கப்பட்டிருக்கிறது. இது முதலிலிருந்து ஆறு அத்தியாங்கள் வரை முற்றுப் பெற்றுள்ளது. பிற அதன் குறிப்பைக் காண்க.

R. No. 2232.

ஆரவல்லி அம்மானை.

ĀRAVALLI AMMĀNAI.

Palm leaf. 14⅞ × 1⅛ inches. Foll. 1—175. Lines, 7 on a page. Tamil. Injured. Old. Extent, 2,500 granthas.

Purchased, in 1949–50, from Sri R. Krishnasami Pillai, Santapuram, Trichy District.

Complete.

This work in the form of Ammānai, gives the story of the marriage of Āravalli Aṇaṅkāmbalvariśai alias Vālammāḷ with Allirājā.

Beginning :

முந்தி முந்தி விநாயகனே முக் கண்ணனுர் தன் மகனே
கந்தனுக்கு முன்பிறந்த கணபதியே முன்னடைவாய்
சத்திக் கணபதியே தையநல்லாள் புத்திரனே
எனதுதுயரம் தீர்க்கும் எம்பிரான் தன்மகனே
வித்தைக்கு நல்ல வேத முடைபோனே
புத்தியருள் நீ கொடுப்பாய் புண்ணியரே முன்னிருந்து
அத்திமுகனே யருள் சடையோன் புத்திரனே
செல்வக் கணபதியே செங்கண்மால் தன்மருகா
ஆலடியில் பிள்ளையாரே அரசடி விநாயகனே
வேலடியில் பிள்ளையாரே வேறுவினை வாராமல்
எடுத்த பலகாரம் இன்பமுடன் தான்படைப்பேன்
கச்சாயம் பணியாரம் கற்கண்டு சர்க்கரையும்
அவல் கடலை பொரியுருண்டை அதிரசமுந் தேங்குழலும்

End :

அந்தணர்கள் வாழி அரசர்மக்கள் தாம்வாழி
படிப்போரும் கேட்போரும் பாருலகில் தான் வாழி
ஆலுபோல் தழைத்து அறுகதுபோல் வேரூன்றி
மூங்கில்போல் சுத்தம் முசியாமல் வாழ்ந்திருப்பார்.

(கு-பு)—

இந்நூல் ஆரவல்லி யம்மானை என்னும் பெயர்த்து. முற்று முனது. சிதலமாயது. எழுத்துப் பிழைகள் உள. "ஆரவல்லி அணங்காம்பல் வரிசை" என்பாளுக்கு "வாலம்மாள்" என்று மாயவனுர் பெயரிட்டு அல்லி ராசாவுக்கு மண முடித்து வைத்த கதையை எடுத்துரைக்கின்றது.

R. No. 2233.

வைகுந்த அம்மானை.

VAIKUNTA AMMĀNAI.

Palm leaf. 15 × 1 inches. Foll. 1—277. Lines, 7 on a page. Tamil. Injured. Old. Extent, 3,900 granthas.

Purchased, in 1949–50, from Sri R. Krishnasami Pillai, Santapuram, Trichy District.

This describes the story of Pāṇḍavās reaching Vaikunta, the place of God Narāyaṇa after ruling Hastināpuram. Verses are in the form of Viruttam and Koccakam. Author is not known.

Beginning :

காப்பு

வாரிசூழ் உலகு தன்னில் மன்னுயிர் துதிக்க வேண்டி
சீரிய தமிழி னாலே தெரிந்துஅம் மானை பாட
ஆரியன் அனந்தராமன் அச்சுதன் கமலக் கண்ணன்
பாரிய மேகவர்ணன் பச்சைமால் காப்ப தாமே.

பார்தனை யளந்த டாயன் பஞ்சவர் சகாயன் தூதன்
மோர்தனை யெடுத்த முன்னாள் விண்மழை தடுத்த மூலம்
சீர்பதம் வணங்கி ஐவர் தெரிந்துவை குண்டம் சேர்ந்த
ஓர்கதை யம்மானை யாக உரைக்கமால் பாதம் காப்பாம்.

கந்தனே செந்தமிழ்க்குக் கணபதியே காப்பாக
எந்தன் சரஸ்வதியே யெப்போதும் வந்துநித்தம்
வந்துதவி செய்ய வாழ்த்துகிறே னிக்கதையை
முந்து பரமீசர் மொழிந்த வசனமிது

செப்புதற்கு லட்சுமியாள் சீதேவி யுண்டாக
இப்புவியில் மாலயனு மெடுத்துரைத்த வேதாந்தம்
மகாபாரதக் கதையாய் வகுத்துரைத்த சாத்திரந்தான்
பூபாலரா யவர் பொருந்துதுரி யோதனனை

வேண்டும் புவியாண்டு விஷ்ணுபுரந் சேர்ந்தகதை
ஒன்று மறியேன் உரைத்தேன் புவிமீதில்
பெரியோர் பொறுத்தருளும் பிள்ளை யிவனெனவே
தெரியாதான் சொன்னமொழி செந்தமிழோர் தான்பொறுப்பீர்

பாவாணர் பாதம் பணிந்துமிக நினைந்து
நாவாணர் சீர்பாதம் நமஸ்கரித்து நாள்தோறும்
சொல்லுகிறேன் அம்மானை துதிக்கை துணையாக

* * * *

End:

தோத்திரம் சொல்லித் தொழுதசென மேசனைத்தான்
வாழ்த்தி விடைகொடுத்த மாமுனிவன் தான்போனான்
வேதவியாசர் விண்ணகத்துக் கேகியபின்
காதால் செனமேசயன் கண்குளிரத் தான்கேட்டு
இருந்தான் செனமேசயன் ஏகச்சிங் காதனத்தில்.

(கு-பு)—

இந்நூல், வைகுண்ட அம்மானை என்னும் பெயர்த்து. பஞ்ச பாண்டவர் துரியோதனனுடன் போர் செய்து பின்பு இராச்சியமாண்டு இறுதியில் வைகுண்டம் சேர்ந்தார்கள் என்ற பாரதக் கதையைக் கூறுகிறது. முற்று முளது. சிதலமாயது. விருத்தம், கொச்சகம் என்ற பாட்டு வகைகளால் ஆகியது. நன்றாக உளது.

R. Nos. 2234 and 2235 (one codex).

Palm leaf. 11¼ × 1⅜ inches. Foll. 1—120. Lines, 9 on a page. Tamil. Injured. Old. Extent, 2,950 granthas.

Presented in 1949–50. by M. P. Kauṇḍar, Puliyampaṭṭi, Palani taluk, Madurai district.

R. No. 2234.

அகத்தியர் வைத்திய ரத்தினச் சுருக்கம்.

AKATTIYAR VAIDDIYA RATTINAC CURUKKAM.

Foll. 1—57. Extent, 1,400 granthas.

May be complete.

This is a work on medicine written by the sage Agasthiya. This is as the work described under R. No. 941. Herein the matter is not properly arranged.

(கு-பு)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 941-ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப்பட்டிருக்கிறது. முற்று முளது. சிதலமாயது. ஏடுகள் சரிவர அடுக்கப்படவில்லை. பிற அதன் குறிப்பைக் காண்க.

R. No. 2235.

அகத்தியர் வைத்திய வாகடம்.

AKATTIYAR VAIDDIYA VĀKAṬAM.

Foll. 58—122. Extent, 1,550 granthas.

This is same as the work described under R. No. 1197, but gives preparation of some more medicines in addition to those under R. 1197.

(கு-பு)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 1197-ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப் பட்டிருக்கிறது. இதில் அகத்தியர் முப்பூ ஐம்பதும் அகத்தியர் குழம்பும், வசனத்தினால் பலவித லேகிய மருந்து முறைகளும் அதிகமாக எடுத்துக் கூறுகின்றது. பிற அதன் குறிப்பையுங் காண்க.

R. Nos. 2236 and 2237 (one codex).

Palm leaf. 13⅜ × 1¼ inches. Foll. 1—74. Lines, 8 on a page. Tamil. Injured. Old. Extent, 1,500 granthas.

Presented in 1949-50 from Sri M. P. Kauṇḍar, Puliyampaṭṭi, Palani taluk, Madurai district.

R. No. 2236.

கொக்கோகம்.

KOKKŌKAM.

Foll. 4—50. Extent, 1,000 granthas.

Complete in 7 chapters.

This is same as the work described under R. No. 1081.

(கு-பு)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 1081-ஆம் எண்ணில் வருணிக்கப்பட்டிருக்கிறது. பாயிரம் நீங்கலாகவுள்ளது. பிற அதன் குறிப்பிற் காண்க.

R. No. 2237.

மதநூல்.

MATANŪL.

Foll. 51—74. Extent, 500 granthas.

Incomplete.

This is an interesting work on Śaivite philosophy by some unknown author. Examples are given from the work called "Thirumantiram".

Beginning :

பராபரத் தத்துவம்.

பராபரமாகிய பரமேசு பரனார் தராதலம் படைக்கத் தானினைந் தருளி தனது பதியான பரையி டத்திற் பாத நூபுர வட்டத்திற் பராபரந் தோன்றி பராபரத்திற் பரந்தோன்றி பரத்தில் சிவந்தோன்றி, சிவத்தில் சத்தி தோன்றி சத்தியில் நாதந் தோன்றி, நாதத்தில் விந்துதோன்றி, விந்துவிற் சதாசிவந் தோன்றி, சதாசிவத்தில் மயேசுபரனார் தோன்றி, மயேசுபரத்தில் ருத்திரன் தோன்றி, ருத்திரனில் விஷ்ணு தோன்றி. . . .

End :

ஞானம் சிவமென்னும் அட்சரமோதி யறிந்தால் சத்தம் பிரியாதிருக்கும். ஒரு பதம் வவ் வென்னும் அட்சரம் ஓதியறிந்தால் ஞானவானும். யவ் வென்னு மட்சரம் ஓதியறிந்தால் தானவானும். இதற்குச்சாட்சி:—

முப்பது முட பது முப்பத் தறுவருஞ்
செப்ப மதிளுடைக் கோயிலுள் வாழ்பவர்
செப்ப மதிளுடைக் கோயில் சிதைந்தபி
னெப்ப வனைவரு மோட்டெடுத் தவரே.

(கு-பு)—

இந்நூல் சைவாகமத்தில் சேர்ந்தது. பஞ்சபூதங்களால் உண்டாகிய உலகினைப்பற்றியும் அதில் வாழும் ஜீவன்களின் நிலைகளைப்பற்றியும் கூறுகின்றது. முற்றுமில்லை. தான் கூறுகின்ற கூற்றுக்குத் திருமந்திரத் திலிருந்து எடுத்துக்காட்டுத் தருகின்றார் இவ்வாசிரியர். ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இறுதியில் சில ஏடுகளில் வைத்தியத்தைப் பற்றிக் கூறப் பட்டுளது.

R. No. 2238.

தத்துவ நூல் (கொக்கோகம்).

TATTUVA NŪL (Kokkōkam).

Palm leaf. 11⅜ × 1 inches. Foll. 1—60. Lines, 6 on a page. Tamil. Much injured. Old. Extent, 900 granthas.

Presented in 1949-50, from Sri M. P. Kauṇḍar, Puliyampaṭṭi, Palani taluk, Madurai District.

Incomplete.

In this, an unknown author gives briefly the ideas contained in the Kokkōkam. First few folios are lost.

Beginning :

* * * * *

இழையராக முயங்குவ தின்பமும்
மழவுபோகத் தரிவையர் தம்மையும்
அழிவிலாததோர் தத்துவம் யாவையும்
எளிமை யாகவிந் நூலி லியம்புவாம். (11)

மற்றை நூல்தன்னை வல்லவர் தங்களைக்
கற்றை வார்குழல் காமன்றன் தோளினூர்
தெற்று மான்மதிற் றேர்ந்து கரத்தினால்
செற்ற காம னெனச்சொலிச் சேர்வரே. (12)

இயல்பி னுலெழும் எண்வகைத் தத்துவ
நயம தாகிய வீரிரு னன்கினும்
வியநி லாமை கலைகள் விரும்பிய
பயன் தருமிவை பார்த்திடிற் கூறுவாம். (13)

தெய்வ மாமுனி யோடு சிறந்தசீர்
பொய்யில் நாகந் திகழ்ந்திரு காந்தையர்
வெய்ய பூத மியக்கிய ரக்கிபேய்த்
தையல் தத்துவ மெட்டெனச் சாற்றுவாம். (14)

End :

அரக்கித் தத்துவம்.

அளகமும் மெய்யு நீண்டு அறமிக வடிவு முண்டா
யிளகிய முலேயே செப்பு வொத்ததோர் விரலும் நீண்டு
தளவித நிற்கும் பச்சை சாற்றிட லறிய பெண்ணுள்
அழகினுள் குறையொன் றில்லே அறநல வார்த்தை சொல்வாள்.

(கு-பு)—

இந்நூல் தத்துவநூல் என்னும் பெயர்த்தாய் கொக்கோகத்தின் கருத்துக்களைச் சுருக்கிக் கூறவல்லதாய் தெய்வம், இருடி, நாகம், காந்தருவா, பூதர், இயக்கர், அரக்கியர், பைசாசம் முதலான எண்வகை கொண்ட தத்துவங்களை எடுத்தியம்புவதாய் அத்தன்மையுடைய பெண்டிரைக் கூடி இன்பம் சுவைக்கும் முறையினை எளிதில் எடுத்து வெளிப்படுத்துவதாய் அமைந்துள்ளது. முற்றுப்பெற்றதாகத் தெரியவில்லை. சில மடந்தையர்களை வசியப்படுத்த மந்திரங்களும், சக்கரங்களும் வரையப்பட்டுள்ளன. பொதுவாகச் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் நூல் எனலாம். முன்னேடு காணப் பெறவில்லை, சிதலமாயது. எழுத்துப்பிழைகள் மலிந்துள.

R. No. 2239.

பல்லி யாரூடம்.

PALLI YĀRŪḌAM.

Palm leaf. 6⅜ × 1⅛ inches. Foll. 1—11. Lines, 5, 6 on a page. Tamil. Injured. Old. Extent, 75 granthas.

Presented in 1949–50, from Sri M. P. Kaundar, Puliyampatti, Palani.

Complete.

This is similar to the work described under R. No. 354.

Beginning :

காப்பு.

வாரண முகத்தோன் பாதம் மலரடி வணங்கிப் போற்றி
தாரணி தன்னில் வாழும் தங்கள் நோய்க்குண மதெல்லாம்
பூரண மாக முன்னோர் புகன்றநூ லடவே யானும்
காரண மாக நின்ற கணபதி காப்புத் தானே.

முந்திய கௌளி தானும் மொழியும்பா றறிய வேண்டி
இந்திரன் றணலோன் கால னியக்கர்கோன் வருணன் வாயு
சந்திர னீச னென்ன சாற்றிய திசைக ளெட்டும்
வந்தவா றறிந்த ருக்கன் வருவது வகுத்துச் சொன்னோம்.

* * * *

செங்கதிர்த் திசையில் மொழிந்ததால் வரவாம்
செட்டுட னிருந்ததுந் தீதாம்
பங்கமாய் வினையோம் படைகடன் வாருய்
பயிர்மனை பேய்ந்தால் கெடுங்காண்
பொங்கமா யரசரிடஞ் செல்லத் தீதாம்
புத்தியால் நினைந்ததுந் தீதாம்
தங்கமாய் மலைவாழ் வேங்கடா சலந்தான்
அருளினுல் பாடல்செய் தனனே. (1

End :

சிறப்புடன் கேது திசையினில் மொழிந்தால்
செட்டுடன் பயிர்மனை யிலையாம்
இரப்பவர் பெரியோ ரெனும்குடி போக
யெண்ணுமுன் காரியந் தீதாம்
கரப்பது பசுநால் காலுள சாம
கதித்தவில் லுடையவன் வருவான்
திருப்பதி ஒருநூற் றெட்டுநா லுயர்ந்ததே
திருப்பதி வேங்கடா சலனே.
முற்றும்.

கு-பு)—

இந்நூல் பல்லியாரூடம் என்னும் பெயுர்த்து. முற்றுமுளது. சிதலமாயது. பிழையுளது. மூவருடக் காட்லாக்கு 354-ஆம் எண்ணில் வந்துள்ள நூல் போன்றது. ஆசிரியர் வேங்கடாசலம் என்பவர் போலும்.

R. No. 2240.

தட்சநாயனுர் வைத்திய அட்டவணை.
DAṬCA NĀYANĀR VAIDDIYA AṬṬAVAṆAI.

Palm leaf. 12 × 1⅛ inches. Foll. 1—78. Lines, 8 on a page. Tamil. Injured, Old. Extent, 700 granthas. Printed.

Transferred in 1949-50, from Vāṇī Pāṭaśālā, Pudukkottai.

Complete.

This is a work dealing with topics on medicine. This has been already printed by this library. The first sixteen folios describe the cure of some diseases. This part is not printed.

Beginning :

தட்சநாயனுர் வைத்திய அட்டவணை.

அருளாசி = குடபாலை கொடிசப்பாலை.
அருட்டலை = கடுகு ரோகிணி.
அதிபரிச்சாய் = வாலுளுவை, அளேசு, வெப்பம், அதிவிடையம்
அச்சகம் = நிரமுள்ளி.
அய்யவிப்ப = சித்திரைத்தை.
அனிச்சை = நாகமல்லி.

End :

வேலை = கடல்.

வேல் = மூங்கில்.

வேழம் = மூங்கில்.

கரும்பு = யானை.

வேற்கொம்பு = சுக்கு.

வேலிப்பருத்தி = உத்தாமணி.

வேகந்தோன்றி = கார்த்திகைக் கிழங்கு.

(கு-பு)—

இந்நூல் தட்ச நாயனுர் வைத்திய அட்டவணை யென்னும் பெயர்த்து, முற்றுமுளது. சிதலமாயது. இது, இந்நூல்நிலையத்தில் அச்சாகியுள்ளது. மன்னே பகினூறு ஏடுகளில் சில வைத்திய முறைகள் கூறப்பட்டுள்ளன. இப்பகுதி அச்சுப்பிரதியில் வரவில்லை.

R. No. 2241.

பதார்த்த குண நிருபணம்.
PĀDARTHA GUṆA NIRŪPAṆAM.

Palm leaf. 14¼ × 1½ inches. Foll. 1—19. Lines, 7, 8 on a page. Tamil. Injured. Old. Extent, 160 granthas.

Transferred in 1949-50, from Vāṇī Pāṭaśālā, Pudukkottai.

Complete.

This is a very useful treatise describing the medicinal properties of various substances. Although this work has been printed, there are some stanzas in this manuscript which are not found in the printed edition.

Beginning :

ஆற்றுநீர் பித்தம்போம் அருவிநீர் வாதமுறும்
ஊற்றுநீர் பித்தநேர் ஓடுமே—யேத்தும்
பாரைக் கிணத்துநீர் பத்தியெரி உஷ்ணமுறும்
ஏரிகுள நீர்ப்பா ரிசை.

குளிர்நீர்.

குளிர்ந்தநீர் வாதபித்தங் கூடுந் தடுமாறும்
மளுந்தநீர் நீர்த்தாக மகலாது—உளைந்து
கண்ணும் கடுக்கைக்கும் கலங்கும் மனேவிர்த்தி
யெண்ண முடம்பிளைக்கு மே.

அல்லி தாமரையுள்ள நீர்.

அல்லிதாம ரையடைந் தழுகியநீர் சொரியுஷ்ணந்
தொல்லைதாகம் நாபி சூலையுறும்—அல்லும்
சீத சுரந்தாபஞ் சிரங்கண்ணோய் வெப்புந்
தந்துதனி லுஷ்ணமிகுந் தான்.

End :

நாவல் பழம்

நாவல் பழம் பித்தம் நயனநேர்ப்புஞ் சூடுமே
மேவுங் கிரந்திசில் விடமு மிகும்—பாவி
த............சன்னியு மிருமல் மிகும்
மலகூட்டும் வாதமுறும் வார்.

(கு-பு)—

இந்நூல் பதார்த்தகுண நிரூபணம் என்னும் பெயர்த்தாயிப் பதார்த்த குண சிந்தாமணி என்னும் நூலின் கண் உள்ளது போலவே சிற்சில காய், கனி, கிழங்கு, வேர், செடி, கொடி, விருட்சம் முதலான தாவரப் பொருள் களுடைய குணங்களை எடுத்துரைக்கின்றது. வெண்பாவினால் ஆகியது. மிகவும் சிதலமாயது. எழுத்துப் பிழைகள் உள. அச்சுப்பிரதிக்கும் இதற்கும் சிற்சில வேறுபாடு காணப்படுகின்றன.

R. No. 2242.

வைத்திய நூல்.
VAIDDIYA NŪL.

Palm leaf. 13 × 1½ inches. Foll. 2—71. Lines, 8, 9 on a page. Tamil. Injured. Old. Extent, 1,136 granthas.

Folios are wanted in the beginning and end.

Transferred in 1949-50 from Vāṇī Pāṭaśālā, Pudukkōṭṭai.

Incomplete.

This contains about 800 verses dealing with topics on medicine. Still the work seems to be incomplete. The authorship is not definitely known. But this work gives the name, Kuruvaittiyar. It describes the characteristics of different medicinal herbs.

Beginning :

அன்றை நாட் பிதிர் கடங் கடகங்குச மாகையாலே
இற்றை நாளொளித் தாயிந்து இதுவுனக்கி யல்போவென்று
பற்றிய பசியிஞேடு பரிந்துரைத் தார்களந்த
குற்றமோர் களங்கமாகிக் குருகி யிந்து வின்பால். (10)
இந்துவை இரவிநோக்கி இனியுனை மன்னிக்க மாட்டேன்
எந்த மண்டலத்து ளீச னினையம தொழுநீ யென்ன
பிந்துவும் பாவவீச னிரங்கியே மறைகளெல்லாம்
சந்திர மவுலியென்னத் தரித்துத்தாண் டவமும்செய்தான். (11)

சந்தியா னடனந்தன்னிற் றதும்பிய கங்கை நீரோ
மந்த மண்டலத்தி லூரி யெழுந்தமு தெங்குஞ்சிந்த
வந்த வானந்த கத்தா லருஞ்சுவைதன் னுல்மாந்தி
இந்திரன் முதலாந் தேவ ரின்பமுற் றுர்களமாதோ. (12)

தேவர்கள் பசியுந் தீர்ந்து செயமகா தேவனென்ன
மூவரும் பணிந்து நிற்ப முக்கண னுமையா ளோடு
மோவறக் கலியி னூறி யுகுத்ததோ டதிகளாகி
பூவுல கத்துள் ளார்க்கும் புல்லற்கும் பொசிப்போ மென்றான் (13)

* * * * * * * *

சூதனோதிய சூத்திரந்தானமே
யாதியாக வரனரு ளாலரி
யாகும் சத்திரா லோகத்துக்கும்
பேதியா திந்தப் பொருள் செந்தமிழ். (20)
மந்திர மருந்தொடு மணிபல
தந்திரஞ் செயுள் சம்பிரதாயமு
நிததியா மல்குரு மொழி நேசித்து
சிந்தை நம்பிட சித்திக்கு மீதெலலாம். (21)
குருவைத்தியன் கூறிய வேவனுக்
குரியர் வேண்டு முயர்திணைக் கெயிதைத்
தெரிகுவார்கள் மனிதனிற் செனமித்து
நரியும் நாயினும் நன்கடை யாலரே. (22)

பாயிர முற்றும்.

தன்மந் திரிக்கும் தமிழ் முனிக்கும் சித்தருக்கும்
கன்மந் திரிபகவன் கட்டுரைத்தார்—நன்மை பெற
வாகடமாம் பாற்கடற்கண் வந்தமருந் தொக்குமே
கூவிடமார் மூலிக் குணம்.

வேம்பின் குணம்.

வேம்பிற் பச்சிலை வாதம் விலக்கும்முக்
காம்பு பித்தமுஞ் சேடமுங் காயூவேர்
பாம்புப் பலவிடந் தீர்க்கும் பழம்விதை
தேம்பு மெண்மெய் சிதைக்கும் பிணியெலாம். (1)

End :

ஈதெலாம் பொயுசெய்து கலவத்தில் தந்து
மாதுளை . . . . ருவேலுநீர் . . . .
ஓதெனும் பிச்சை ஒண் புளியம்பழம்
சீதளப் பழஞ்சேத் தரைநாலு நாள். (748)

(கு-பு)—

இந்நூல் வைத்தியநூல் என்னும் பெயர்த்து. இறைவனார், தன்வந்தரி, அகத்தியர், சித்தர்கள் முதலானோர்கட்கு உபதேசித்ததைக் குருவைத்தியன் உலகோர் உய்யும் பொருட்டுக் கூறியதாகப் பாயிரப்பாட்டுக்களால் புலப்படுகின்றது. எழுநூறுக்கு மேற்பட்ட பாட்டுக்கள் முற்றுமில்லாதிருந்துமே காணப்படுவதால் முழுது மெவ்வளவு பாட்டுக்கள் என்று தெரியவில்லை. முன்னும் சில ஏடுகள் காணப் பெறவில்லை. மிகமிகச் சிதலுற்றுக் காணப்படுவதால் படித்தற் கரிதாகவுள்ளது. எழுத்துப்பிழைகளும் உள்ளன. ஆசிரியர் குருவைத்தியரோ அவரல்லரோ என ஐயுற இடமுளது. பலவாறான தாவரப்பொருள்களின் குணகுணங்களையும், அதனால் நீக்கப்படும் நோய் வகைகளையும் எடுத்துரைக்கிறது. வைத்திய முறைக்குப் பயன்படுவதொரு நூல். அச்சியற்றப்படாதது.

R. No. 2243.

சாநூல் (உரையுடன்).

SARANŪL (with commentary).

Palm leaf. 15¼ × 1½ inches. Foll. 1—72. Lines, 5 on a page. Tamil. Much injured. Old. Extent, 875 granthas.

Transferred in 1949–50, from Vāṉī Pāṭaśālā, Pudukkōṭṭai.

Complete.

This is same as the work described under D. No. 2032.

(கு-பு)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2032-ஆம் எண்ணில் வருணிக்கப் பட்டிருக்கிறது. சிதலமாயது. முற்றுமுளது. பிற அதன் குறிப்புங் காண்க.

R. No. 2244.

விக்கிரமாதித்தன் கதை.

VIKKIRAMĀTITTAN KATHAI.

Palm leaf. 12½ × 1½ inches. Foll. 1—100. Lines, 9 on a page. Tamil. Much injured. Old. Extent, 1,170 granthas.

Folios from 31 to 64 are wanted.

Transferred in 1949–50, from Vāṉī Pāṭaśālā, Pudukkōṭṭai,

Incomplete.

This is same as the work described under R. No. 1972.

This contains some stories of the King Vikramāditya.

(கு-பு)—

இந்நூல் விக்கிரமாதித்தன் கதை என்னும் பெயர்த்து. இது மூவருடக் காட்லாக்கு 1972-ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப்பட்டிருக்கிறது. இதில் முதல் கதை முதல் நாலாவது கதைத் தொடக்கம் வரையிலும் பத்தாவது கதை தொடங்கி கூடுவிட்டுக்கூடு பாய்கிற கதை வரையிலுமாக உள்ளன. 31-64-ஆம் ஏடுகள் வரையில் இடையிலே காணப்பெறவில்லை. பிற அதன் குறிப்பையுங் காண்க. சிதலுற்ற காரணத்தால் படித்தற் கரிதாகவுள்ளது.

R. Nos. 2245 and 2246 (one codex).

Palm leaf. 19½ × 1½ inches. Foll. 1—111. Lines, 7 on a page. Tamil and Grantha. Much injured. Old. Extent, 2,330 granthas.

Transferred in 1949–50, from Vāṉī Pāṭaśālā, Pudukkōṭṭai,

R. No. 2245.

திருமாலை வியாக்கியானம்.
TIRUMĀLAI VIYĀKKIYĀNAM.

Foll. 1—106. Extent, 2,225 granthas.

Complete.

This is same as the work described under R. No. 1137 (d).

(கு-பு)—

இந்நூல் முவருடக் காட்லாக்கு 1137-ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப் பட்டிருக்கிறது. சிதலமாயது. அதன் குறிப்பையும் காண்க.

R. No. 2246.

திருப்பள்ளியெழுச்சி பிரதிபதம்.
TIRUPPAḶḶIYEḺUCCI PIRATIPADAM.

Foll. 107—111. Extent, 105 granthas.

Complete.

This is same as the work described under R. No. 520.

(கு-பு)—

இந்நூல் முவருடக் காட்லாக்கு 520-ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப் பட்டிருக்கிறது. அதன் குறிப்புங் காண்க.

R. No. 2247.

அசுவமேத யாகம்.
AŚUVAMĒDA YĀGAM.

Palm leaf. 16·3/16 × 1⅜ inches. Foll. 231. Lines, 7 on a page. Tamil. Very much injured. Old. Extent, 5,880 granthas. Folios are wanted in the beginning and the end.

Presented in 1949–50, from Sri D. Mutthukumaraswami Mudaliar, Headmaster, Municipal School, Kancheepuram.

Incomplete.

This is same as the work described under R. No. 2247.

(கு-பு)—

இந்நூல் முவருடக் காட்லாக்கு 2247-ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப் பட்டிருக்கிறது. முதலும் இறுதியுமான ஏடுகள் தேவைப்படுகின்றன. மிகவும் சிதலமாய் உள்ளது. எழுத்துப் பிழைகள் உள.

R. No. 2248.

நாலடியார் (உரையுடன்).

NĀLAḌIYĀR (with commantary).

Palm leaf. 12 × 1-1/16 inches. Foll. 1—336. Lines, 5 on a page. Tamil. Much injured. Old. Extent, 2,540 granthas.

Presented in 1949-50, from Sri D. Mutthukumaraswami Mudaliar, Headmaster, Municipal High School, Kancheepuram.

Complete.

This is same as the work described under R. No. 618. This contains, in addition to what contained in R. No. 618, the commentary for the last 10 verses. The gloss is of unknown authorship.

(கு-பு)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 618-ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப் பட்டிருக்கிறது. அதில் உரையில்லாத இறுதிப் பாட்டுக்கள் பத்திற்கும் இங்கு உரையுள்ளது. மிகவும் பழுது பட்டுளது. முற்றுமுளது. இது யாருடைய உரையென அறியக் கூடவில்லை.

R. No. 2249.

மாட்டு வைத்தியம்.

MĀṬṬU VAIDDIYAM.

Palm leaf. 11¼ × 1¼ inches. Foll. 1—124. Lines, 6 on a page. Tamil. Injured. Old. Extent, 1,500 granthas.

Purchased in 1949—50, from Sri A. M. Gopala Aiyar, 28, Boag Road, Mambalam, Madras.

Complete.

This work deals with the curing of the diseases that occur commonly to cows and goats according to the Āyurvéda and the English method. Author's name is not known. This is similar to the work described under R. No. 352.

Beginning :

மாட்டு வைத்தியம்

(இங்கிலீஷில் சொல்லப்பட்டதும் தமிழில் சொல்லப்பட்டதும்)

1. வயிறு உப்பசம்—காத்துத் துடைப்பான்
2. தீணிசிக்கல்—வாயடைப்பான்.
3. கோமாரி—வாய் நோய், கால்நோய்.
4. எரிக்காய்ச்சல்—வரட்டுக் காய்ச்சல்.
5. ஜலபய ரோகம்—விஷகடி நோய்.
6. கொடிறு சன்னி—சன்னி.

7. மண்டையடைப்பான்—நாசியடைப்பான்
8. இரத்தக்கலச யெரிச்சல்—நெஞ்சடைப்பான்.
9. தொண்டையடைப்பான்—தொண்டையடைப்பன் மெண்ணைக் கட்டு.

வியாதி குறிகள்.

(மூக்கடைப்பான், நெஞ்சடைப்பான்) மூக்கிலிருந்து சளி மிகுதியுண்டா வதோடு கூட சொல்ப காய்ச்சலும் காண்கிறது. உதறல் திம்மென்றி ருப்பது—காதுகள் மடங்கித் தொங்குதல் தலையிறக்கம் . .

. . . . . .

End :

நோவும் கழிச்சலும நிற்கிற வரையில் தண்ணீர் காட்டக்கூடாது. ஆட்டுக்குப் பாதி மருந்து வார்க்கலாம். ஆகாரம்—தவிடு பிசைந்து வைக்க வேண்டியது. இரண்டோர் தினத்தில் பச்சைப் புல் போடலாம். ஆனால் மட்டிப்புல் போடாமல் நல்லபுல் போடவேண்டியது.

இப்படிக்கு பிஞ்சின் ஜன்மதா ராமசாமி காங்கய நயினார் எழுதியது.

(கு-பு)—

இந்நூல் நாட்டு வைத்தியம், ஆங்கில வைத்தியம் ஆகிய இரண்டும் சம்பந்தப்பட்ட மாட்டு வைத்தியமும் ஆட்டு வைத்தியமுமாகும். ஆடு மாடு கட்கு உண்டாகும் காய்ச்சல, கோமாரி முதலான நோயகட்குச் சிறந்ததான வைத்திய முறைகள் உள்ளன. முற்று முளது. சிதலமடையது. அனுபவத் தில் கொணர்தற்கு ஏற்றது.

R. Nos. 2250 and 2251 (one codex).

palm leaf. 9⅛ × 1⅛ inches. Foll. 1—87. Lines, 7, 8 on a page. Tamil. Injured. Old. Extent, 850 granthas.

Purchased in 1949—50, from Sri A. M. Gopala Iyer, 28, Boag Road, Mambalam, Madras.

R. No. 2250.

அனுபவ வைத்தியம்.

ANUBHAVA VAIDDIYAM.

Foll. 1—77. Extent, 800 granthas.

Complete.

This is similar to the work described under R. No. 2580. This is a very injured manuscript describing the methods of curing to cough, tuberculosis and other diseases. Author is not known.

Beginning :

பேதி மாத்திரை.

சுக்கு, திப்பிலி, மிளகு, கடுக்காய், தாணிக்காய், நெல்லிமுள்ளி, கடுகு ரோகணி, இந்துப்பு வகைக்கு (விராகனெடை) 2 ; சுத்தி செய்த வாளம் (வராகனெடை) 16 ; இவையெல்லாம் எலுமிச்சம் பழச்சாறிட்டு இரண்டு சாமமரைத்துக் கடலையளவு மாத்திரைபண்ணி வைத்துக்கொண்டு வேண்டிய அனுபானங்களில் பேதிக்குக் கொடுக்கவும்.

End :

வீரிய விருத்திக்கு.

அமுக்கிறாங் கிழங்கு பலம் 8, சுத்தி பண்ணி.... சீனிச் சர்க்கரை பலம் 8 இரண்டும் கலந்து ஓரிலைத்தாமரை.....படி $\frac{1}{1}$, வல்லாரைச்சாறு படி $\frac{1}{4}$, பசுவின் நெய் படி $\frac{1}{4}$, தேன் படி $\frac{1}{4}$, எல்லாம் சேர்த்து லேகியம் பண்ணிக் கொடுக்கவும். இதுவும் முத்தக்காசு, குள....ந்த மஞ்சள், நெல்லிப் பழம் இவை நாலும் பொடிபண்ணி தேன்விட்டு அரைததுக் கொட்டைப் பாக்குப் பிரமாணம் சாப்பிடவும். ஆனைபலம் வீரிய விர்த்தியாகும்.

(கு-பு)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2580-ஆம் எண்ணில் வருணித்திருப்பது போலக் காணப்படுகிறது. இதில் க்ஷயம், நாக்குப்பூச்சி விழுதல், சன்னி வகைகள், இருமல், காதில் சீழ் வடிதல் முதலான நோய்கட்கு அனுபவத்தில் கண்ட வைத்திய முறைகள் கூறப்பட்டிருக்கின்றன. மிகவும் சிதலமாயது.

R. No. 2251.

சமகம் முதலியன.

CAMAKAM, ETC.

Foll. 78—87. Extent, 50 granthas.

This contains Sanskrit words like camakam, for further details, see the Sanskrit part of this Catalogue.

(கு-பு)—

இந்நூல் சமகம் முதலாய வடமொழிப் பகுதிகளைக்கொண்டது. வேத விஷயமானது. சமஸ்கிருத மொழியில் காணவும்.

R. No. 2252.

சரநூல் (உரையுடன்)

ŚARANŪL (with commentary).

Palm leaf. 6⅞ × 1-3/16 inches. Foll. 1—116. Lines, 5 on a page. Tamil. Injured. Old. Extent, 435 granthas.

Presented in 1949—50 from Sri A. M. Gopala Iyer Avl., 28, Boag Road, Mambalam, Madras.

Incomplete.

This contains 49 verses only with a gloss. This is same as that described under D. No. 2032. The commentary differs from that of D. No. 2032 in some places.

(கு-பு)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2032-ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப் பட்டிருப்பதாயினும் உரை சிற்சில இடங்களில் வேறுபட்டுக் காணப்படு கின்றது. 49 பாட்டுக்களே உள. சிதலமாயது. முற்றுமில்லை.

R. No. 2253.

அகத்தியர் வாகடம் ஆயிரத்தைந்நூறு.

AKATTIYAR VĀKAṬAM 1500.

Palm leaf. 12 × 1½ inches. Foll. 1—295. Lines, 9 on a page. Tamil. Much injured. Old. Extent, 5,000 granthas.

Purchased in 1949—50, from Sri A. M. Gopala Iyer, 28, Boag Road, Mambalam, Madras.

Incomplete.

This contains only 1,470 Sūtrams written by Akattiyar. This is medicinal treatise dealing with the method of preparing medicines for curing different kinds of diseases. This is same as that described under D. No. 1895.

(கு-பு)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1895-ஆம் எண்ணின்கீழ் வருணிக் கப்பட்டிருக்கிறது. இருப்பினும் இதில் அகத்தியர் வைத்திய சூத்திரம் 1,500 என்று இருக்க வேண்டியது அகத்தியர் வாகடம் என உளது. மிகவும் சிதலமாயது. சில எழுத்துப் பிழைகள் உள. முற்றுமில்லை. 1,470 சூத்திரங்களே உள.

R. Nos. 2254 to 2259 (one codex).

Palm leaf. 15 × 1½ inches. Foll. 1—258. Lines, 7, 8 on a page. Tamil. Much injured. Old. Extent, 5,903 granthas.

Purchased in 1949—50, from Sri A. M. Gopala Iyer, 28, Boag Road, Mambalam, Madras.

R. No. 2254.

இராமதேவர் 1,000.

IRAMADĒVAR ĀYIRAM.

Foll. 1—168. Extent, 3,696 granthas.

Complete.

This is a treatise in 1,000 stanzas dealing mainly with medicine and incidentally with Yōgam and Ñānam of the siddās. The

preparations of various kinds of medicinal powders, oils, etc., are all described herein. This is same as that described under D. No. 1908. Author of this work is Irāmadēvar.

(கு-பு)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1908-ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப்பட்டிருக்கிறது. அதன் குறிப்பையுங் காண்க. இதில் முற்றுமுளது. சிதலமாயது. எனினும் 78 என்று குறிக்கப்பட்ட எண் இரு தடவையும் 59 என்று குறிக்க வேண்டிய இடத்து 58 என்ற எண் திரும்பக் குறிக்கப் பட்டும் 136–142 வரையிலான ஏடுகள் மற்ற ஏடுகட்குச் சமமாகத் துவாரம் செய்யப்பட்டுக் கோக்கப்படாமையும் பக்க எண்கள் ஒரு பக்கமே எழுதப் பெறுமல் இரண்டு ஓரங்களில் மாற்றிக் கலந்து எழுதியும், ஓலைகளில் எண் களை எழுதாமல் விடப்பட்டும் உள்ளவை இதன் குறைகளாகும்.

R. No. 2255.

இராமதேவர் பலதிரட்டுச் சூத்திரம்
IRĀMADĒVAR PALATIRAṬṬU SUTTIṚAM.

Foll. 169–190. Extent, 425 granthas.

Complete.

This is a collection of 103 verses dealing with topics on medicine written by Irāmadēvar. This describes the details of medicines and magics.

Beginning :

மேகத்து எண்ணெய்.

மூவுலகுந் தான்படைத்த முன்னோன் தனைப்பணிந்து
பூவரசன் காயெண்ணெய் பூவுலகில்—மேவக்கேள்
கட்டாக பூவரசங் காயொரு நாலுபடி
திட்டமிகு சங்கன் குப்பி சேர்க—விடசி
முட்ட விருவங் கிழங்குடனே வேண்டுசுடு தோறட்டி
மருவுங் கோனுட் கிழங்கு வண்மையாய்—பெருகரிய
வாத மடக்கி வளரும் சுவகெந்தி
சீதகினி மூக்குக் கிழங்குடனே—ஓதரிய
கோழியாவாரை புள்ளி கொடிய பெருமரத்தின்
வாடுமிலைக் கள்ளி வகையுடனே—மீளவே
சாருபடி யரையாய் தான் சேர்த்து முன்பாலில்
மீளவடித்து விபரமாய் நாரியரை (கயாஷு வகை)—கேள்
கருத்தாய் உரைப்பேன் காண் உசாவரியபு லார்முத்தபட்டை
விசேசமாய் வெட்டி பல நாலு விஷமாம்—பெரு மரத்தின்
பட்டை பலம்நாலு பகரக்கேள்—திட்டமுடன்
அமுக்கிறுவின் கிழங்கு அஞ்சுபலந் தான்கூட்டு
சமுக்கக்கரு நொச்சி வேர் தந்த பட்டை சமுக்கைமுடன்.

* * * * * * * *

End :

வையப்பா சகலகலை சேதி யெல்லாம்
வளமாக அடக்கிவெகு தெளிவாய்ச் சொன்னேன்
அய்யமென்று நினையாதே புலைபே சாதே
ஆத்தாளே அனுதினமும் மறவா தேநீ
செய்யாதே தீவினைகள் கொடிது பாவஞ்
சிறந்ததெல்லாம் ஈசனென்று தெளிந்து காணும்
மெய்யான குருபதத்தைப் போற்றிசெய்து
விளம்பினேன் பலதிரட்டுச் சூத்திரந்தான் முற்றே.

(கு-பு)—

இந்நூல் இராமதேவர் இயற்றிய பலதிரட்டுச் சூத்திரம் என்னும் பெயர்த்து. இது வைத்தியம், வசியம், இரஸவாதம் ஆகியவைகளைப் பற்றிக் கூறுகிறது. இராமதேவர் எழுதியதாக முகப்பில் கூறப்பட்டுளது. 103 செய்யுட்களாலாகியது. சிதலமாயது. இந்நூல் வைத்தியர், ரஸவாதி இவர்கட்கு உதவக் கூடியது. முற்றுமுளது.

R. No. 2256.

இராமதேவர் விநோத பட்சிணி 108.

IRĀMADĒVAR VINŌḌA PAṬCIṆI 108.

Foll. 191-209. Extent, 200 granthas.

This is same as the work described under R. No. 197.

(கு-பு)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 197-ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப் பட்டிருக்கிறது. முற்றுமுளது; அதன் குறிப்பையுங் காண்க.

R. No. 2257.

இராமதேவர் பஞ்சபட்சி.

IRĀMADĒVAR PAÑCAPAṬCI.

Foll. 210-217. Extent, 590 granthas.

Incomplete.

This is same as that described under R. No. 947 (f).

(கு-பு)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 947-ஆம் எண்ணின்கீழ் வருணிக்கப் பட்டிருக்கிறது. முற்றுமில்லை. அதன் குறிப்பையுங் காண்க.

R. No. 2258.

இராமதேவர் பட்சிணி ஐம்பது.

IRĀMADĒVAR PAṬCIṈI AIMPATU.

Foll. 218-225. Extent, 200 granthas.

Complete.

This is same as the work described under R. No. 201 (b).

(கு-பு)—

இந்நூல் மூவருடக் காட்லொக்கு 201-ஆம் எண்ணின்கீழ் வருணிக்கப் பட்டிருக்கிறது. முற்றுமுளது. அதன் குறிப்பையுங் காண்க.

R. No. 2259.

இராமதேவர் சிவயோகம் பூஜாவிதி இருநூறு.

IRĀMADĒVAR ŚIVAYŌGAM PŪJĀVIDI IRUNŪṞU.

Foll. 226–258. Extent, 792 granthas.

Complete.

This is same as the work described under R. No. 947.

(கு-பு)—

இந்நூல் மூவருடக் காட்லொக்கு 947-ஆம் எண்ணின்கீழ் வருணிக்கப் பட்டிருக்கிறது. முற்றுமுளது. அதன் குறிப்பையுங் காண்க.

R. Nos. 2260 to 2269 (one codex).

Palm leaf. 9⅝ × 1⅝ inches. Foll. 1—204. Lines, 6 on a page. Tamil. Slightly injured. Old. Extent, 1,733 granthas.

Purchased in 1949–50, from Sri A. M. Gopala Iyer, 28, Boag Road, Mambalam, Madras.

R. No. 2260.

சுந்தரானந்தர் வகார சூத்திரம் 25.

ŚUNDARĀNANTAR VAKĀRA SŪTTIRAM (Irupattaintu).

Foll. 1-7. Extent, 70 granthas.

Complete.

This is a medicinal treatise by Sundarānandar. This is same as that described under R. No. 8 (c).

(கு-பு)—

இந்நூல் மூவருடக் காட்லொக்கு 8(c)-ஆம் எண்ணின்கீழ் வருணிக்கப் பட்டுளது. வைத்திய விடயமானது. அதன் குறிப்பைக் காண்க.

R. No. 2261.

அகத்தியர் வழலை.

AKATTIYAR VAḺALAI.

Foll. 8-10. Extent, 28 granthas.

Folios are wanted in the beginning and end.

Incomplete.

This is a work on rasavāda by the sage Agastiyā. The matter is not arranged properly.

Beginning :

வாரிவந்து நாழிக்கென்ன நாழி நீர்தான்
வரிசையாய்ப் பானைதனில் வைத்தேத்திக் கொண்டு
சேரிந்த மறுபாண்டத் தடுப்பி லேற்றி
தீயெறித்து வத்தினபின் ரவியில் காய்ச்சி
பாரமுரி தனில்கலக்கி யிருத்து காய்ச்சி
பறிவாக தேசிநீரில் முன்போல் காய்ச்சி
சீரிதுதான் பூவுக்கு மூன்றுசுத்தி
வேரேது பலங்கள்இரு பத்து நாலு
விளங்கிநின்ற ஒன்பதே முக்காலாணி

கூரேது நீரவையில் கட்டு நாகம்
 கூட்டியொரு பலஞ்சேரு உருக்கிக்கொண்டு
சோறேது வேணுமென்றல் அலையவேண்டாம்
 சோதியுப்பு செய்நீரில் தொட்டு வாட்டே. (9)

முற்றிற்று.

(கு-பு)—

இந்நூல் "கொங்கணர் வாத நூல்" என்னும் பெயர்த்தாய் தங்க வித்தை செய்யும் முறைமையினை ஒன்பது செய்யுட்களால் எடுத்துக்கூற வல்லதாய் இறுதியில் கைம்முறை குருவித்தை செய்நீர் அம்மானை என்பதை உரை நடையில் கூறவல்லதாய் கைகண்ட முறை யெனக்கூறிச் செல்கிறது. அனுபவமுறையில் செய்தால் மன்னனாய் வாழலாம் என இது எடுத்துக் காட்டுகிறது. முற்றுமுளது.

R. No. 2298.

மூலிகை விபரம் அறுபத்துநான்கு.

MŪLIKAIVIPARAM AṞUPATTUNĀNKU.

Foll. 7 (*b*)—9. Extent, 35 granthas.

Incomplete.

This appears to be a treatise on medicine describing the medicinal herbs. But all the folios herein are lost except the first and the last. The latter describes a medicine called pūraṇam, an antidote of poisons.

Beginning :

வசீகர மூலிகையாவது—சீதேவியார் செங்கழுநீர்வேர், நிலவூமத்தை வேர், வெள்ளெருக்கன்வேர், வெள்ளைவிட்டுணு கிரந்திவேர், கருத்தப்பூச் செம்பைவேர், வெள்ளைக்கண்ணிவேர், பொடுதலைக் கையானந்த கீரைவேர், செந்நாயுருவிவேர் ஆக வசீகர மூலிகை எட்டு.

மோகினி மூலிகை

மோகினி மூலிகையாவது—பொன்னூமத்தைவேர், வெள்ளூமத்தை வேர், மருளூமத்தைவேர், கஞ்சாச்செடிவேர், கோரைக் கிழங்கு, ஆலம் விழுது, கிராம்பூ, நன்னாரிவேர் ஆக மோகினி மூலிகை எட்டு.

End :

பூரணம் ஒன்று.

* * * *

பாரப்பா சலமது கிட்டாதே போனால்
 வந்தவரை தாநடிக்க விஷம் வாங்கிப்போகும்
தாமப்பா இதைநீ நம்பிச் செயித்தா யாகில்
 நவலோகம் புவலோகம் நடுங்கி ஓடும்
போமப்பா விஷங்க ளெல்லாம் பொய்யேயில்லை
 புகழ்பெரிய ஈச்வரனார் சொன்ன வாக்கு
காமப்பா சத்தியமே சொன்னேன் சொன்னேன்
 தப்பாமல் விஷம்நஞ்சும் சத்துருவும் தவிடாய்ப்போமே.

(கு-பு)—

இந்நூல் 64 மூலிகை விபரம் என்னும் பெயர்த்து. இருப்பினும் இதில் முதலும் இறுதியுமாகிய இரண்டேட்டைத் தவிர இடையிலுள்ள பிற ஏடுகள் காணக்கூடவில்லை. இறுதிக்குப் பிறகு ஒரேட்டில் பூரணம் ஒன்று கூறப்பட்டிருக்கிறது. அது விஷம் நீங்க உதவும் எனத்தோற்றுகிறது.

R. No. 2299.

கருவூரார் பலதிரட்டு.
KARUVŪRĀR PALATIRAṬṬU.

Foll. 10—42. Extent, 216 granthas.

Incomplete.

This is same as the work described under R. No. 2288.

(கு-பு)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 2288-ஆம் எண்ணின்கீழ் வருணிக்கப் பட்டிருக்கிறது. இதில் 117 பாட்டுக்களே உள. பிற அதன் குறிப்பைக் காண்க.

R. No. 2300.

யாகூப் வைத்தியம் எழுநூறு.
YĀKŪP VAITTIYAM EḺUNŪṞU.

Palm leaf. 13½ × 1 7/8 inches. Foll. 1—132. Lines 8 on a page. Tamil, Injured. Old. Extent, 4,000 granthas.

Purchased, in 1949–50, from Sri A. M. Gopala Iyer, 28, Boge Road, Mambalam, Madras.

Complete.

This is a work on medicine by one Yākūb who appears to be the same as Rāmadēvar. This contains 744 verses and is complete. This stanzas are taken from different works on medicine.

Beginning :

பூரணியின் பெற்றெடுத்த வனுகந் தன்னைப்
போக்கோடே ஆறுமுக மாக்கி வைத்துக்கொண்ட
காரணமாய்க் கையைந்து முகந்தான் தன்னைக்
கற்பகத்தின் செல்வனைத்தான் கருத்தி லெண்ணி
நாரணனுன் மருமகனை நவின்று கூறி
நற்பாதம் சிரசில் வைத்துப் பணிந்துபோற்றி
பார்புகழும் பண்டிதத்தைப் பலநூல் பார்த்து
பார்த்தறிந்து சிந்தையினுல் பாடி னேனே. (1)

சிகையில்மதி யமுதத்தை யணிந்த வீசன்
சொல்பெரிய விடையேறி நின்றேன் தன்னை
தகையான மழுவெடுத்த பெரியோ னைத்தான்
தன்மையாய்க் காளியுடன் வாது செய்தோன்
துகையாக மானிடரைப் படைத்தோ னைத்தான்
தொன்மைதரு நகைசெய்து எறித்தோ னைத்தான்
யுகமகிழும் சிவனுடைய பாதந் தன்னை
இணையடியைத் தொழுதுபணி யியல்புள் ளோரே. (2)

* * * * *

* * * * *

ஆதிமுதல் என்பேரு ராம தேவர்
அளவாக குளிகையிட்டு மக்கா தேசம்
வீதியிலே சென்டுபுக்க சாயபு கண்டு
விரும்பியே சாத்திரத்தில் மிகவும்பேசி
நீதியாய் என்மனதில் தோற்ற மாகி
நேராக குரானையுந்தான் நேர்ந்து பார்த்துச்
ஆதியே ஞானத்தின் செயலுங் கண்டேன்
உற்றுணர்ந்து பிற்பாடு உறுதி யானேன். (6)

End :

முற்றுமே எழுநூற்றுச் சொச்சமாக
முடிவான நூலெல்லாம் திரட்டிப் பார்த்துச்
சித்திக்கு மதியரசம் கட்டி யானும்
சீர்பெறவே உலகோரும் சென்று புக்கி
பற்றுக ளில்லாமல் சோதித்துச் சரி
பார்த்திட்ட வாதமெல்லாம் சுருக்கிப் பாடி
வுற்றுமே பார்த்திட்டேன் யாகூப் பென்பேர்
உறுதியாம் எழுநூறு குருவு மாமே,

முற்றும் 744

(கு-பு)—

இந்நூல் யாகூப் என்பவரால் பல நூல்களிலுமுள்ள வாதங்களையெல்லாம் சோதித்துப் பார்த்து அனுபவத்துக்குகந்ததானவைகளை யெடுத்து முன்னோர் பாடியவாறே 744 பாட்டுக்களில் பாடி முடிக்கப் பெற்ற "யாகூப் வைத்தியம்" என்னும் பெயர்த்து. இதில் முன்னே கூறப்படும் பாட்டுக்களால் இவர் பெயரே இராமதேவர் எனக் குறிக்கப்படுவதைக் காணலாம். முற்றுமுளது. நடை நன்றாகவுளது. சிறிது சிதலுற்றுளது.

R. No. 2301.

இரசவாதம்.

IRASA VĀTAM.

Palm leaf. 12¼ × 1½ inches. Foll. 1—12. Lines 9, 10 on a page. Tamil, Injured. Old. Extent, 300 granthas.

Purchased in 1949-50, from Sri A. M. Gopala Iyer, 28, Boge Road, Mambalam, Madras.

This is a work on medicine and alchemy by some unknown author. The verses are taken from different works on the topic. The work deals with the topics briefly.

Beginning :

* * * * *

* * * * *

சித்தர்கள் கவி

மாதுமாது மன்னவன் தங்கையே
கோது கோது கொடிச்சி வெற்றிலை
வெள்ளிக் காண்டவன் சொல்லிக் குடுத்தவன்
தாய்க்கு அவர் தன்னைக்குக் கொடு
உற்றுரைப் பெற்றுரை ஊற்றிக்கொடு

என்பது.—வெடியுப்பு, சுண்ணும்பு, சீனக்காரம், துரிசி வெண்காரம் இவை சமனுக நிறுத்து எலுமிச்சம் பழச்சாறு விட்டரைத்து, புதுக்கோழி முட்டை யாகக் கொண்டுவந்து பொத்து ரசங் கழஞ்சு, கந்தகங் கழஞ்சு, பொடி செய்து போட்டு மறு முட்டையோடு கொண்டு மூடி முன்னரைத்த மருந்து கொண்டு முட்டைக்குக் கவசம் பிடித்து உலர்த்தி நிலத்தில் மணல் குவித்து மணலில் முட்டை புதைத்து நான்கு வரட்டியில் மூன்று புடம் போடவும். ஆறவிட்டு எடுக்கச் செந்தூரமாம். சகல லோகத்திலும் பேதிக்கும் பத்துக் காணும்.

End ;

* * * * *

இந்த நீரிலே அஞ்சு விராகனெடை துரிசு கட்டியைத் தோய்த்துப் புரட்டி அந்தப் பிப்பியும் சுண்ணும்பும் எலுமிச்சப் பழச்சாறு விட்டரைத்துக் கவசம் பிடித்து அஞ்செருவில் புடம் போட கட்டும்.

(கு-பு)—

இந்நூல் இரசவாத சம்பந்தமான சில வகை மருந்து முறைகளைக் கூறுகிறது. பிற நூல்களிலிருந்து எடுத்தெழுதப்பட்டதாகக் கருதப்படு கிறது. சிதலமாயது. சுருக்கமானது. பிழைகள் மலிந்துள.

R. Nos. 2302—2307 (one codex).

Palm leaf. 13¾ × 1 ⅜ idches. Foll. 1—184. Lines 9 on a page. Tamil, much injured. Old. Extent, 2,475 granthas.

Purchased, in 1949-50, from Sri A. M. Gopala Iyer, 28, Boge Road Mambalam, Madras.

R. No. 2302.

அகத்தியர் நிகண்டு.

AKATTIYAR NIGHAṆṬU.

Foll. 1—148. Extent, 1,600 granthas.

Complete.

This is same as that described under R. No. 4118.

(கு-பு)—

இந்நூல் அகத்தியர் நிகண்டு என்னும் பெயர்த்து. மூவருடக் காட்லாக்கு 4118-ஆம் எண்ணின்கீழ் வருணிக்கப்பட்டிருக்கிறது. இரசவாத சம்பந்தமான மூலிகைகளின் பெயர்களும் அதனாலாகும் மருந்துசெய் முறைகளும் முறையே ஆறு கண்டங்களாகக்கூறி ஏழாவது இலட்சண காண்டம் என்று ஒன்று தொடுகுறிபோல் கூறப்பட்டிருக்கிறது. முற்று முளது. சுமார் எண்ணூற்று பாக்களால் ஆனது. சிறிது சிதலமாயது.

R. No. 2303.

கொங்கணர் முதற் காண்டம்.

KOṄGKṆAR MUDAṞ KĀṆḌAM.

Foll. 149—154. Extent, 200 granthas.

Complete.

This is same as the work described under R. No. 267 (*a*) & (*d*).

(கு-பு)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 267 (a) & (d) ஆம் எண்களில் வருணிக்கப்பட்டிருக்கிறது. அதன் குறிப்பையுங் காண்க. முற்றுமுளது.

R. No. 2304.

கொங்கணர் நடுக்காண்டம்.

KOṄGAṆAR NAḌUKKĀṆḌAM.

Foll. 155—162. Extent, 200 granthas.

Complete.

This is same as that described under R. No. 145 (*b*).

(கு-பு)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 145 (b) ஆம் எண்ணின்கீழ் வருணிக்கப்பட்டிருக்கிறது. அதன் குறிப்பையுங் காண்க. முற்றுமுளது.

R. No. 2305.

கொங்கணர் முக்காண்டம்.

KOṄKGAṆAR MUKKĀṆḌAM.

Foll. 163—165. Extent, 75 granthas.

Complete.

This is a work on alchemy. This contains 15 verses. This is a brief resume of the work called "koṅgaṇar Mūnṟukāṇḍam"

Beginning :

கருணைதரு மூலகுரு பாதங் காப்பு
காலாங்கி காப்புகரு வூரான் காப்பு
குருவெனவே வந்தவுமை கொண்ட நாதன்
குணமான போகருட பாதங் காப்பு
தருவெனவே சொல்லி வைத்தேன் மூணுக் காண்டம்
தனையெல்லாம் சூத்திரமோர் பதினைந்துக் குள்ளே
பொருளை வெளியா யுரைத்தே னிந்தநூலைப்
போகர் கண்டு மெச்சியெனைப் புகழ்ந்திட்டாரே. (1)

புகழ்ந்திட்டார் மடபதியாஞ் சித்தர் சொன்னர்
பூட்டகம் வெளியாகிப் போச்சு தென்று
மகிழ்ந்திட்டார் கருக்குருவுஞ் சொன்ன தாலே
வல்லமையி னுலெனக்கு வாச்சு தென்று
மகிழ்ந்திட்டார் முதல் காண்டம் கருவே தென்றுல்
சொல்லிவிட்டேன் முடிவான சூத்திரமெல்லாம்
மகிழ்ந்திட்டார் நடுக்காண்ட மடியின் போக்கைச்
செப்பினதால் சித்தரென்று செயம் பெற்றேனே. (2)

End ;

நில்லென்றுல் குருவினுட தேசத்தாலே
நீயறிந்து பாரப்பா நிலைப்போ வில்லை
கல்லென்ற உப்புக்குப் பூமிசாரங்
காணுட்டால் ஒன்றுமில்லை கருத்தோணுது
வில்லென்று லம்புதைக்கும் என்செய்வாணுல்
விமலன் வந்து உபதேச மிடுவார் ஐயா
அல்லென்று லலைப்பகலு மில்லை சித்தர்
நாவாய் அடக்கி வைத்தேன் பதினைந்தில் முற்றே.

முற்றும்.

(கு-பு)—

இந்நூல் "கொங்கணர் முக்காண்டம்" என்னும் பெயர்த்தாய் மூன்று காண்டம் என்னும் நூலின் சுருக்கமாய் அமைத்துப் பாடப்பட்டுள்ளது. இரசவாத சம்பந்தமானது, முற்றுமுளது. 15 பாட்டுக்கள் அடங்கியுள்ளன. சிறிது எழுத்துப் பிழையுள்ளது.

R. No. 2306.

கொங்கணர் கற்பம்.

KOṄKAṆAR KAṞPAM.

Foll. 166—169. Extent, 100 granthas.

Incomplete.

This is same as the work described under D. No. 2414. This contains only 25 verses.

(கு-பு)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2414-ம் எண்ணில் வருணிக்கப்பட்டிருக்கிறது. அதனிடையிலுள்ள இருபத்தைந்து பாடல்கள் எடுத்தெழுதப்பட்டுள்ளன. பிற அதன் குறிப்புக் காண்க.

R. No. 2307.

கொங்கணர் 43 முக்கோண பூஜாவிதி.

KONKAṆAR 43 MUKKŌṆA PŪJĀVIDHI.

Foll. 170—183. Extent, 300 granthas.

Complete.

This is a work on medicine and alchemy in 47 verses.

Beginning :

சொல்லாத நாற்பத்தி முக்கோண சக்கரம்
  துரியா தீதங் கடந்த சோதியப்பா
சொல்லாதே யொருவர்க்கு வெளியாய்ச் சொல்வேன்
  சொர்ணத்தின் தகடானுல் மெத்த நன்று
சொல்லாதே வெள்ளிச் செம்பி லெழுத லாங்கேள்
  சித்தித்தா லஷ்டகர மெட்டு மாடும்
சொல்லாதே பிரமாண மெவ்வளவு வாகும்
  சூட்சமாய் நாற்பத்தி முக்கோணஞ் செய்யே.

End :

ஓதுநீ தூபமொடு நைவேத்தியந் தீபம்
  உத்தமனே மண்டலந்தான் செய்தா யானுல்
கோதிவிடும் அரவின் செயும் அக்கினியும் போல்
  கொடுமை மெத்தச் செய்யுமடா கூறி னேன்கேள்
பேதியா மனத்தோ ருண்மை யாகி நின்று
  பிதற்றும லிப்படியே செய்தோர்க் கெய்தும்
சோதியா யென்மகனே என்றல் தாயும்
  சோதிச்சு வாடினேன்காண் சூத்திர முற்றே. (47)

முற்றும்.

(கு-பு)—

இந்நூல் "கொங்கணர் நாற்பத்தி முக்கோண பூஜைவிதி" என்னும் பெயர்த்தாய் இரசவாத சம்பந்தத்தைப் பற்றிக் கூறவல்லதாய் 47 பாட்டுக்களையுடைத்தாய் அமைந்துள்ளது. முற்றுமுளது. சிதலமாயது.

R. Nos. 2308—2311 (one codex).

Palm leaf. 12½ × 1½ inches. Foll. 1—202. Lines, 5, 8 on a page. Tamil, Injured. Old. Extent, 2,300 granthas.

Purchased, in 1949–50, from Sri A. M. Gopala Iyer, Mambalam, Madras.

R. No. 2308.

தேரையர் ரத்னாகரம் 1001.
TĒRAIYAR RATNĀKARAM 1001.

Foll. 1—56. Extent, 700 granthas.

Incomplete.

This is same as the work described under R. No. 925. The manuscript under consideration, has 21 verses, in addition to that of R. No. 925. On the whole, this contains 538 verses, but is incomplete.

(கு-பு)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 925-ஆம் எண்ணின்கீழ் வருணிக்கப் பட்டிருக்கிறது. அதிலில்லாத 21 பாட்டுகள் இதில் அதிகமாகவுள்ளன. 'தேரையர் வைத்தியம்' என்னும் பெயர் அதன் முகப்பில் காணப்படுகிறது. மொத்தம் இதிலிருக்கும் பாட்டுக்கள் 538. முற்றுமில்லை. பிற அதன் குறிப்பிற் காண்க.

R. No. 2309.

இராமதேவர் பூஜாவிதி சிவயோகம் இருநூறு.
IRĀMADĒVAR PŪJĀVIDHI ŚIVAYŌGAM IRUNŪṞU.

Foll. 57—93. Extent, 450 granthas.

Complete.

This is same as that described under R. No. 947 (*a*).

(கு-பு)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 947 (a) ஆம் எண்ணில் வருணிக்கப் பட்டிருக்கிறது. அதன் குறிப்பையுங் காண்க.

R. No. 2310.

தேரையர் வைத்தியம் ஐந்நூறு.
TĒRAIYAR VAIDDIYAM AINNŪṞU.

Foll. 94—185. Extent, 650 granthas.

Incomplete.

This is a work on medicine by one Tēraiyar in 441 verses. It describes various medicines and tablets.

Beginning :

ஆதியாம் சிவசத்தி புதல்வா போற்றி
அரியயனுந் தேடரிய வறமே போற்றி
சோதியாம் சரஸ்வதி பாதம் போற்றி
சொற்பெரிய பொதிகைமுனி பாதம் போற்றி

சாதிபாந் சித்தாதி பாதம் போற்றி
    மகத்தான சித்தர்கள்தம் பாதம் போற்றி
ஓதியான் வைத்த வைத்திய சூத்திரம் ஐந்நூறு
    உத்தமனே தேரையன் சொல்லுறுதி பாரே.
பாரப்பா செந்தூரம் குளிகை வேது
    பற்பஞ் சூரணம் கிருதயில எண்ணெய்
தேரப்பா திராவகஞ் சர்க்கரை நெய்க்கிருதம்
    நேத்திரமை யஞ்சனமை மருந்து கற்பம்
கோரப்பா குழித்தயிலம் புகையாக்கி ராணங்
    கூழ்ப்பாண்டந் துவரெண்ணெய்க் குடிநீர் விட்டுச்
சேரப்பா மெழுகுகண் டவிழ்தம் பத்து
    செவித்தயில மூலிகையுந் தெளிந்து போற்றே. (2)

End:

எண்ணவே மரமஞ்சள் சுக்கு
    இருவேலிச் சிரமாம் மதுரங்கோஷ்டம்
வன்னமே நாகரமுந் தகரமாஞ்சி
    மகரம்பூ கிராம்பூ லாக்கிழங்கு
சொன்னோமே மிளகுமிந்தந் தும்பராஷ்டம்
    துரப்பான கற்கடக இஞ்சி மஞ்சிட்டி
சொன்னோமே செண்பகப்பூ லவுங்கஞ்
    சாதித்தி விடையம் ரோகணியுந் தேவதாரே. (441)

முற்றுப் பெறவில்லை.

(கு-பு)—

இந்நூல் "தேரையர் வைத்தியம் ஐந்நூறு" என்னும் பெயர்த்து. இதில் முற்றுமில்லை. 441 பாட்டுக்களே உள்ளன. இதில் பலவித கற்பம், எண்ணெய், இலேகியம், சூரணம், தயிலம் முதலானவைகள் கூறப்படுகின்றன. சில எழுத்துப் பிழைகள் உள. நடை நன்றாக உளது. தேரையர் என்பவரே இதற்கும் ஆசிரியர் எனக் கூறப்படுகிறது.

R. No. 2311.

அஷ்ட கர்மத் திரட்டு.

AṢṬAKARMAT TIRAṬṬU.

Foll. 186—202. Extent, 500 granthas.

Complete.

This is a treatise on alchemy by some unknown author. This contains 109 verses and this is useful for alchemists.

Beginning:

அஷ்டகர்மத் திரட்டு

கேளப்பா நமசி வாயவென்று
    மாற்கெடியான் தம்பனமாம் பலகை யாலாம்
நாளப்பா திசைகிழக்குத் தாமரைக் காயமாலை
    நலமான ஆசனந்தான் புலித்தோ லாகும்

வேளப்பா சிவாயநம யோகணமே யாகும்
வெள்ளலரி மேதிசை மிளகு மாலே
சூளப்பா ஆசனந்தான் கேசரித்தோ லாகும்
சொற்பெரிய சிவயநம மாரணமாகும். (1)
ஆமப்பா பலகையது அத்தியாகும்
அக்கினியாந் திசைநாவி மணிதரள மாலே
வேமப்பா ஆசனநதான் மான்றே லாகும்
விள்ளரிது வயநமசி யுட்சாடன மாகும்
நாமப்பா நமசிவய மென்று மாற்றுன்
விளமர பலகை கேளே. (2)

End :

கரவாமல் அங்வங் சிவாய வென்று
ஓதினல் சுவாதிஷ்டான முண்மை காணும்
மறவாமல் வங்கசிங் சிவாயநம வென்று
ஓதினல் மகத்தான அனுகத்தை மகிழ்ந்து காணும்
பிறவாமல் உளம்ஓம் சிவாயநம என்றல்
வியலான விசுத்திதனை யிருப்பில் காணும்
பிறவாமல் சிங்சங் சிவாயவென்றல்
பெரியை யாக்கினைதான் காண லாமே. (109)

(கு-பு)—

இந்நூல் " அஷ்டகர்மத் திரட்டு " என்னும் பெயர்த்து. பலவித மந்திர சாதனைகளைக் கொண்டு பலவித சித்து வித்தைகளை யாடலாம் எனப் பகருகின்றது. 109 பாட்டுக்களடங்கியுள்ளது. முற்றுப்பெற்றதெனத் தோன்றுகிறது. இரசவாதம் செய்பவர்கட்கு மிகவும் பயன்படக்கூடியது.

R. Nos. 2312—2314 (one codex).

Palm leaf. 14¼ × 1½ inches, Foll. 1—32. Lines, 5, 7 on a page. Tamil. Much injured. Old. Extent, 490 granthas.

Purchased in 1949-50 from Sri. A. M. Gopala Iyer, 28, Boge Road, Mambalam, Madras.

R. No. 2312.

சரநூல் (உரையுடன்).

ŚARANŪL (with Commentary).

Foll. 1—24. Extent, 250 granthas.

Incomplete.

This is same as the work described under D. No. 2285.

(கு-பு)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2285-ஆம் எண்ணின்கீழ் வருணிக்கப்பட்டிருக்கிறது. முற்றுமில்லை. அதன் குறிப்பையுங் காண்க.

R. No. 2313.

சோதிடம்.
ŚŌTIḌAM.

Foll. 25—28. Extent, 90 granthas.

Incomplete.

This is same as that described under D. No. 2365. Though apparently, it seems to be a treatise on astrology, it deals with appropriate time for curing diseases.

(கு-பு)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2365-ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப்பட்டிருக்கிறது. இதில் சோதிடம் என்றிருப்பினும் வைத்தியம் செய்பவர்கட்குரிய காலவகையினை நிர்ணயித்துச் சொல்வதால் வைத்திய சம்பந்தமான சோதிடத்தைச் சார்ந்தது எனலாம். சிதலமாயது.

R. No. 2314.

திருமூலர் குளிகைமுறை ஐம்பது.
TIRUMŪLAR KUḶIKAIMUṞAI AIMPATU.

Foll. 29—32. Extent, 150 granthas.

Complete.

This is a collection of stanzas on medicine, Tambanam and ñānam. Ideas from different works are taken Style is good.

Beginning :

மூலர் மொழிந்தது முந்தி யெண்ணூயிரம்
மருகால் மொழிந்தது மருத்துவ மாயிரம்
பாலர் மொழிந்தது பத்தி மூவாயிரம்
சீலர் மொழிந்தது திரட்டுரே னீராயிரம். (1)

ஆயிரம் அய்ந்நூறு அதன்பின்பு முந்நூறு
கோதி லதின்பின்பு குளிகை ஐம்பது
பேதி லதின்பின்பு எடுத்திடு முப்பது
சாயிர மூன்று தனியொன்று நீரானதே. (2)

தம்பனம் தன்னைத்தான் கட்டும் ஆறுகேள்
நம்பித் திரனிடந் தாளகந் தன்னொடு
கொம்பிச்சி மூலக் கிழங்கின் சாற்றில்
வெம்பி யேழுசாமம் விட்டரைச் சாரே. (3)

End :

காணுமே முக்கால் கடிதான மந்திரம்
காணுமே மூலங் கண்ட மெழுத்துடன்
காணுமே நாளும் கரையிந்தப் பூரணம்
காணுமே நாளுங் கரைகண்ட வாரே. (51)

வாறுன பொற்குளி கைக்கு மாத்திரம்
பேறுன முத்துப் பவரி அவ்வுடன்
சேறுன சவனங் கிழங்கையும்
வீறுன அய்யும் வெட்டவெளி மூலமே. (52)

(கு-பு)—

இந்நூல் திருமூலர் குளிகை ஐம்பது என்னும் பெயர்த்து. தம்பனம், வைத்தியம், ஞானம் ஆகிய மூவகைகளை விவரிக்கிறது. நடை நன்கு அமைந்துள்ளது. பல நூலினின்றும் எடுத்தாண்ட கருத்துக்களைத் திரட்டித் தந்துளதாகக் கூறப்படுகிறது. முற்றுமுளது. எழுத்துப் பிழைகளுள.

R. Nos. 2315 and 2316 (one codex).

Palm leaf. 14½ × 1½ inches. Foll. 1—151. Lines, 10, 12 on a page. Tamil. Much injured. Old. Extent, 6,000 granthas.

Purchased in 1949–50 from A. M. Gopala Iyer, 28, Roge Road, Mambalam, Madras.

R. No. 2315.

தன்வந்திரி வைத்திய சிந்தாமணி அமர வெண்பா வந்தாதி.

DHANVANTARI VAIDDIYA CINTĀMAṆI AMARA VEṆPĀ VANTĀDI.

Foll. 1—77. Extent, 3,000 granthas.

Incomplete.

This is a treatise on medicine. This contains only 1,142 stanzas. It is not certain whether Dhanvantari has written the work or not

Beginning :

பரமசிவன் அயன்மால் பார்வதி கணேசன்
அரிய பராசக்தி முதலாக—விரவு தெய்வம்
தன்னைவணங் கித்துதித்துத் தன்வந்தரி பகவான்
சொன்னகிரந் தத்தமிழைச் சொல்வேன். (1)

தமிழால் வைத்திய சிந்தாமணி யென்னும் பேர்
அமரவெண்பா வந்தாதியாக—இமையவர்க்கு
சம்மதியா கப்பாகச் சங்கைகண பேதைவகைக்
கம்முநித்து பேதவழி காண். (2)

கானெந்த நூல்களுங் காண்பரிய சூதகுணம
தோணுரச கெந்தத் தோஷ—நாணுப்
பரிகரித் துச்சாத் தியமும் பார்த்து
தெரியும்படிக் கவுழ்தந் செய். (3)

செய்திடிற் தோஷத்தைத் தீர்ப்பவாகரு யாகாதி
செய்தபல னென்று மறை செப்புதலாற்—செயபுட
வகைகார்க்கும் பிறகபாலத் தின்மூலி மையால்
தாக்கப் பெருனட்வருந் தான் (4)

தானே ரசத்துக்குச் சத்த தோஷங்க ளுண்டு
மானே பதின்பேர் வகுத்துரைத்தேன்—ஈனமாம்
நாவங்கக தோஷம்நவி லுங்கிரிமி தோஷமாகும்
வன்னிசரந் சலியதோ ஷம். (5)

End :

அருவைக்கு.

ஒத்தசங்கு பற்பமோரு காசளவாழை யுத்தக்கனி
உள்ளில்வைத்து உண்டிடுகில்—பத்து நாள்
இப்படியே கொள்ளிலியல் வைத்தியத்திலுள்ள குவை
செப்பமுடன் கரையுந் தேர்ந்து. (1141)

பாஷாணவேகத்துக்கு.

ஆனையரு கங்கியாழங் குடித்தேங்காய்ப் பாலு
பானை யிரக்காய் கஞ்சியும்—பாகல் வேர்ப்
பூநெருஞ்சி வேர்வெந்த நீரருந்தும் வெள்ளாட்டுப்
பாலில்நீர் கொள்ளப்பா ஷாண விஷம் நீங்கும் (1142)

(கு-பு)—

இந்நூல் " தன்வந்தரி வைத்திய சிந்தாமணி அமர வெண்பா வந்தாதி " என்னும் பெயர்த்து. இது 1,500 பாட்டுக்கொண்டதொரு பெயராயினும் இதில் 1,142 பாட்டுக்களே உள்ளன. எஞ்சிய காணப்பெறவில்லை. ஆதலின் முற்றுப்பெறவில்லை. வெண்பா வந்தாதியாகத் தொடங்கினும் வெண்பா விலக்கணம் வழுவிப் பாடப்பட்டுள்ளது. இலக்கணப்பொருத்த முற வைத்திய மூலிகைகளின் பெயர்கள் அமைத்துப் பாட முடியாதன போலும். இதில் பல சுத்தி வகைகளையும் லேகிய வகைகளையும் இன்னும் பிறவற்றையும் கூறிச்செல்லுகிறது. நன்றாகவுளது. " தன்வந்தரி பகவான் சொன்ன தமிழைச் சொல்லுகிறேன் " எனத் தொடங்குவதால் இதன் ஆசிரியர் தன்வந்தரியோ, அல்லது அவருடைய சீடரோ என ஐயுற இடமுளது. சிதலமாகியுளது.

R. No. 2316.

தட்சிணாமூர்த்தி வைத்தியம் கடைக் காண்டம் அறுநூறு.
DAṬCIṆĀMŪRTTI VAIDDIYAM KAḌAIKKĀṆḌAM AṞUNŪṞU.

Foll. 78—151. Extent 3,000, granthas.

Complete.

This is a rare and important treatise on medicine and alchemy This contains 600 verses written by Dakṣiṇāmūrtti.

Beginning :

கருணைதரு மைங்கரனே காப்பு வாணி
கலந்திந்த சூத்திரந்தான் கருவாய்ப் பாட
திருவுமையாள் மனோன்மணித்தாய் செப்பக் கேட்டுத்
தெளிந்திந்த குருநூலாகத் திரட்டிப் பாடக்

குருமகிமை சித்தியுண்டாம் ஞானம் வாய்க்கும்
குபேரனென நிதியிருந்துங் கூடுங் கூடும்
பெருமை பெறக் கீர்த்தியுண்டாம் சித்தர்க் கெல்லாம்
பெருநூலைக் குறுக்கியிந்த அறுநூறு தானே. (1)
தானென்ற வாசிமுதல் ஞான யோகம்
தவறாது வாதமுதல் வைத்தியமுஞ் சித்தி
வானென்ற சிவயோக போகங் காணும்
வைத்தியத்துக் கிதுவுயிர்காண் மருந்தின் வேகம்
நானென்ற ஆணவமும் ஆசை தள்ளி
நடந்தக்கால் இந்நூலில் மகிமை மெத்த
தேனென்ற பாற்கடலும் கர்ப்ப மாகும்
திரட்டியொரு கட்டியாய்த் தெளிந்த காப்பே. (2)

End :

அறிவார் பூபதி செந்தூரம்
அழகாய் முடிப்போ ரார்வந்தான்
பிறியா நோயும் பிணிதீரும்
பிறமா யழைத்தால் பேசிவிட்டுச்
சிறியேன் போறே னெனத்தொழுவார்
திறமாம் பூபதி மார்க்கமிது
குறியாம் வைத்தியர் காணுமல்
கோடிக் கொருத்தர் இருப்பாரே. (594)

முற்றும்.

(கு-பு)—

இந்நூல் " தட்சிணாமூர்த்தி வைத்திய கடைக்காண்டம் " என்னும் பெயர்த்து. அறுநூறு பாட்டுக்கள் கொண்டது. முற்றுமுளது. வைத்தியத்தையும் இரசவாதத்தையும் பற்றிக் கூறிச்செல்கிறது. மிகவும் சிதலமாகியது. எழுத்துப்பிழைகள் மலிந்துள. மிகவும் பயன்படக்கூடிய தொரு நூல்.

R. No. 2317.

தட்சிணாமூர்த்தி வைத்திய மெய்ஞ்ஞானம்.
DAṬCINĀMŪRTTI VAIDDIYA MEYÑĀNAM.

Palm leaf. 9¼ × 1⅜ inches. Foll. 1—293. Lines, 7—9 on a page. Tamil. Much injured. Old. Extent, 6,000 granthas.

Purchased in 1949-50 from Sri A. M. Gopala Iyer, 28, Boge Road, Mambalam, Madras.

May be complete.

This is an important treatise on medicine and alchemy by Dakṣiṇā-mūrtti. This contains 1,438 stanzas. It is said in this work that one should enter the medical profession only after having attained divine inspiration.

Beginning :

சீரணமுடைய காளை சிவன்மகன் தமிழிலானை
வாரணி முலையாள் பெற்ற மதகிரி வல்லோரிந்த
நாரணர் மருகன் செஞ்சொல் நற்றமிழ்க் குடையோன்பூஜை
காரண முடைய தும்பிக் கணபதி காப்புத்தானே. (1)

காப்பறிந் துரைகள் சொல்லும்
கரிமுகன் சுப்பிர மணியன்
பூப்பணி ஆரம் பூண்ட
புனிதனே சிவனைப் போற்றி
நாற்கலைக் குடைய கந்தன்
நாலிரண்டு முகத்தோன் பாதம்
கூப்பியே தொழுது போற்றி
குருமொழி கூறு வேனே. (2)

கூறுவேன் வீர பத்திரன்
குகன்வ யிரவன் பாலர்
நாருதி பத்திர காளி
நாயகி பாதம் போற்றி
மாருதிக் குபதே சித்த
வால்மீகி மயக்கம் தீர்த்த
ஆரண பொருள றிந்த
அகத்தீசர் காப்புத்தானே. (3)

அகத்தியர் மெய்ஞ்ஞா னத்தை
ஆயிரத் தைந்நூறு தன்னில்
செகத்திலே யறிந்து கொண்டு
சித்தர்கள் தெளிந்து பார்க்க
உகத்தினில் சரக்கு வைப்பூ
உறுதியாய்க் கட்டிப் பார்க்க
அகத்தினில் உதவிசெய்ய
அபிராமிக் காப்புத்தானே. (4)

அபிராமிக் கடாட்சத்தாலே
அடியேனும் சித்தனாகி
தவறாமல் குருவைக்காட்டி
சதாசிவ னடி பணிந்து
கவிஞான வேதனாகி
கவடகம் முனையும் தள்ளி
சிவஞான பாடல்செப்பு
திருபுரை சரணந்தானே. (5)

* * * * * *

* * * * * *

* * * *

* * * *

காணப்பா பித்தசுரங் காணு மாகில்
கஷாயமடா தும்பைவேர் பேய்ப்புடலி னோடு
கோணப்பா கொத்த மல்லி சுக்குக் கூட்டி
குறையாதே பணவிடையாய் நிறுத்துப் போடு
ஊணப்பா சிறுபருப்புத் தொட்டுக் கூட்டு
உரைப்பான வால்மிளகு திப்பிலியுங் கூட்டு
நீணப்பா ஒருநிறையாய் நீர்படி மூன்றுக்கி
நிச்சயமாய் மூன்றுநாள் கொடுக்கப் போமே. (150)

End :

மருவியதோர் பசுவின்பால் படிதான் பத்து
வகையாகச் சொல்லுகிறேன் மைந்தா கேளு
மருகவே பானையிலே யிடடு மைந்தா
வகையாகக் கற்கண்டு பலமு மிட்டு
மருகவே காய்ச்சட பாசருளி கோலில்
மைந்தனே குருகையிலே சர்க்கரைப் போலாமே. (1420)

ஆமப்பா இதற்கெல்லாம் பூஜை வேணும்
வாகான திருவடியே காணவேணும்
தாரப்பா தியானத்தை மறக்கலாகா
தருவான குருணீறு தப்பவாகா
ஓமப்பா இப்படியே இருந்தா யாகில்
உத்தமனே வித்தையெலாம் உறுதிதானே. (1421)

* * * *

காணுமடா சொல்லிவிட்டேன் மறைப்பெல்லாம் நீக்கி
கருக்கண்டுக் குருக்கண்டுங் கருதிசெய்ய
ஆணுவத்தை விட்டுவிடு தாயைப் பூசி
அப்பனே சொல்லுகிறேன் அறிந்துகொள்ளு
பாணுவென்ற பாத்திரமோ விதற்குப் பூஜை
பாடினேன் மெய்ஞ்ஞானம் தானே. (1428)

(கு-பு)—

இந்நூல் "தட்சிணமூர்த்தி வைத்திய மெய்ஞ்ஞானம்" என்னும் பெயர்த்து. 1,500 பாடல்கள் என முதலேட்டில் எழுதியிருந்தும் வாழ்த்துப் பாடுக்கள் பத்தும் சேர்த்து 1,438 பாட்டுக்களுள. ஆதலின் மற்றவை எழுதப்பட்டோரால் விடப்பட்டனவோ அன்றி முழுவதும் இவைதானோ என ஐயுற இடமுளது. இதில் சிவன், சத்தி யருளால் ஞானம் பெற்றுப் பின்பு வைத்தியம் செய்யத் தொடங்கவேண்டும் என்று கூறுகிறது. வைத்தியம் இரசவாதம் இரண்டினைப்பற்றி விரிவாக யுரைக்கிறது. தட்சிண மூர்த்தி யென்பவர் இதன் ஆசிரியர். எழுத்துப் பிழைகளுள. மிகச் சிதலமாயது.

R. Nos. 2318 and 2319 (one codex).

Palm leaf. $9\frac{1}{8} \times 1\frac{3}{16}$ inches. Foll. 1—79. Lines, 5, 6 on a page. Tamil. Much injured. Old. Extent, 400 granthas.

Purchased in 1949-50 from Sri A. M. Gopala Iyer, 28, Boge Road, Mambalam, Madras.

R. No. 2318.

அகத்தியர் வாதம் நூறு.

AKATTIYAR VĀTAM NŪṞU.

Foll. 1—42. Extent, 200 granthas.

Complete.

This is same as the work described under R. No. 145 (d). This is a treatise on alchemy. The first folio wrongly gives the title as Vaittiyam instead of Vāta Sūtram.

(கு-பு)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 145 (d)-ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப் பட்டுளது. முற்றுமுளது. இரசவாதத்தைப்பற்றிக் கூறுவது. என்ன காரணத்தினாலோ முதலேட்டின் முகப்பில் " வாதசூத்திரம் " என்பதற்குப் பதிலாக " வைத்தியம் " என்று குறிக்கப்பட்டிருக்கிறது. இது தவறுனது.

R. No. 2319.

திருமூலர் வகார திரவியம் இருநூறு

TIRUMŪLAR VAKĀRA TIRAVIYAM IRUNŪṞU.

Foll. 43—79. Extent, 200 granthas.

Complete.

This is same as that described under R. No. 503 (a). The present manuscript has a different title as " Tirumūlar Vakāra Tiraviyam Irunūṟu ". It is called as Tirumūlar Sūtram Iṟunūṟu in the manuscript of R. No. 503 (a).

(கு-பு)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 503 (a)-ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப் பட்டிருக்கிறது. முற்றுமுளது. சிதலமாயது. அதன் குறிப்பையுங் காண்க. அதில் " திருமூலர் சூத்திரம் இருநூறு " எனப்பெயர் இடப்பட்டிருக்கிறது.

R. No. 2320.

உரோமரிஷி வாதம் ஐந்நூறு.

URŌMARIṢI VĀTAM AINNŪṞU.

Palm leaf. $11 \times 1\frac{5}{16}$ nches. Foll. 1—89. Lines, 9 on a page. Tamil. Much injured. Old. Extent, 2,000 granthas.

Incomplete.

This is same as that described under R. No. 258. This contains 58 stanzas only.

(கு-பு)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 258-ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப் பட்டிருக்கிறது. முதல் 58 பாடல்களில்லை. மிகவும் சிதலமாயது. பிற அதன் குறிப்பைக் காண்க.

R. No. 2321.

மந்திரம்.

MANTIRAM.

Palm leaf. 4⅝ × 1¼ inches. Foll. 1—29. Lines, 8 on a page. Tamil. Much injured. Old. Extent, 40 granthas.

Complete.

This is a work on black-magic. The stanzas are addressed to one Michael in the assumed name of Dēśikar. The authorship is not certain.

Beginning :

கட்டுவசியம்

சீர்கொண்ட வனக்கடவுளின் ஏவல்செலுத்து இன்ற
பேர்கொண்ட அச்ச சிஷ்ட்ட மாலையின் பெருமையைப் பேசுதற்குப்
பார்கொண்ட சத்துரு சங்கார மாலையைப் பகர்ந்திடவே
கார்கொண்ட வெள்ளி மலையோனுடை திருவடி காப்பதுவே.

மனவசியம்

பெருகு மகிஷ்ட்டமிக் கெலுன்மாலையைப் பேசுதற்குத்
தருவார் வாத்திருஞ் சிற்பா தத்தை தயவுடனே
வருவா சினந்து வழுக்கொண்ட பேயை வரததளிக்க
வுருவாக யென்னுவில் வருவார் மிக்கே பெண்டவுத்தனே.

பிசாசை அடைக்க வசியம்

கத்தி அலரிவரும் பேய்கள்....வுங் கலங்கிடவே
குத்தி யிருத்தும் கதிவிசை யாலே கொடுமை செய்து
எட்டுத் திசையுமைக் இன்ற பேயை இறுககட்டி
வட்டத்துக் குள்ளே அடைபார்மிடு கலெண்டு வாழ்த்திடவே

End :

கவி—வசீகரம்

சொன்ன சொந்தக் கவியர் பெரும்பாட்டுப் பாடுவார்
என்ன சன்னக்கவி யேதுவென்று கேட்பவரை எதிர்த்தவரை
என்ன சந்தமடா டவரையே கிழித்துச்
சின்ன வினுலே அடிப்பார்ப்பர் மெக்கெல்லென்ற தேசிகனே.

(கு-பு)—

இந்நூல், மெக்கெல் என்பவரைத் தேசிகனே என்று விளித்துச் சகல வசியங்களைப் பற்றியும் சக்கரங்களோடு எடுத்துக்கூறுகிறது. மிகவும் சிதலமாயது. மெக்கெல் என்பவரை ஞானசிரியராக வைத்துப் பாடப்பட்டிருக்கிறது. பாடியவர் இன்னாரெனப் புலப்படவில்லை. இது அனுபவத்தில் கண்டவைபோலும்.

R. Nos. 2322—2326 (one codex).

Palm leaf. 15¼ × 1⅝ inches. Foll. 1—45. Lines, 9 on a page. Tamil. Much injured. Old. Extent, 1,260 granthas.

Purchased in 1949–50 from Sri A. M. Gopala Iyer, 28, Boge Road, Mambalam, Madras.

R. No. 2322.

சிருட்டி தத்துவம்.

ŚIRUṬṬI TATTUVAM.

Foll. 1—17. Extent, 475 granthas.

Seems to be complete.

This is a work on philosophy by some unknown author. Verse and prose are available in this. This must be deemed as an important treatise for philosophars and logicians.

Beginning :

லோக சிருஷ்டிப்பு, உடற்கூறு தத்துவம்.

ஆதி காலத்திலே அண்டமும் பிண்டமுந் தானுய் அரூபமாயிருந்த காலத்திலே நிர்மல மென்னும் பேர். நிர்மலமெப்படிப் போல வென்றால் அட்டமில்லை; அனுக்கமில்லை; அண்டமில்லை; பிண்டமில்லை; இருளில்லை; வெளியில்லை; சந்திரனில்லை; சூரியனில்லை; சிருஷ்டி, இரட்சை, சங்காரங் களில்லை. எல்லாந் தானுய்த் தன்னைத் தானறியாத காலையிலே தம்மைத் தாமறிய வேண்டி சிருஷ்டிக்க வேணுமென்று விசுவரூபமானுர். அது விசுவரூப மென்றும் பொருந்த விசுபசிட்டையே............னேயென்னில் தட்டுத் தர்ப்பர சங்கம் நரமிருகப் பட்சிகள் இதுவெல்லாம் சிருஷ்டிக்க வேண்டி..... சம்பு நிலையானுர்.

End :

வாதபித்த சிலேத்தும மென்கின்ற பாரிக் காரரும் பட்டு சத்த கோடி மகாமந்திர மென்கின்ற........பயதழமும் பட்டு, அஷ்டமத யானைகளும் பட்டு நாலுவேத மென்கின்ற புரவிகளும் பட்டு, சுத்தர் அசுத்தர் என்கின்ற தேவிமாரும் பட்டு இருவினையென்கிற தேவிமாரும் பட்டு சுத்த மசுத்த மென்கின்ற இரண்டு மகற்றி வெட்டவெளியாய் வெளிக்குள் சத்தமே வடிவாய், அச்சத்தமும் சித்தாய் அச்சித்தமும் வாழாந்தே வெளி வெளியாய், மினி மினிப் பிரகாசமாய் இருக்கும்.

* * * *
* * * *

(கு-பு)—

இந்நூல் (உலக சிருட்டிப்பு) என்னும் பெயர்த்தாய் உடற்கூறு தத்துவம் என்பது முதல் தொடங்கி பாட்டும் வசனமும் இடையிடையே கலந்து வரப் பெற்றதொரு நூல். தத்துவ வகையினைச் சார்ந்த நூல் வகையில் சேர்த்துக் கொள்ளப்படுவது. தர்க்க வாதிகட்கும் தத்துவ வாதிகட்கும் மிகவும் பயன் படுவதாகும். மிகவும் சிதலமாகியது. முற்றுப்பெற்றதாகத் தோற்று கிறது.

R. No. 2323.

நாதாந்தம்.
NĀDĀNTAM.

Foll. 18—25. Extent, 225 granthas.

Complete.

This is a treatise on the attainment of Mōkṣa or final emancipation. This is similar work to those of "Nādānta darisanam", "Nādānta Nōkkam", etc., of unknown authorship.

Beginning :

அஞ்செழுத்தை யறியாம லுலகிலேதான்
யுழன்றுதிரி மானிடரே யுரைக்கக் கேளீர்
ஈரேழு தத்துவமும் வெளுத்து நாலெழுத்து
இயல்பான அஞ்செழுத்து எல்லை யில்லா
பேரெழுத்தும் பெரியெழுத்தும் அறியமாட்டார்
பெரியதொரு குருக்க ளென்றே பேசுவீர்கள்
ஈரெழுத்து மவ்வெழுத்து அறியுங் காலம்
எல்லையில்லாப் பேரொளியோ டெண்ண லாமே. (1)

சோதிகுரு நாதனென்னை நாட வேண்டி
தொல்புவியில் திருவருள் தோன்றி நின்று
நீதிகுரு கனகசபா யன்பாய் வந்து
நேருடைய அஞ்செழுத்தி னிலைமை காட்டி
ஆதியெனும் விந்து நாதத் தடவு தாட்டி
அப்பாலே ஓங்காரம் ரீங்காரம் காட்டி
சோதிகுரு திருவடியே அகார மாக
சொன்னபடி யாவருக்கும் சொல்லொ ணுதே. (2)

End :

அவயோகி யானவர்கள் குகையிருந்து
ஆசனத் திருந்துகொண்டு அநேக காலம்
சிவயோக மாகவே இருப்போ மென்று
செப்புகின்ற பொய்யருடன் சேர வேண்டாம்

நவயோக மானகுரு நாதன் பாதம்
நலமுடனே சென்னியின்மேல் நாடி நின்றால்
சிவயோக மாகவே இருப்போ மென்று
சென்றடைந்து மெய்விளநில் சேர லாமே. (3)

உண்ணும்போ தீரெழுத்தா லுயிரடக்கி
உறங்குகின்ற போதெல்லா மதுவே யாகி
பெண்ணினம்பால் இந்திரியம் விடுபோ தெல்லாம்
பேணியுயிர் மேலழுங்கி யதுவே யிகந்து

திண்ணிங்கா யிலைமிளகும் அதுவே யாகி
செய்யவே ஞள்தோறுஞ் செலுத்த வல்லார்
மண்ணினங் காலினு தூளி காலம்
நள்ளருங் காலன் இரிந்தோடு மரணமாறும்.

கு-பு)—

இந்நூல் (நாதாந்தம்) என்னும் பெயர்த்தாய் மோட்சம் அடைவதற்கு வழி முறைகளை எடுத்தியம்புகிறது. ஞானத்தை யுணர்த்துகிறது. ஆசிரியர் பெயர் தெரியவில்லை. நாதாந்த தரிசனம், நாதாந்த நோக்கம் முதலாய நூல்கள் போன்றே அதனினும் வேறதாய்க் காணப்படுகின்றது. முற்றுப் பெற்றது போலும். சிதலமாயும் எழுத்துப் பிழையுடைத்தாயும் காணப் படுகின்றது. சிறியதோர் நூல்.

R. No. 2324.

லாட சூத்திரம்.

LĀḌA SŪTTIRAM.

Foll. 26—35. Extent, 280 granthas.

Complete.

This is a treatise on alchemy containing 32 verses by some unknown author.

Beginning :

நெஞ்சக் கரத்தில் நினைந்திடும் வண்ணம் நிசவயணம்
தஞ்சக் கரத்தை நினைமனமே வினைதா னகலும்
கஞ்சக் கரத்திரு வந்தா சிரியக் கலித்துறையின்
பஞ்சக் கரக்குஞ் சரம்போற்றி வஸ்து பலித்திடவே. (1)

பலிக்குஞ் சிவானந்த மூர்த்தியின் பாதம் பணிகவருள்
கெலிக்குங் கண்டா யருளா னந்திபாதங் கெதிமனமே
வலிக்கும் பொழுது அவனவள் பாதம் வணங்குநித்தம்
மெலிக்கின்ற நோயறும் முப்பத் திரண்டும் விளம்பிடவே. (2)

காமாலை கீழ் நெல்லி கடுபா னடுமேவுரி யிலக்கம் பரிசிரொட்டித் [தருவாய்
கனைகுன்றி சீலை கோரைகறு வாங்கி நிப்புறுதி கதறிடுந் தோட்டி [மிளகால்
மாவெனத் தென்னை யமுதமா லிங்கிலை அகன்றிடும் அண்ட [வாதம்
அதிகவிஷ மானசெய் யானவன் வரைக்கிளுவை
வாகம்பூப் புசுசினம் நீவுறில் பூமிதனிலே.

* * * *

* * * *

End :

ஒன்றான தங்கமது பாணீ செய்வீர்மது
உன்னுவு நீரிலாட்டி
ஒருமூடி வைமேலு மொருமூடி அடைசீலே
உயர்வாலு கெந்தி தீபம்
பொன்றும லெரிமத பதங்கமதி யிரவி
யொடுவயத் துச்சந் தான
பொய்யாது நாகாச கெந்தியுள வாகு
அரிப்பொடு நீரே சுறுக்கு

நன்றான ரவிமதியில் நின்றடு தாய்தாம
முதனருள் வேணுமையா
நாவலரில் வேதாந்தி யானவர்கள் பொருளறிவர்
நாசமுறு வார றிவரோ

நின்றான கருவுளது முப்பத் திரண்டிலும்
நிலைமனது தோளிலுப் பரியாம்
நிசபரி பிறசங்கா ரணவச பரிதுரங்
காரன நிறையதி பாங்க ரவரே. (32)

ராவென்று ரண்டபிண்டம் நாடியறி யெங்குமது
ஆவென்றார் சிம்மா யடங்குமறி மூலமென்றார்
ஆவென்றார் மேலும் அதனைச்சம மெளிதஞ்செய்
ஆவென்றே வந்துமுன் னின்றடு சித்தி முற்றே.

(கு-பு)—

இந்நூல் (இலாடசூத்திரம்) என்னும் பெயர்த்தாய், இரசவாத சம்பந்த மான சித்து முதலியவைகளைப் பற்றிக் கூறுகிறது. சிதலமாயியது. 32 பாடல்களடங்கியது. ஆசிரியர் இன்னாரெனத் தெரியவில்லை.

R. No. 2325.

அஞ்சன வகை.

ANCANA VAKAI.

Foll. 36—40. Extent, 140 granthas.

Incomplete.

This is a treatise on medicine and describes the preparation of medicines from the particular herbs. Authorship is not known.

Beginning :

பாதாள அஞ்சனம்.

பாதாள அஞ்சனம்.—கருத்தப் பருத்திப் பஞ்சும் வெள்ளை யெருக்கன் வேரும் சிற்றாமணக் கெண்ணெய் நல்லெண்ணெய் புத்துத் தேனில் கூட்டி யிடவும். கன்னங் கறுத்த பசுவின் நெய்யிதுவிறும் காலத்தில் சிசுவாலைய மாகிலும் சுடு காட்டிலாகிலும் மைப்பற்றி விக்கவும். கைச்சாளியாக்கிக்

கொள்ளவும். சறுவமைய பூமிப் பரீட்சை சறுவ அஞ்சனம் கருத்த ஆட்டுப் பிச்சு, அசோகம் வேர் செம்பருத்திப் பூவும் புத்துத்தேன் வார்த்தரைத்துக் கையிலிட்டுப் பார்க்க சர்வமும் தெரியும். கருந்துளசி விதையும் கர்ப்பூரமும் வறுத்துக்கையிலிடச் சர்வமும் தெரியும்.

End :

காட்டு மல்லிகை மூலத்துடனே பிடுங்கித் தயிர் வார்த்தரைத்துப் பூமியை மெழுகவும். மெழுகினால் வெளுத்திருந்தால் ஒன்றுமில்லை. பொன்னிறமானால் பொன்னென்றும் சிவந்திருந்தால் தாமிரமென்றும் நீலமானால் பாசாண மென்றும் அறியவும். கெந்தகம், மனோசிலை, தாமரைச் சாறு வார்த்து நிலத்தை மெழுகினால் சுவற் கெதியை விட்டு விபரீதமாயிருந்தால் உண்டென்று நம்பவும். குக்கினமாவும் நல்லெண்ணெயும் கள்ளுங் கலந்து அந்தியும்போது மெழுகி இராத்திரி பார்த்தால் விளக்குப் போலெரியும். அவடத்திலுண்டென்றறியவும்.

(கு-பு)—

இந்நூல் " அஞ்சன வகை " என்னும் பெயர்த்தாய், பலவகை அஞ்சன வகைகளைச் செய்யும் முறைமையினைக் கூறி அதனாலடையும் பயனையும் கூறிச் செல்கிறது. முற்றுப் பெறவில்லை. இது போன்றவைகள் வைத்திய நூல்களில் காணப்படுகின்றன. எழுத்துப் பிழைகள் உள.

R. No. 2326.

நிதி சாத்திரம்.
NIDHI ŚĀTTIRAM.

Foll. 41—46. Extent, 140 granthas.

Incomplete.

This work describes the places where treasures are to be found. This is said to be the topic on which Lord Siva instructed the sages of the Naimiśāraṇya.

Beginning :

நிதி பெருதீப மென்கின்ற சாத்திரத்தை நீலகண்டமுடைய ஈசுவரர் சொன்னதாயிருக்கும் சகலமான சாத்திரங்களிலும் சகல புராணங்களிலும் எடுத்துக்கொண்டு ஈசுவரர் சொன்னது வெவ்வேறு பிரிந்திருக்கப்பட்ட சுலோபமாயிருக்கும் மந்திரங்களை விட்டுத் தாரித்திர மென்கின்ற ஆணவத்தினாலே சிறுதாய்ப்பட்டு இருக்கும். அது தானே வென்றால் ரிஷிகள், முனிவர்கள் நிதியில்லாமலிருந்த வேளையிலே நைமிசாரண்ய வனத்திலே தேவர்கட்கு எல்லாம் தேவனாயிருக்கிற ஈசுபரனை நோக்கித் தபசு பண்ணினார்கள். கர்த்தனாயிருக்கிறவன் நமக்கு உபாயம் என்னவென்று தேவர்களும் ரிஷிகளும் கேட்க ஈசுபரர் சொல்லுகிறார். நிதி சாத்திரம் என்றொரு சாத்திரம்.

End :

உடல் மனிதருடல் போல் முகம் ஆட்டுமுகம் போலேயிருந்தால் அவ்விடத்திலே ஆயிரமுண்டென்றறியவும். கையை நீட்டிக்கொண்டு கிடக்கிறது போலே யாதொரு பிரதிமை யுண்டே அதற்குப் பெலி மந்திரங் கொண்டு எடுக்கவும். மூன்று காலுள்ள பிரதிமை கையிலே பாசம் பிடித்துக்கொண்டு இருந்தால் அந்தக் கையை நீட்டின அளவுக்குங் கீழே இருக்கிற தென்றறியவும். ஒரு விக்கினமுமில்லை யென்றறியவும்.

முடியவில்லை.

(கு-பு)—

இந்நூல் (நிதிசாத்திரம்) என்னும் பெயர்த்து ஈசுவரனூர் நைமிசாரண்ய முனிவர்கட்கும் இருடிகட்கும் உணர்த்தியதாக அமைந்துளது. முற்றுப் பெறவில்லை. சிதலமாயது. பிழைகள் காணப்படுகின்றன. நிதியிருக்கும் இடங்களைக் குறிப்பிடும் நூலாகும்.

R. No. 2327.

மந்திரமும் மாந்திரீகமும்.
MANTIRAMUM MĀNTIRĪKAMUM.

Palm leaf. $6\frac{3}{8} \times 1\frac{1}{4}$ inches. Foll. 1—92. Lines, 10 on a page. Tamil. Much injured. Old. Extent, 2,000 granthas. Folios are not seemed in the middle.

Complete.

This is work or mantrās by Śallikkaṇṇan. This gives the appropriate mantras, pronouncing of which gives one the thing desired. The last few folios contain the necessary Cakrās.

Beginning :

ஆதியாய் மாந்தரீகம் அந்தணர் முனிவர் தம்மில்
நீதிசேர் சல்லிக்கண் ணனென்பேர் நிலத்தினிற் சொற்றநூலை
தீதறு தமிழினாலே செப்புவேன் புனைக்கை யான்றே
சேதிசேர் செம்பொற்பாதஞ் சூட்டினேன் சென்னிமீதே. (1)
செப்பியா வெழுத்தினாலும் சிறந்தமந் திரத்தினாலும்
ஒப்புரு கருவுனாலு முரைக்கநற் கரும மெட்டுந்
தப்பில் முனிவன் வாக்கால் விதிவழக் கங்க
ளுப்பலி யறிய வேண்டி யியம்பினேன் தமிழினாலே. (2)
ஆகிய வசியமோக மந்தமா கருணைபேதம்
யோகமாம் உட்சாட ணங்கள் எட்டணை எட்டானகருமம்
வேகமா மனதை யுன்னி விளம்பிய மாந்தரீக
மாகவே யிவைக ளெல்லா மாய்த்தவாறறி வுள்ளோரே. (3)
குருமொழி தப்பா வண்ணம் கூறிய தருமவானை
யெரியுறு கோபந் தீர்த்து எவ்வுயிர்க் கிரங்குவானு
வெருவிறு பகையுமின்றி மிகமிக வாழ்வோ னாகில்
திருவரு ளாலே சல்லியும் சித்திக்கு முண்மைதானே. (4)

End :

மேவிய சல்லி வேரை வெள்ளியின் காலை தன்னில்
ஆவியாய்க் காப்புக் கட்டி ஐந்நூறு உருச் செபித்து
தேவியை நினைத்துக் கொண்டு செப்பாதோர் பலிகொடுத்து
ஏவிய கருமமெல்லா மெனக்கு நின்றுட வேணும். (93)

தினம் ஆயிரம் உரு செபித்து எட்டாம் நாள் வேரைப் பிடுங்கி பலி பூசையும் நடத்திப் பிடுங்கவும். தலைகீழாய்த் தூக்கி சசி வண்டத பிறகு உடைத்து உடைகம்பெடுத்து நெய்யில் தோய்த்திப் பதம் படுத்தி பதுனமாக வைத்துக்கொண்டு பிறகு செய்த தெல்லாம் அில்லாத்தாள் காவலாகச் சத்தி தேவியும் தொழிலுஞ் சித்திக்கும் சுவாமிக்கு இடப்பக்கமிருப்பாள், மஞ்ச ளில் திருவுருக் கொண்டு பூஜை செய்ய நினைத்த கருமம் முடியும்.

(கு-பு) —

இந்நூல் மந்திரங்கள் என்னும் பெயர்த்தாய் பற்பல காரியங்களும் சித்திக்கும் மந்திரங்களைச் செய்யும் வழிமுறைகளைக் கூறிச் செல்கிறது. இறுதியில் பெரும்பாலான ஏடுகள் அதற்குரிய சக்கரங்களை யெடுத்துக் காட்டு கின்றன. சிதலமாயது. அதன் பின்பு தம்பனம், உச்சாடணம், மாரணம் ஆகியவைபற்றிய கருத்துக்களடங்கிய நூல் ஒன்றும், இந்நூலின் பாட பேதமாக மற்றொரு நூலொன்றும் காணப்படுகின்றன. பிழைகளதிகம்.

R. No. 2328.

கௌளிக் காதல்.

GAUḶIKKĀTAL.

Palm leaf. $4\frac{7}{8} \times 1\frac{3}{8}$ inches. Foll. 1—34. Lines, 4 on a page. Tamil. Much injured. Old. Extent, 136 granthas.

Purchased in 1949-50 from A. M. Gopala Iyer, 28, Boge Road, Mambalam, Madras.

This is same as the work described under D. No. 2236.

(கு-பு)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2236-ஆம் எண்ணின் கீழ் வருணிக் கப்பட்டிருக்கிறது. அதன் குறிப்பையுங் காண்க. சிதலமாயது.

R. No. 2329.

மாட்டு வாகடம்.

MĀṬṬU VĀKAṬAM.

Palm leaf. $11\frac{1}{4} \times 1$ inches. Foll, 1—11. Lines, 7, 8 on a page. Tamil. Fair, Old. Extent, 150 granthas.

Purchased in 1949-50 from A. M. Gopala Iyer, 28, Boge Road, Mambalam, Madras.

Incomplete.

This is same as that described under D. No. 1980. This is a portion from a major work.

(கு-பு)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1980-ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப் பட்டிருக்கிறது. அதன் குறிப்பையுங் காண்க. இப்பகுதி ஒரு பெரு நூலிலிருந்து சிதைவுற்றதாகக் காணப்படுகிறது.

R. No. 2330.

பிரம்மமுனி சூத்திரம்.
BṚHMAMUNI SŪTTIRAM.

Palm leaf. $11\frac{1}{2} \times 1\frac{5}{16}$ inches Foll. 1—70. Lines, 9 on a page. Tamil. Much injured. Old. Extent, 500 granthas.

Purchased in 1949-50 from Sri A. M. Gopala Iyer, 28, Boge Road, Mambalam, Madras.

(கு-பு)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 266-ஆம் எண்ணின் கீழ், வருணிக்கப் பட்டிருக்கிறது. அதன் குறிப்பையுங் காண்க. இது மிகவும் சிதலமாகியது.

R. No. 2331.

உரோமரிஷிச் சுருக்கம் பதினாறு.
URŌMARIṢI CURUKKAM PATINĀṚU.

Palm leaf. $10\frac{1}{2} \times 1\frac{1}{4}$ inches. Foll. 1—5. Lines, 7 on a page. Tamil. Much injured. Old. Extent, 50 granthas.

Purchased in 1949-50 from Sri A. M. Gopala Iyer, 28, Boge Road, Mambalam, Madras.

Complete.

This is same as that described under R. No. 280.

(கு-பு)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 280-ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப் பட்டிருக்கிறது. அதன் குறிப்பையுங் காண்க. இது மிகவும் சிதலமாயது.

R. No. 2332.

யாகூப் வைத்தியப் பாடல்—744
YĀKŪP VAIDDIYAPPĀḌAL—744.

Palm leaf. $11\frac{1}{8} \times 1\frac{1}{8}$ inches. Foll. 111. Lines, 6 on a page. Tamil. Much injured. Old. Extent, 1,500 granthas. Folios are wanted in beginning and end.

Purchased in 1949-50 from Sri A. M. Gopala Iyer, 28, Boge Road, Mambalam, Madras.

Incomplete.

This is same as that described under R. No. 2300.

(கு-பு)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 2300-ஆம் எண்ணின்கீழ் வருணிக்கப்பட்டிருக்கிறது. சிதலமாயது. இதன் குறிப்பையுங் காண்க.

R. No. 2333.

அகத்தியர் வைத்திய ரத்தினச் சுருக்கம்.

AKATTIYAR VAIDDIYA RATTINAC CURUKKAM.

Palm leaf. 13¾ × 1¼ inches. Foll. 1—75. Lines, 6 in a page. Tamil. Slightly injured. Old. Extent, 1,500 granthas.

Purchased, in 1949-50 from Sri A. M. Gopala Iyer, 28, Boge Road, Mambalam, Madras.

Incomplete.

This is same as the work described under R. No. 941 (*a*). Folios are wanted in the middle and end.

(கு-பு)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 941 (a)-ஆம் எண்ணின்கீழ் வருணிக்கப்பட்டிருக்கிறது. சிதலமாயது. அதன் குறிப்பையுங் காண்க. இடையிலும் இறுதியிலும் ஏடுகள் தேவைப்படுகின்றன. முற்றுப்பெறவில்லை.

R. No. 2334.

யாகூப் வைத்திய சாத்திரம்—744.

YĀKŪP VAIDDIYA ŚĀTTIRAM—744.

Palm leaf. $11\frac{1}{8} \times 1\frac{1}{8}$ inches. Foll. 1—145. Lines, 6 on a page. Tamil. Much injured. Old. Extent, 3,000 granthas.

Purchased in 1949-50 from Sri A. M. Gopala Iyer, 28, Boge Road, Mambalam, Madras.

Incomplete.

This is same as that described under R. No. 2332. This contains only 502 verses. Folios are wanted in the end.

(கு-பு)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 2332-ஆம் எண்ணின்கீழ் வருணிக்கப்பட்டிருக்கிறது. அதன் குறிப்பையுங் காண்க. இதில் 502 பாட்டுக்களே யுள. முற்றுப்பெறவில்லை. சிதலமாயது.

R. No. 2335.

அகத்தியர் ரணவைத்தியம் நூறு.

AKATTIYAR RAṆAVAIDDIYAM NŪṞU.

Palm leaf. 9½ × ⅞ inches. **Foll.** 1—34. **Lines,** 5 on a page. **Tamil. Much injured. Old. Extent,** 200 granthas.

Purchased in 1949–50 from Sri A. M. Gopala Iyer, 28, Boge Road, Mambalam, Madras.

Incomplete.

This is another work on medicine written by the sage Agastiya. This describes various methods of medicines prepared from different medicinal herbs.

Beginning :

சாம்பிராணி துருசு துத்தம் சாத்தும் கருத்த குங்கிலியம்
விதித்த வகைகள்தான கழஞ்சி விளங்கும் பச்சை வெட்டுடனே
அழுந்த பலமுந்தா ளென்று அறிவாக கலவ மீதிட்டுத்
திருந்தக் காய்ச்சி யெள்ளெண்ணெய்க் குழம்பா யரைத்துத் தண்
ணிவிடே. (1)

விட்டே கழுவி மேல் வழித்து வேனருஞ் சீலை தனிலூட்டி
திட்டே றெணங்கள் சிறுகிதனைத் தீரா ரோகந்தனைத் தீரும்
....டா அசுவம் புறச்சிங்கிக் கல்லு பறங்கிக் கால்புத்தும்
மட்டார் குழலின் மடமா..கு மாண்டு விழுந்து போய்விடுமே. (2)

போமே மருந்து வெள்ளைப்பத்து போ......ந்துந் தாரங்
காசொன்று
ஆமே துருசு யீரொன்று அறிவாஞ் சுனன்முன் மூவிரெண்டு
தாமே சிவந்த குங்குலியம் தரிக்க யிருநா ளுடன்கூட்டி
மாமே யரைப்பா ரெள்ளெண்ணெய் மதிக்கத் தண்ணீர் தனில்
கழுவே. (3)

End :

இருவி லிங்கம் அரிதாரம் இதமா குக்கில் கரும்பவளம்
குருவாம்பினி பெருங்காயம் கொடிதாய் அரைக்குந் திருகுகள்ளி
அருவா புள....த்திரமும் ஆண்கட்டி யரைப்பூ
குருவாஞ் சூலை பதினெட்டுங் கொண்டு......தாமே. (90)

(கு-பு)—

"அகத்தியர் ரணவைத்தியம் நூறு" என்னும் பெயர்த்தாய்ப் பலவகைப் பட்ட ரணவியாதிகட்கும் மூலிகைவகைகளாகிய வைத்திய முறைகளைக் கூறிச் செல்கிறது. மிகவும் சிதலமாயது. முற்றுப்பெறவில்லை. தலையேட்டில் அகத்தியர் செய்ததாக வுளது.

R. Nos. 2336 and 2337 (one codex).

Palm leaf. 11⅛ × 1⅜ inches. Foll. 1—50. Lines, 6, 7 on a page. Tamil. Much injured. Old. Extent, 1,350 granthas.

Purchased in 1949-50 from Sri A M. Gopala Iyer, 28, Boge Road, Mambalam, Madras.

R. No. 2336.

உரோமரிஷிவாதம் ஐந்நூறு.

UROMARIṢI VĀTAM AINNŪṞU.

Foll. 1—26. Extent, 700 granthas.

Incomplete.

This is same as that described under R. No. 258 (b).

(கு-பு)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 2581 (b)-ஆம் எண்ணின்கீழ் வருணிக்கப் பட்டிருக்கிறது. அதன் குறிப்பையுங் காண்க. 126 பாட்டுக்களே யுள. முற்றுப்பெறவில்லை. சிதலமாயது.

R. No. 2337.

அகத்தியர் வைத்தியம் இருநூறு.

AKATTIYAR VAIDDIYAM IRUNŪṞU.

Foll. 27—52. Extent, 650 granthas.

Incomplete.

This is same as that described under R. No. 275 (c).

(கு-பு)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 275 (c)-ஆம் எண்ணின்கீழ் வருணிக்கப் பட்டுளது. அதன் குறிப்பையுங் காண்க. முற்றுப்பெறவில்லை.